விலை: 30.00
பக்கங்கள் : 16+XVI
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 தை 26 ஞாயிற்றுக்கிழமை (09.02.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 52

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## இலங்கையில் தமிழ் மக்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கும்

### மகிந்தவை சந்தித்தபின் பிரதமர் மோடி அறிவிப்பு

(டில்லி)

ஒன்றுபட்ட இலங்கையில் தமிழ் மக்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த பின்னர் இந்திய பிரதமர் மோடி அறிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் அரசாங்கத்தின் நிலைத்தன்மை, பாதுகாப்பு, வளர்ச்சி ஆகிய நலன்களின் மீது இந்தியா அக்கறை கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் ஒட்டுமொத்த இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் நலன்களையும் இந்தியா கருத் 15

## முல்லைத்தீவில் குண்டுவெடிப்பு

### ஒருவர் படுகாயம்

### தாய், மகன் பொலிஸாரால் கைது 12

# தமிழ் மக்களுடைய எதிர்பார்ப்பை இலங்கை நிறைவேற்ற வேண்டும்

### மகிந்தவிடம் இடித்துரைத்தார் மோடி

(டில்லி)

நீண்டகாலமாக நிலுவையில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். மேலும் தமிழ் மக்களுக்கான எதிர்பார்ப்பை இலங்கை நிறைவேற்ற வேண்டும் என பிரதமர் மகிந்தவிடம் நேரில் இடித்துரைத்தார் இந்திய பிரதமர் மோடி. (15ஆம் பக்கம் பார்க்க)



தொல் பொருள் திணைக்களத்தை

## பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவர நடவடிக்கை

### இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா



(கொழும்பு)

தொல்பொருள் ஆய்வுத்திணைக்களத்தை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வருவது அவசியம் என்று இராஜாங்க அமைச் 15

## தமிழ் மக்கள் தேசிய கூட்டணி உடன்பாடு இன்று

### விக்னேஸ்வரன் பகிரங்க அழைப்பு

(யாழ்ப்பாணம்)


தமிழ் மக்கள் தேசிய கூட்டணியென்ற பெயரில் இன்று கூட்டணி உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளதாக தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று அறிவித்தார்.

கட்சியின் மத்தியகுழு கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் கருத்து தெரிவித்த 15

## தமிழர் - சிங்களவர் சேர்ந்து வாழ விரும்புகின்றார்கள் எனில்

### வடக்கு கிழக்கில் பொது வாக்கெடுப்பு நடத்த கோட்டா அரசு தயாராகவுள்ளதா?

### பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன்



(கிளிநொச்சி)

தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இந்தநாட்டில் சேர்ந்து வாழ விரும்புகின்றார்களா என்று வடக்கு கிழக்குமக்களிடம் ஒரு பொதுசன வாக்கெடுப்பைநடத்த கோட்டாபய அரசு முன்வருமாக இருந்தால் அதனை எதிர்கொள்ள எமது மக்கள் தயாராகவுள்ளார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி பன்னங்கண்டியில் நடைபெற்ற தைப்பூச நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய அரசாங்கம் பல இலட்சக்கணக்கான மக்களை கொன்றுகுவித்தும் காணாமலாக்கியும் உள்ள இந்த அரசாங்கத்தின் அமைச்சரான ஹெகலிய ரம்புக்வெல, பிரபாகரன் ஆயுதத்தால் அடையமுடியாத விட 15

## கோட்டா, மகிந்தவின் படங்களை பயன்படுத்தக்கூடாது!

### சுதந்திரக் கட்சிக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர்களின் புகைப்படங்களை பயன்படுத்தி தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட வேண்டாம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் 15

## இணுவில் கந்தசுவாமி ஆலய தைப்பூச மஞ்சத்திருவிழா நேற்று நடைபெற்றது



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## திருமணக் கார் வாடகைக்கு

புதிய கைபிற் கார் 8000 மட்டும்.

**077 833 1414**
**077 228 3675**

(2094)

## சொர்க்கம் திருமண சேவை

பிரான்ஸ் பிரஜாவுரிமை பெற்ற 30 வயதுடைய மணமகனுக்கு இலங்கையில் மணமகளைத் தேடுகிறோம். கனடாவில் வாழும் 36 வயதுடைய லக்கினத்தில் செவ்வாய் மணமகனுக்கு இலங்கையில் மணமகளைத் தேடுகின்றோம் இலங்கையில் வாழும் 32 வயதுடைய 8ல் செவ்வாய் அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணிபுரியும் மணமகளுக்கு தகுந்த மணமகனை இலங்கையில் தேடுகிறோம். கனடாவில் வாழும் 39 வயதுடைய மணமகனுக்கு இலங்கையில் மணமகளைத் தேடுகிறோம்.

தொடர்புகளுக்கு:

**0014166661855, 0014377728129**
**0776505097, 0762364188**
www.sorkham.com

(2090)

## விற்பனைக்கு

தாய்வான், கொங்ஹொங், சீனா, மலேசியா ஆகிய நாடுகளில் பாவனைக்கு உட்படுத்தப்பட்டு இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 3 அடி தொடக்கம் 8 அடி வரை நீளமுள்ள

**Lathe Machine** (லேத் மெசின்) கள்

விற்பனைக்குண்டு. இவற்றை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

(2087)

தொடர்புகளுக்கு:- **0716486814**
**நாகராஜா இலட்சுமணதாசன்**

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு**

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்**

(2092)

**077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

## விற்பனைக்கு

1. $2\frac{1}{2}$ பரப்பு காணி - hospital road இல்
2. நல்லூர் cross road இல் 11 பரப்பு காணி
3. நல்லூர் temple road இல் 2 பரப்பு காணி
4. நல்லூர் temple road இல் 2 பரப்புடன் வீடு
5. நல்லூர் மருதடி road இல் 2 பரப்புடன் வீடு
6. தட்டாதெருவில் $1\frac{1}{4}$ பரப்புடன் வீடு
7. திருநெல்வேலி மணல்தரை road இல் 2 பரப்புடன் மாடி வீடு
8. சுண்டுக்குளியில் $1\frac{1}{4}$ பரப்பு காணியுடன் மாடி வீடு
9. கொழும்புத்துறையில் $1\frac{1}{4}$ பரப்பு காணியுடன் மாடி வீடு
10. clock tower road இல் இருந்து 100m இல் புதிய வீடு $1\frac{1}{2}$ பரப்பு
11. நல்லூர் - சிவன் அம்மன் வீதி - பருவக்குளம் $1\frac{1}{2}$ பரப்பு காணி
12. மீசாலையில் $2\frac{1}{2}$ பரப்பு காணி
13. நல்லூர் temple road இல் மாடி வீடு 1 பரப்பு
14. house luxary 4 attach bathroom

(2095)

தொடர்புகளுக்கு
**077 221 6683**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## வேலையாள் தேவை

**சொர்க்கம்** திருமண சேவை அலுவலகத்தில் கடமையாற்று வதற்கு கணணி அறிவுள்ள பெண் பணியாளர் தேவை.

தொடர்புகளுக்கு:-
**076 236 4188, 077 650 5097**
**0014166661855, 0014377728129**

(2690)

## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கி வரும் சைவ உணவகம் ஒன்றுக்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை.

1. **உணவு பரிமாறுபவர்கள் (சப்பிளையர்ஸ்)**
2. **காசாளர்**
3. **பில் கிளார்க்**
4. **சுத்திகரிப்பாளர்**
5. **களஞ்சிய பொறுப்பாளர்**
6. **கடை வேலையுடன் சேர்த்து வாகனம் ஓட்டுபவர்**
7. **குசினி வேலையாட்கள்**

தங்கி நிற்போர் விரும்பத்தக்கது. 3 வேளை உணவு, தங்குமிட வசதி என்பன இலவசமாக வழங்கப்படும். ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(2093)

தொடர்புகளுக்கு:-
**0777917753, 0776084319**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலைக்கென 8 பரப்புக் காணியினைத் தந்துதவிய மதிப்புக்குரிய "தருமப்பிரபு"

**உயர்திரு. இராசையா குவேந்திரநாதன் இரஞ்சினிதேவி**

தம்பதியரின் கௌரவிப்பு விழாவாகிய இந்நன்நாளில் நாமும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(2089) **பாடசாலைச் சமூகத்தினர், யா/கோண்டாவில் சி.சி.த.க பாடசாலை**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வசதி குறைந்த மக்களுக்காக நூறு வீட்டுத் திட்டங்களை வழங்கி, கல்வி மற்றும் சமூக சேவைகளை அர்ப்பணிப்பாக தொடர்ந்தும் ஆற்றி வரும்

**உயர்திரு. இராசையா குவேந்திரநாதன்**

**(உரிமையாளர் - ராஜா பிளாஷா, கோண்டாவில்)**

அன்னாரின் சேவை மேன்மேலும் தொடர வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:
**மக்கள் நலன் பேணும் அமைப்பு** கோண்டாவில், **பொற்பதி அறிவாலயம்** கொக்குவில், KTC **கல்வி நிலையம்** கோண்டாவில், **விக்கினேஸ்வரா கல்வி நிலையம்**, கொக்குவில்

(C-9190)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. இராசையா குவேந்திரநாதன்**

கோண்டாவில் மண்ணின் மைந்தன், கொடை வள்ளல் "செங்கைப் புரவோன்" **இராசையா குவேந்திரநாதன்** அவர்கள் வசதி அற்ற மக்களுக்கென கல்விக்காக பணம், பொருள், காணி, கட்டிடம் என வழங்கி வருவதுடன் வீடற்றவர்களுக்கு 100 வீடுகள் கட்டி மக்களை குடியமர்த்தி அழகுபார்த்த பாரி வள்ளலின் சேவை மேலும் மேலும் தொடர பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: **கதிரவேலு சத்தியரூபன்**
**ஜயனார் கோ[illegible]டி, புன்னாலைக்கட்டுவன் வடக்கு.**

(C-9191)

## 24 மணித்தியாலத்தில் 81 பேர் பலி

# உலகை உலுக்கும் கொரோனா

# பலி எண்ணிக்கை 724 ஆக உயர்வு

## 34 ஆயிரம் பேர் பாதிப்பு



(பீஜிங்)

**உலகை அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸ் தாக்கத்தால் சீனாவின் ஹூபெய் மாகாணத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 81 பேர் பலியானதுடன் இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 724 ஆக அதிகரித்தது. இதேவேளை, கொரோனா வைரஸ் தாக்கத்தால் இதுவரை உலகளாவிய ரீதியில் சுமார் 34 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

சீனாவின் ஹூபெய் மாகாண தலைநகர் வுஹானில் கடந்த டிசெம்பர் மாத இறுதியில் பரவிய கொரோனா வைரஸ் தற்போது சீனா உட்பட உலக நாடு முழுவதும் அசுர வேகத்தில் பரவி வருகிறது.

சுமார் 25 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு தற்போது கொரோனா வைரஸ் பரவியுள்ளது. இதனால் நாளுக்கு நாள் உயிரிழப்புகளும் அதிகரித்து வருகின்றன.

சீனாவில் பெரும் பாதிப்பை கொரோனா வைரஸ் ஏற்படுத்தியுள்ளது. இதனால் சீனாவின் வைத்தியசாலைகள் எங்கும் கொரோனா நோயாளிகளால் நிரம்பி வழிகின்றன.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்ற தடுப்பு மருந்துகளை கண்டறியும் சோதனைகள் தீவிரமாக நடந்து வரும் நிலையில், வுஹான் உள்ளிட்ட சீன நகரங்கள் முற்றிலுமாக மூடப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், சீனாவின் ஹூபெய் மாகாணத்தில் கடந்த 24 மணி நேரத்தில் மாத்திரம் 81 பேர் உயிரிழந்தனர்.

இதனால் கொரோனா வைரஸ் தாக்கியதில் சீனாவில் பலியானவர்களின் எண்ணிக்கை 699 ஆக உயர்ந்துள்ளதாக சீன மாகாண சுகாதார ஆணையம் அறிவித்துள்ளது. அதேவேளை, உலக அளவில் இந்த நோய்க்கு மொத்தம் 724 பேர் உயிரிழந்துள்ளனர்.

புதிய தரவுப்படி கொரோனா வைரஸ் பாதிப்புக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 34,878 ஆகவும், இறப்பு எண்ணிக்கை 724 ஆகவும், குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2085 ஆகவும் கணிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை சீனாவின் பிரதான நிலப்பகுதிக்கு வெளியே 27 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் சுமார் 332 கொரோனா வைரஸ் நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர். அத்துடன் ஹொங்கொங், பிலிப்பைன்ஸில் இரண்டு இறப்புகள் பதிவாகியுள்ளன.

2002-2003 ஆம் ஆண்டில் சார்ஸ் காரணமாக உலகளவில் பதிவான 774 இறப்பை கொரோனா வைரஸ் மிஞ்சியுள்ளதாக சுகாதார வல்லுநர்கள் எச்சரித்தனர்.

அத்துடன் சீனா முழுவதும், குணமடைந்தவர்கள் 2,050 பேரையும், இறந்தவர்களையும் தவிர்த்து, இனங்காணப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை 31,774 ஆக உள்ளது.

சீனாவில் முகக்கவசம் பற்றாக்குறை நிலவுகின்றமை நோய்த் தொற்று மேலும் அதிகரிக்க முக்கிய காரணமாக அமையும் என சுகாதார வல்லுநர்கள் கவலை வெளியிட்டனர். (இ-7)

## வேலைவாய்ப்புத் திணைக்கள ஏற்பாட்டில் யாழில் நேற்று மாபெரும் தொழிற்சந்தை





(யாழ்ப்பாணம்)

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம், யாழ். மாவட்டச் செயலகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த மாபெரும் தொழிற் சந்தை யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை இடம் பெற்றுள்ளது.

இதில் தனியார் மற்றும் அரச நிறுவனங்களில் தொழிலுக்கான ஆட்சேர்ப்பு, தொழிற் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு, தொழில் வழிகாட்டல், தொழிலுக்கான திறவுகோல், சுயதொழில் வழிகாட்டல், தொழில் முனைவோர் வழிகாட்டல் போன்ற சேவைகள் இடம் பெற்றன.

அத்துடன், தொழில் தேடுநர்களை வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பதிவு செய்யும் செயற்பாடும் இதன் போது இடம்பெற்றது. (இ-7)

## கண்டி வீதியில் கோர விபத்து; நான்கு இளைஞர்கள் உயிரிழப்பு

(கண்டி)

கண்டி - திகன வீதியில் மெனிக்கின்ன பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற கோர விபத்தில் நான்கு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

குறித்த நான்கு இளைஞர்களும் பயணித்த கப் வாகனம் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த லொறியொன்றுடன் மோதியதனாலேயே குறித்த விபத்து இடம்பெற்றது.

17 மற்றும் 19 வயதிற் கிடைப்பட்ட திருகோணமலை, மகியங்கனை, உகன ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களே இந்த விபத்தில் உயிரிழந்தனர்.

இந் நிலையில் விபத்து தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

## ஜெய்சங்கர்-மகிந்த சந்திப்பு



(டில்லி)

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை நேற்று டில்லியில் சந்தித்து கலந்துரையாடினார். (இ-7)

## வெளிநாட்டு துப்பாக்கியுடன் இருவர் கைது

(தலங்கம)

தலங்கம பகுதியில் அனுமதிப் பத்திரமன்றி வைத்திருந்த வெளிநாட்டுத் துப்பாக்கி மற்றும் 2000 சட்டவிரோத சிகரெட்டுகளுடன் இருவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டனர்.

தலங்கம - றொபட் குணவர்த்தன மாவத்தையில் நேற்று முன்தினம் பிற்பகல் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமையவே இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது. (இ-7)

# முத்தரப்பு பெண்கள் ரி20 கிரிக்கெட்டில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தியது இந்தியா



அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் பெண்களுக்கான முத்தரப்பு ரி20 கிரிக்கெட் தொடரில் அவுஸ்திரேலியாவை 7 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது.

இந்தியா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் மோதும் பெண்களுக்கான முத்தரப்பு ரி20 கிரிக்கெட் தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது.

நேற்றைய ஆட்டத்தில் இந்திய பெண்கள் அணி அவுஸ்திரேலியாவை எதிர் கொண்டது. மெல்பேர்னில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இந்தியா டாஸ் வென்று பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, அவுஸ்திரேலியா முதலில் பேட்டிங் செய்தது.

அந்த அணியின் ஆஷ்லே கார்ட்னர் அதிரடியாக ஆடி 57 பந்தில் 93 ரன்கள் எடுத்தார். கேப்டன் மேக் லேன்னிங் 37 ரன்கள் எடுத்தார்.

மற்ற வீராங்கனைகள் சொற்ப ரன்களே அடிக்க அவுஸ்திரேலியா 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 173 ரன்கள் சேர்த்தது.

அதன்பின், 174 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய பெண்கள் அணி களம் இறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்கள் ஷபாலி வர்மா, ஸ்மிருதி மந்தனா சிறப்பான தொடக்கம் கொடுத்தனர். இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 85 ரன்கள் சேர்த்தது.

ஸ்மிருதி மந்தனா 55 ரன்களும், ஷபாலி வர்மா 49 ரன்களும், ஜெமிமா ரோட்ரிக்ஸ் 30 ரன்னும் அவுட்டாகினர்.

அடுத்து வந்த கேப்டன் ஹர்மன்பிரீத் கவுரும், தீப்தி ஷர்மாவும் அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர். இறுதியில், இந்திய அணி 19.4 ஓவரில் 177 ரன்களை எடுத்து வெற்றி பெற்றது.

இந்த வெற்றி மூலம் இந்தியா 2 வெற்றி, 2 தோல்வி என மொத்தம் 4 புள்ளிகள் பெற்று இரண்டாம் இடத்தில் உள்ளது. இங்கிலாந்து இரண்டு வெற்றிகளுடன் 4 புள்ளிகள் பெற்று முதல் இடத்தில் உள்ளது. அவுஸ்திரேலியா 2 புள்ளிகள் பெற்று கடைசி இடத்தில் உள்ளது.



பிக்பாஷ் ரி 20 லீக் சுற்றுத் தொடர்

# மெல்பேர்ன் ஸ்டார்ஸை வீழ்த்தி சம்பியன் வென்றது சிட்னி சிக்ஸர்ஸ்



சிட்னியில் நடந்த பிக் பாஷ் டி 20 லீக் போட்டியின் இறுதிப் போட்டியில் மெல்போர்ன் ஸ்டார்ஸ் அணியை வீழ்த்தி இரண்டாவது முறையாக சம்பியன் பட்டம் வென்றது சிட்னி சிக்சர்ஸ் அணி.

அவுஸ்திரேலியாவின் சிட்னியில் பிக் பாஷ் ரி 20 லீக் தொடரின் இறுதிப்போட்டி நேற்று நடைபெற்றது. இதில் சிட்னி சிக்சர்ஸ் மற்றும் மெல்போர்ன் ஸ்டார்ஸ் அணிகள் மோதின.

டாஸ் வென்ற மெல்போர்ன் ஸ்டார்ஸ் அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. மழை காரணமாக போட்டி 12 ஓவராக குறைக்கப்பட்டது.

அதன்படி, சிட்னி சிக்சர்ஸ் அணி முதலில் களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் ஜோஷ் பிலிப் சிறப்பாக ஆடி அரைச் சதமடித்தார். அவர் 52 ரன் எடுத்து அவுட்டானார். ஜோர்டான் சில்க் 27 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இறுதியில், சிட்னி சிக்சர்ஸ் அணி 12 ஓவர் முடிவில் 5 விக்கெட்டுக்கு 116 ரன்கள் எடுத்தது.

இதையடுத்து, 117 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மெல்போர்ன் ஸ்டார்ஸ் ஆடியது. அந்த அணியின் நிக்லார் கின் 38 ரன்னும், நாதன் க்வுல்டர் நைல் 19 ரன்னும் எடுத்தனர்.

இறுதியில், மெல்போர்ன் ஸ்டார்ஸ் 12 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 97 ரன்களை மட்டுமே எடுத்தது. இதன்மூலம் 19 ரன் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

பிக் பாஷ் ரி20 லீக் தொடரின் சம்பியன் பட்டத்தை சிட்னி சிக்சர்ஸ் அணி இரண்டாவது முறையாக கைப்பற்றி அசத்தியுள்ளது.

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

உலக சைவத் தமிழர்களின் தாயகம் திருவண்ணாமலை
இருக்கும் இடம் தேடி அன்னதானம் வழங்கும் நிகழ்வு 12/02/2020 கிரிவலம் 09/02/2020

அல்லல் தீர்க்கும் அண்ணாமலை

பல்லில் ஓடுகை யேந்திப்பல இலம்
ஒல்லை சென்று உணங்கல்கவர் வார் அவர்
அல்லல் தீர்க்கும் அண்ணாமலை கைதொழ
நல்ல வாயின நம்மை அடையுமே

அப்பர்



நிர்ப்பாக்கியர்

திருவாசகமானது சிவன்துதியாயும் சிவஞான நிதியாயும் சிவஹந்த அருட் பொலிவினதாயும் இருத்தலால் இதனைப் பெரியார் வேதம் என்று சொல்லுவர். இது எம்முடைய மொழியிலே தோன்றியமையால் வடமொழியிலுள்ள வேதத்திலும் சிறந்ததாயிற்று. இச் சிறப்பை சிவப்பிரகாச சுவாமிகள் விளங்கிழை பகிர்ந்த எனத் தொடங்கும் கவியில் விளக்கி அருளினர்.

இத் திருவாசகம் பக்திச்சுவை முற்றியிருத்தலால் தேனென்றும் சிவபிரானது திருவருள் நிறைந்திருப்பதால் தளை நீக்கி அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியது. ஆன்றோர் பாழ அருளினர்கள் இது ஸ்துதி நூலென்று பார்க்கவே புலப்படும். ஆயினும் பெரியோர்கள் இது ஞான நூலெனக் கண்டு இதிலுள்ள ஒவ்வொரு பதிகத்திலும் பேசப்படும் பொருளை அதனதன் தலைப்பில் குறித்து காட்டினர். சுவையிலும் பயனிலும் பொருளிலும் ஒப்புயர்வற்ற இத் திருவாசகத்தைக் கல்லாத தமிழ்ச் சைவர்கள் மறுமை நலத்தை இழப்பதுமன்றி இம்மையில் அனுபவிக்கத்தக்க இன்பங்களுட் பெரும் பகுதியை அனுபவியாமலும் அறியாமலும் நிர்ப்பாக்கியராகின்றனர்.

ஸ்ரீ மகா ருத்ரயாகம்

யாழ்ப்பாணம் நல்லூர் சிவன் கோவிலில்
07.02.2020 - 10.02.2020 மதியம் வரை
நடைபெறுகின்ற மேற்படி யாகத்தில் மக்கள் கலந்து
கொண்டு இறையருள் பெற்று வையத்துள்
வாழ்வாங்கு வாழ உண்ணாமலை சமேத
அண்ணாமலையானை வேண்டுகிறோம்

அனுசரணை:–
ராஜா கிறீம் ஹவுஸ், யாழ்ப்பாணம்.

செயலாளர், சைவப்பிரகாசப் பேரவை,
யாழ்ப்பாணம்.

0773783316

# வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் குறித்து வெளிப்படையான விசாரணைகள் வேண்டும்

## முன்னிலை சோசலிசக் கட்சி வலியுறுத்து

(கொழும்பு)

காணாமல் போனவர்களுக்கு மரணச் சான்றிதழ்களை வழங்கி மனிதநேய மரபு நெறிகளுக்கு எதிரான செயல்களை அரசியல் குற்ற வரலாற்றில் புதைத்து விடுவதற்குப் பதிலாக அனைத்து காணாமலாக்கல்கள் தொடர்பாகவும் வெளிப்படையாக விசாரணை நடத்தி அவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய உண்மையை சமூகத்துக்கு வெளிப்படுத்துமாறு முன்னிலை சோசலிசக் கட்சி காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்திடம் கேட்டுக் கொண்டது.

அத்தோடு பொது மக்களின் வரிப்பணத்தால் நடத்திச் செல்லப்படும் நிறுவனம் என்ற வகையில் மக்களுக்கு நீதி பெற்றுக் கொடுக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு பெரும் பொறுப்பு உண்டு என்பதை நினைவூட்ட விரும்புவதாகவும் அந்தக் கட்சி தெரிவித்தது.

கொழும்பு 7 இல் அமைந்துள்ள காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தில் இவ்விடயத்தை வலியுறுத்தி முன்னிலை சோசலிசக் கட்சி கையளித்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கடந்த காலங்களில் விசேடமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் பொதுவாக முழு நாட்டிலும் ஆட்களை கடத்திச் செல்வதும் காணாமல் ஆக்கப்படுவதும் போன்ற சம்பவங்கள் நடைபெற்றமை குறித்து விசேடமாக சுட்டிக்காட்ட வேண்டியதில்லை. அவை அனைவரும் அறிந்த விடயமாகும்.

யுத்தத்தின் பின்னர் நியமிக்கப்பட்ட மக்ஸ்வெல் பரணகம ஆணையம் சுமார் 25, ஆயிரம் காணாமலாக்கல்களை கண்டறிந்துள்ளதோடு காணாமல் போனோர் பற்றிய நிறுவனமும் அவ்வாறான பல சம்பவங்கள் தொடர்பில் ஆய்வறிக்கையைச் சமர்ப்பித்தது.

வலிந்து காணாமலாக்கியமை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாட்டுக்குழுவின் அறிக்கைக்கு ஏற்ப சுமார் 16, ஆயிரம் பேர் காணாமல் போயுள்ளதாக கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் மதிப்பீடானது குறைந்த பட்சம் 20, ஆயிரம் காணாமலாக்கல்கள் இலங்கையில் இடம்பெற்றுள்ளதாகக் கூறுகிறது.

காணாமலாக்கல் தொடர்பாக அரசாங்கத்துக்கு 18, 476 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எவ்வாறாயினும் பத்தாயிரக்கணக்கானோர் கடத்தப்பட்டு வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள்.

சில காணாமலாக்கல்கள் யுத்த சூழ்நிலையிலும், யுத்த களத்திலும் நடந்துள்ளன. மேலும் அநேக காணாமலாக்கலுக்கு யுத்தத்தோடு தொடர்பு கிடையாது.

உதாரணமாக கொழும்பு மாளிகாவத்தை, மட்டக்குளி ஆகிய பகுதிகளை அண்மித்து இளைஞர்களை காணாமலாக்கியமை, ஊடகவியலாளர்களும் சமூக செயற்பாட்டாளர்களும் காணாமலாக்கப்பட்டமை மற்றும் யுத்த காலத்தில் பாதுகாப்புப் பிரிவுகளிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் அல்லது பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு புனர்வாழ்வளிப்பதற்காக ஒப்படைக்கப்பட்டவர்கள் காணாமலாக்கப்பட்டமை போன்றவற்றை குறிப்பிட முடியும்.

முன்னிலை சோசலிச கட்சியின் இரண்டு செயற்பாட்டாளர்களான லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் 2011 டிசெம்பர் 9 ஆம் திகதி யாழ்ப்பாணம் அதி பாதுகாப்பு வலயத்திலிருந்து தான் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டதும், யுத்தம் முடிவுக்கு வந்து இரு வருடங்கள் கடந்த நிலையில் காணாமலாக்கப்பட்டதும், இந்த அனைத்து காணாமலாக்கல்கள் தொடர்பில் நீதி வழங்கப்பட வேண்டும் என்பதுடன் விசாரணை நடத்தி அவர்கள் தொடர்பான உண்மையை வெளிப்படுத்த வேண்டும் என அக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஐ.தே.கவின் தலைமைப் பிரச்சினைக்கு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் தீர்வைப் பெற வேண்டியது கட்டாயம்

## பொன்சேகா திட்டவட்டம்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவப் பிரச்சினைக்கு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் தீர்வினைப் பெற்றுக் கொள்ளாவிட்டால், சாதகமான பெறுபேற்றை எதிர்பார்க்க முடியாது என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நான் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கிய போதிலிருந்து, பிழையான வழியில் செல்லக் கூடாது என்பதில் தெளிவாக இருந்தேன்.

ஜனநாயக ரீதியாகத்தான் நாம் செயற்பட்டோம். இருப்பினும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரை நான் செயற்குழுவின்போது விமர்சித்தேன் என்ற காரணத்தால்தான் செயற்குழு உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டேன்.

அதாவது, புதிய தலைமைத்துவமொன்றை ஐக்கிய தேசியக் கட்சியினர் விரும்புகிறார்கள் என்று கூறிய காரணத்திற்காகத்தான் நான் நீக்கப்பட்டேன். இதனைத் தவிர நான் வேறு எதனையும் செய்யவில்லை. ஜனாதிபதி கோட்டாவுடன் இணைந்து செயற்பட நாம் தயாரில்லை.

இந்த நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் சிலர், ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படத் தயார் என்று கூறுகிறார்கள்.

அப்படியானால், அவர்கள் அனைவரும் சென்று மொட்டுக் கட்சியுடன் இணைந்துகொள்ளலாம். ஆனால், நாம் இதற்குத் தயாரில்லை.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிரச்சினைகள் உள்ளமை உண்மைதான். எனினும், பெரும்பான்மையான உறுப்பினர்கள் சஜித் பிரேமதாஸவுக்குத்தான் ஆதரவளிக்கிறார்கள்.

எனவே, நாமும் அவருக்கு சார்பாகத்தான் செயற்பட வேண்டியுள்ளது. இந்தப் பிரச்சினைக்கு பொதுத் தேர்தலுக்கு முன்னர் தீர்வினைக் காணவேண்டும்.

அப்படியில்லை என்றால், பொதுத் தேர்தலிலும் சிறப்பான பெறுபேற்றை பெற்றுக்கொள்ள முடியாது.

நான் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருடன் எந்தக் காரணம் கொண்டும் முரண்பட்டது கிடையாது. எனக்கும் அவருக்கும் தனிப்பட்ட ரீதியாக பிரச்சினை கூட இல்லை.

இருப்பினும், அவரது செயற்பாடுகள் தவறு என்ற காரணத்தால்தான் தற்போது எதிர்ப்பை வெளியிடுகின்றேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இராசி பலன்

**மீனம்**



பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் ஆதரவு பெருகும்.

**மேடம்**



மகிழ்ச்சி தரும் பணிகள் இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் அதிகபிரயாசை காட்டுவீர்கள், குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் கூடும், போசனசுக முண்டு.

**இடபம்**



உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவார், சுபகாரியங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**மிதுனம்**



உங்களின் வார்த்தைகளை பலரும் கேட்டு நடப்பர், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பெரிய மனிதர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக்கொள்வது நல்லது.

**கும்பம்**



சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், பகைவர்கள் விலகுவர், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், போசன சுகமுண்டு

இராசி பலன்

கிரகநிலை

| சுக் | | | ராகு |
|---|---|---|---|
| புத | | | சந் |
| சூரி | | | |
| சனி, கேதுசெவ் குரு | | | |

சந்திராஷ்டமம்

பூராடம், உத்தராடம்

09.02.2020

தை 26, ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு

பூரணை பிற்பகல் 1.50மணிவரை

ஆயிலியம் முன்னிரவு 8.52 மணிவரை

சுபநேரம் 9.35-11.05 மணிவரை

இராகுகாலம் 5.05-6.35மணிவரை

பூரணை விரதம்.

தான தருமத்திற்கு அளவில்லை.

வளவன்

**கடகம்**



மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு உங்களின் தகுதியை உயர்த்தும், போசன நன்மையுண்டு, பகைவர்கள் விலகுவர்.

**மகரம்**



கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், போசண சுகமுண்டு, களஸ்திர வழியில் நன்மையுண்டு.

**சிம்மம்**



வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும்.

**தனுசு**



கௌரவக் குறைவான சில சம்பவங்கள் இடம் பெறலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், தேக நலனில் கவனம் தேவை, பணப்பற்றாக்குறை ஏற்படலாம்.

**விருச்சிகம்**



ரோக பயமுண்டு, தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**துலாம்**



அந்நியர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, துாரதேசத்திலிருந்து மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**கன்னி**



பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலம் உண்டு.

# வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு ஆளுநரிடம் அனுமதி கோரல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையினர் பட்ஜெட் ஊடான வறுமை ஒழிப்பு திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கியதுடன் திட்டங்களை அனுமதிக்காக ஆளுநரிடம் அனுப்பி வைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பட்ஜெட் ஊடாக உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் நிதியில் வறுமை ஒழிப்பிற்கு நிதி ஒதுக்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில் சாவகச்சேரி பிரதேச சபையில் அண்மையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போது பட்ஜெட் ஊடான வறுமை ஒழிப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிக்கையில்,

ஒரு சில உறுப்பினர்கள் பட்ஜெட் ஊடாக வறுமை ஒழிப்பு திட்டத்தை முன்னெடுப்பதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளனர். அவ்வாறான திட்டங்களுக்கு ஆளுநரின் அனுமதி பெறப்பட வேண்டும்.

அத்திட்டங்களுக்கான பயனாளிகள் பட்டியலை கிராம' உத்தியோகத்தர் உறுதிப்படுத்தி, பிரதேச செயலர் மேலொப்பம் இட்ட பின்னர் பிரதேச சபையில் சமர்ப்பிக்க வேண்டும். பயனாளிகள் பட்டியல் மற்றும் வறுமை ஒழிப்பின் தன்மை உள்ளிட்ட தரவுகளை சரியான முறையில் ஒப்படைக்காமல் விட்டால் அனுமதி கிடைப்பதில் தாமதம் ஏற்படும் எனத் தெரிவித்திருந்தார்.

இதேவேளை கடந்த காலங்களில் பெரும்பாலான சபை உறுப்பினர்கள் பட்ஜெட் ஊடாக வறுமை ஒழிப்பு திட்டங்களை முன்னெடுக்க விருப்பம் தெரிவித்த போதிலும் வறுமை ஒழிப்பு திட்டத்திற்கான அனுமதி பெறல் மற்றும் நிதி விடுவிப்பு ஆகிய சிக்கல்களைக் கருத்திற் கொண்டு பட்ஜெட்டில் வறுமை ஒழிப்பு திட்டங்களை தவிர்த்து வந்தனர்.

இருப்பினும் ஒரு சில உறுப்பினர்கள் தமது ஒதுக்கீட்டின் ஊடாக வறுமை ஒழிப்பை மேற்கொள்வதில் விடாப்பிடியாக இருந்து வந்தனர். அவர்களது பயனாளிகள் பட்டியலே தற்போது ஆளுநரிடம் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளது.

பெரும்பாலான சபைகள் பட்ஜெட் ஊடாக வறுமை ஒழிப்பு திட்டங்களை மேற்கொள்ள அனுமதிக்காத நிலையில் ஒரு சில சபைகள் பட்ஜெட் ஊடாக வறுமை ஒழிப்பு திட்டங்களை மேற்கொள்ள அதிக நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# உதவித் திட்ட முன்மொழிவுகள் பட்ஜெட்டில் உள்ளடக்கப்படவில்லை

## உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை பட்ஜெட்டில் வாழ்வாதார உதவித் திட்டங்களை உள்ளடக்க அனுமதி அளிக்கவில்லை என சபை உறுப்பினர்கள் சிலர் குற்றம் சாட்டினர். அண்மையில் சாவகச்சேரி நகர சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே உறுப்பினர்கள் சிலர் இவ்வாறு குற்றம் சாட்டினர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

நல்லூர் பிரதேச சபையில் கடந்தகால பட்ஜெட் ஊடாக 36 இலட்சம் ரூபாய் நிதி வாழ்வாதார உதவிக்கென ஒதுக்கப்பட்டிருந்தது.

ஆனால் சாவகச்சேரி நகர சபையில் வாழ்வாதார உதவிக்கு அனுமதி இல்லை எனக் கூறப்பட்டு எமது உதவித்திட்ட முன்மொழிவுகள் உதாசீனப்படுத்தப்பட்டன.

அதேபோல் சாவகச்சேரி நகர சபை தனது எல்லைக்குட்பட்ட 23 சனசமூக நிலையங்களுக்கானவருடாந்த உதவித்தொகையை வழங்க முடியாத சூழ்நிலையிலுள்ள போதிலும் நல்லூர் பிரதேச சபை சனசமூக நிலையங்களுக்கு பட்ஜெட் ஊடாக ஊக்குவிப்புத் தொகைக்கு நிதி ஒதுக்கியிருப்பதாக உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

கடந்த காலங்களில் சாவகச்சேரி நகரசபையும் பட்ஜெட் ஊடாக சனசமூக நிலையங்களுக்கு தலா பத்தாயிரம் ரூபாய் ஒதுக்கியிருந்தது. குறித்த நிதியை பெரும்பாலான சனசமூக நிலையங்கள் பத்திரிகை கொள்வனவிற்காக பயன்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# யோகா ஆசிரியர் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் யோகாவை மக்களிடையே மேலும் பரப்புவதற்காக யோகா ஆசிரியர்கள் ஒன்றுகூடல் எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை கோண்டாவில் உப்புமடச் சந்தியிலுள்ள ஞான உதய சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (இ-7)

# கௌரவிப்பு நிகழ்வும் நூல் வெளியீடும் இன்று

(யாழ்ப்பாணம்)

அரச பங்களிப்புடன் அமைக்கப்பட்ட 100 வீட்டுத் திட்ட நன்கொடையாளர் கௌரவிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் மணிமண்டபத்தில் இடம்பெறும்.

கணிதச் சுடர் சண்.வாம தேவன் தலைமையில் இடம் பெறும் இவ்விழாவில் இராசையா குவேந்தி ரநாதன், குவேந்திரநாதன் றஞ்சினிதேவி ஆகியோர் கௌரவிக்கப்படுவர்.

இந்நிகழ்வில் 'அறப்பணி அமுதம்' என்னும் நூல் வெளியீடும் இடம்பெறும். (இ-2)

# ஆசிரியர் வீட்டில் 17 பவுண் நகை திருட்டு

(யாழ்ப்பாணம்)

ஆசிரியரின் வீட்டில் 17 பவுண் நகைகள் திருட்டுப் போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. கடந்த மாதம் 31 ஆம் திகதி பருத்தித்துறை தும்பளை கோவில் வீதியிலுள்ள குறித்த ஆசிரியரின் வீட்டில் இத் திருட்டு இடம் பெற்றது. கோவிலுக்கு சென்று விட்டு வீடு வந்து பார்த்தபோது நகைகள் திருட்டுப் போயிருப்பது தெரியவந்தது. இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-2-60)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(சாவகச்சேரி)

தென்மராட்சி அபிவிருத்தி நிறுவனத்தின் கனடா கிளையின் தலைவர் வி.சு.துரைராஜா அண்மையில் சமாதான நீதவானாக சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஜெகநாதன் கஜநிதிபாலன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர், தமிழ் சி.என்.என். இணைய குழுமத்தின் போசகரும் உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கனடா கிளையின் பிரதித் தலைவரும் ஆவார். சிறந்த சமூக சேவையாளராகத் திகழ்கின்ற வி.சு.துரைராஜா பல்வேறு பொது அமைப்புக்களில் தலைவர், போசகர்,காப்பாளர் போன்ற உயரிய பதவிகளை வகிக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-30)

# மலக்கழிவுகளை அகற்றுவது தொடர்பில் புதிய திட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையினர் மலக்கழிவுகளை அகற்றுவது தொடர்பில் மக்களின் இடர்பாடுகளைப் போக்க புதிய திட்டம் ஒன்றை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்தனர்.

அண்மையில் சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் மலக்கழிவுகளை உரமாக்கும் யோசனையை சபையில் முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மலக்கழிவுகளை அகற்று வது மற்றும் அதனை உரிய இடத்தில் கொட்டுவது தொடர்பில் பிரதேச சபை பல்வேறு நெருக் கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றது.

அதனால்மக்களின்சிரமத் தைப் போக்கவும், பிரதேச சபைக்கு ஏற்படும் நெருக்கடியைக் குறைக்கவும் மலக கழிவுகளை உரமாக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

குறித்த திட்டம் எமது சபைக்கு மாத்திரம் அல்ல அருகில் உள்ள ஏனைய சபைகளுக்கும் உதவியாக இருக்கும். அத்துடன் பிரதேச சபைக்கு வருமானத்தை ஈட்டித் தரும் திட்டமாகவும் இது அமையும். மலக் கழிவுகளை உரமாக்கும் வேலைத்திட்டத்திற்கான மதிப்பீடு தயாரிக்கும் முயற்சி இடம்பெற்று வருகிறது.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபை ஒன்று குறித்த தொழிற்சாலையை நிறுவி அண்மையில் அதனை திறந்து வைத்துள்ளது. எமது சபை யினர் எதிர்வரும் மார்ச் மாதம் கிழக்கு மாகாணத்திற்கு பயணம் ஒன்றை மேற்கொண்டு அங்குள்ள இவ்வாறான பயனுள்ள திட்டங்கள் தொடர்பில் பார்வையிட திட்டமிட்டுள்ளோம்.

இவ்வாறான சுற்றுப் பயணங்களின் மூலம் எமது சபையை ஏனைய சபைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேசசபை ஆகியன மலக் கழிவுகளை அகற்றுதல் மற்றும் உரிய இடத்திற்கு அதனை அப்புறப்படுத்தும் விடயங்களில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன.

சாவகச்சேரி நகர சபையினர் மலக் கழிவுகளை கொட்டுவதற்கு உரிய இடம் இல்லாமையால் கழிவுகளை எடுக்கும் பணியை நிறுத்தியுள்ளனர். இதனால் பொது மக்கள் அதிக பணம் செலவழித்து வேறு சபை மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியை நாட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் யாழ்.மாவட்ட செயலகத்தால் பாரிய நிதி முதலீட்டில் அமைக்கப்பட்டு வந்த மலக்கழிவுகளை உரமாக்கும் தொழிற்சாலை செயற்பாடுகளும் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இந்நிலையில் சாவகச்சேரி பிரதேச சபையினர் இவ்வாறான திட்டம் ஒன்றினை முன்னெடுப்பதற்கு சகலரும் ஆதரவளிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஜ-30)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இசையிலும் நடனத்திலும் அதிக ஆர்வம் கொண்ட இளைஞர்கள், யுவதிகளுடைய கனவுகளை நிஜமாக்கும் மாபெரும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொடுப்பதற்காக யாழ்.பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தலைமையகத்தின் நெறிப்படுத்தலின் கீழ் MTV தொலைக்காட்சியின் வர்ணனையில் பாடல் மற்றும் நடனப்போட்டிகளை நடத்துவதற்கான சகல வேலைத்திட்டங்களும் பூர்த்தியாக்கப்பட்ட நிலையில் நாளை மறுதினம் 11 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதிவரை மருதனார் மடத்திலுள்ள வட இலங்கை சங்கீத சபையின் கலை கலாசார (NCO) மண்டபத்தில் முதற்சுற்று இடம்பெறும்.

எனவே விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப்படிவங்களை தத்தமது பிரதேச செயலகங்களிலோ, கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களிலோ, அருகிலுள்ள இராணுவ முகாம்களிலோ அல்லது இப் போட்டியின் முதற் சுற்று இடம்பெறவுள்ள மண்டபத்திலோ பெற்றுக்கொள்ள முடியும்.

**போட்டியாளர்களுக்கான விதிமுறைகள்**

01. 18 தொடக்கம் 32 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

02. வரையறையற்ற திறந்த முறையினை கொண்ட இசை நடனப்போட்டியாகும்.

03. நடனமானது தமிழ் கலாசாரத்தை பின்பற்றியதாகவோ அல்லது பரதநாட்டியமாகவோ மாத்திரம் இருத்தல் வேண்டும்.

04. நடனத்தில் பங்குபற்றுபவர்கள் தமது நடனத்தை வழங்கும்போது அவற்றிற்கான பின்னணி இசையானது இறுவெட்டுக்களின் மூலமோ ஒலி நாடாக்களின் மூலமோ இசைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

05. யாழ்.மாவட்டம் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# இந்து இளைஞர் மாநாடு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் ஏற்பாட்டில் தேசிய இந்து இளைஞர் மாநாடு நிறைவு விழா இன்று 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் மாலை 4 மணிமுதல் 5.30 மணிவரை திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணிச்சபையின் இணைப்பொருளாளரும் யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபருமான ஐ.தயானந்தராசா முன்னிலையில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறும்.

இம் மாநாட்டில் சிறப்பு விருந்தினராக யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ச.பாலச்சந்திரன் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் ஆசியுரைகளை நல்லை ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் யாழ். சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தாவும் வழங்குவர். சிறப்புரையை இந்துஸ்வயம்சேவக சங்க அகில இலங்கை இணைச் செயலாளர் வி.சாந்தகுமார் வழங்குவார். (இ-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## வீடு கட்டிக் கொடுக்கப்படும்



குளியலறை - (மாபிள் வேலைகள்)
தனி கழிவறை -(மாபிள் வேலைகள்)
சமையலறை மேலதிக வசதியுடன்
மின் இணைப்புக்கள்

T.P: 077 958 1754, 076 654 1439
2300000 லட்சம் ரூபாவில் இருந்து.

(2062)

## UNIVERSITY COLLEGE OF JAFFNA

UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY
MINISTRY OFHIGHER EDUCATION, TECHNOLOGY&INNOVATIONS

**VACANCIES**

TVEC RegNo:P25/0071
Applications are invited from suitable qualified persons for the below mentioned posts in University College of Jaffna

1. LECTURER (PROBATIONARY) IN FOOD TECHNOLOGY
2. DEMONSTRATORS IN PRODUCTION TECHNOLOGY, MECHATRONICS TECHNOLOGY& BUILDING SERVICES TECHNOLOGY

Closing Date: 23.02.2020
FOR MORE DETAILS AND APPLICATION FORM, PLEASE VISIT www.ucj.ac.lk or call 021 221 7792

Assistant Registrar
University College of Jaffna

09.02.2020

# மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்



## செல்வி கலாவதி கந்தையா

(ஆசிரியர், யா/இணுவில் இந்துக் கல்லூரி)
(பயிற்சி பெற்ற விஞ்ஞான ஆசிரியை, HNDE,SLTS-I)
09.02.2020

### சேவைக்காலம்

27.03.1990-31.10.1994
யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை
01.11.1994-09.02.2020
யா/இணுவில் இந்துக் கல்லூரி

யாழ். இணுவில் இந்துக் கல்லூரியில் 25 வருடங்கள் ஆசிரியையாக சேவையாற்றிய மணிவிழா நாயகியை எல்லாம் வல்ல இறைவன் ஆசி பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

சிறிதேனும் சினவாமல் ஒருவேளை துயிலாமல் செயலாற்றும் பெரியோகி நீர்
பெருமேழை பணக்காரன் அயலார்கள் பகையோர்கள் எனும் பேதம் தனை நீக்கினீர்
சலியாத மனதோடு தவறாத வரவோடு மகிழ்வோடு பணியாற்றினீர்
நீடூழி நீர் வாழ்கவே – என்றும் நீடூழி நீர் வாழ்கவே

ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/இணுவில் இந்துக் கல்லூரி. (1581)

# மணிவிழா வாழ்த்து

## திரு சீனி. தேவானந்தன்



யாழ்ப்பாண பொதுசன நூலகத்தில் எம்முடன் 12 வருடங்களாக சிறப்பாகப் பணியாற்றி 09.02.2020 ஆம்திகதி இன்று தனது அறுபதாவது அகவையில் ஓய்வு பெற்றுச் செல்லும் திரு. சீனி தேவானந்தன் அவர்களுக்கு எமது பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, அவர் தமது ஓய்வுக் காலத்தில் உடல், உள ஆரோக்கியத்துடனும் சீரும் சிறப்புடனும் இருக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

(2052)

பொதுசன நூலக ஊழியர் நலன்புரிச் சங்கம், யாழ்ப்பாணம்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திரு.இராசையா குவேந்திரநாதன்



கோண்டாவில் மண்ணின் மைந்தன், கொடை வள்ளல் "செங்கைப் புரவோன்" இராசையா குவேந்திரநாதன் அவர்கள் கல்வி கற்பதற்காக ஏங்கியவர்களுக்கு பணம், பொருள், காணி, கட்டடம் என வழங்கி வருவதுடன் வீடற்றவர்களுக்கு வீடும் காணியும் வழங்கியதுடன் காணித்துண்டு இன்மையால் வீடற்று நின்றவர்களுக்கு காணியும் வீடு கட்ட அரச நிதிக்கு மேலதிகமாக நிதியும் பல கோடி ரூபா வழங்கி 100 வீடுகள் மக்கள் பெறக் காரணமான "கலியுக கர்ணன்" "கலியுக பாரிவள்ளல்" என கோடி தடவை வாழ்த்தக்கூடிய உயர் பண்பாளரின் கௌரவிப்பு விழா இன்று. இந்நாளில் நாமும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
சி.மாணிக்கராசா (ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர்)
திருமதி கௌரியம்பாள் மாணிக்கராசா (ஆசிரியர்,கோண்டாவில் இராமகிருஸ்ண ம.வி.)
திரு.திருமதி ரம்யா சுதாகரன் (கோண்டாவில்)

(2085)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சித்திரை 2
கி.பா: 69 செவ் 2 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Accounting & Finance, Accountant, UK
எதிர்பார்ப்பு: படித்த தொழில் புரியும் பெண்
தொ.இ: B/10478

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 32 உயரம்: 5'9"
தகைமை/தொழில் B.Scபட்டதாரி, ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரசதொழில்
தொ.இ: B/ 10480

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூராடம் 2
கி.பா: 13 ½
உயரம்: 171cm
தகைமை/தொழில்: B.Scபட்டதாரி, ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரசதொழில்
தொ.இ: B/10482

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 2
கி.பா: 16
உயரம்: 167cm
தகைமை/தொழில்: CIMA, Master of Commerce, Accountant, Australia
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/10483

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: சதயம் 3
கி.பா: சூரி செவ் 7 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: O/L, தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: அரசதொழில்
தொ.இ: G/7202

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2
கி.பா: 51 செவ் 8 இல்
தகைமை/தொழில்: MBBS Doctor
எதிர்பார்ப்பு: Doctor
தொ.இ: G/7210

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பூரம் 2
கி.பா: சூரி செவ் 9 இல்
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு
தொ.இ:.G/7232

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 46 செவ் 8 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BCA, Instructor
எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு
தொ.இ: G/7238

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# பல நாடுகளுக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ள வெட்டுக்கிளி இலங்கையிலும் பரவும் ஆபத்து

(கொழும்பு)

உலக நாடுகள் பலவற்றில் பாதிப்பை ஏற்படுத்தி வரும் லோகஸ்ட் எனப்படும் காட்டு வெட்டுக்கிளிகள் இலங்கைக்கும் வரும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக விவசாய திணைக்களம் எச்சரித்தது.

கிழக்கு ஆபிரிக்க நாடுகள், இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இந்த வெட்டுக்கிளிகளின் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

காற்றின் திசை மாறுதல், மற்றும் இலங்கையின் கால நிலை மாற்றம் காரணமாக இந்த நிலை ஏற்பட்டதாக திணைக்களத்தின் இயக்குநர் நாயகம் விஜேசிறி வீரகோன் தெரிவித்தார்.

இந்த வெட்டுக்கிளிகளின் அச்சுறுத்தல் காரணமாக பாகிஸ்தான் பிரதமர் அண்மையில் அவசர நிலை ஒன்றை அறிவித்தார். இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் இந்த வெட்டுக்கிளி பரவியுள்ளது.

இந்தியாவில் சுமார் 70 ஆயிரம் ஹெக்டேயர் அளவில் வெட்டுக்கிளிகள் பரவியுள்ளன. வரலாற்றில் முதன் முறையாக மிக மோசமான பூச்சியின் தாக்கத்திற்கு விவசாயம் முகம் கொடுத்துள்ளதாக இந்தியா தெரிவித்தது.

இந்த வெட்டுக்கிளிகள் பரவினால் விவசாயத்திற்கு பாரிய ஆபத்தை ஏற்படுத்தும் என எச்சரிக்கப்பட்டது.

கூட்டம் கூட்டமாக சுற்றித் திரியும் இந்த வெட்டுக்கிளிகள் 150 கிலோமீற்றர் வரை பயணிக்கக் கூடியவை என தெரிவிக்கப்படுகின்றது.

விசேடமாக பச்சை நிறத்திலான பயிர்களை நோக்கியே இந்த வெட்டுக்கிளிகளின் படையெடுப்புக்கள் காணப்படுவதாக தெரியவந்தது. (இ-7)

# மைத்திரியை விட கோட்டாபயவுடன் இணைந்து செயற்படுவது சுலபம்

## ஐ.தே.க.எம்.பி.தயா கமகே கூறுகிறார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான கூட்டணி பாராளுமன்றத் தேர்தலில் 113 ஆசனங்களைப் பெற்று ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷவுடன்இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாகத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாகமகே, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து செயற்பட்டதைவிட கோட்டாபயவுடன் இணைந்து செயற்படுவது சுலபமாக இருக்கும் என்றும் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் சிறந்த செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன், பொதுத் தேர்தலில் 113 ஆசனங்களைப் பெற்று வெற்றியீட்டி கோட்டாவுடன் இணைந்து செயற்படத் தயாராகவுள்ளோம்.

தேர்தல் காலங்களில் நல்லாட்சி அரசாங்கம் தொடர்பில் பெரிதும் விமர்சிக்கப்பட்டது. அதனால் மக்கள் எம்மை நிராகரித்தனர். ஆனால் எமது அரசாங்கத்தில் பல்வேறு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இவற்றைத் தொடர்ந்தும் விமர்சிக்காமல் அதிலிருக்கும் நலன்களைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் அதனைச் செயற்படுத்த வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கத்தை எவ்வளவுதான் விமர்சித்தாலும் நாங்கள் ஆட்சிக்கு வந்து 100 நாட்களுக்குள் மக்களுக்கு பல்



வேறுபட்ட சலுகைகளைப் பெற்றுக் கொடுத்தோம்.

இப்போதைய அரசாங்கத் தரப்பினர் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களின் போது மக்களுக்கு பல வாக்குறுதிகளை வழங்கியிருந்தனர். ஆனால் அவற்றை தற்போது நிறைவேற்றாதிருக்கின்றனர். எனவே மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும்என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# குண்டுத் தாக்குதலுக்குப் பின் மீண்டுவரும் பொருளாதாரம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களின் பின்னர், தற்போது இலங்கையின் பொருளாதாரம் மீண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, 2020 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 3.7% ஆக இருக்கும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்தது.

கடந்த வருடம் ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையின் பல இடங்களில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலில் 250 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்திருந்தனர்.

குறிப்பாக இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இலங்கையின் பிரப்ல ஹோட்டல்களிலும் தேவாலயங்களிலுமே இடம்பெற்றிருந்தன.

இதனையடுத்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்தது. அத்தோடு பொருளாதாரமும் பாரியளவில் வீழ்ச்சியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 27 பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம்

(கொழும்பு)

உடன் அமுலுக்கு வரும் வகையில் 27 பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் அனுமதியுடன் சேவைத் தேவையின் அடிப்படையில் குறித்த இடமாற்றம் வழங்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது

இடமாற்றம் வழங்கப்பட்டவர்களுள் இரண்டு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளும், பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் 6 பேரும், பிரதான பொலிஸ் பரிசோதகர்கள் 6 பேரும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# எயார் பஸ் கொடுக்கல்-வாங்கல் விவகாரம்; சபை ஒத்திவைப்பு விவாதம் 20 ஆம் திகதி

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ்க்கான எயார் பஸ் கொடுக்கல்- வாங்கல் தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினை குறித்த சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தை எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. குறித்த விவாதம் அன்றைய தினம் பிற்பகல் 1.30 மணி முதல் இரவு 7.30 மணிவரை இடம்பெறவிருப்பதுடன் ஐக்கிய தேசியக்கட்சி இவ்விவாதத்தை முன்வைக்கவுள்ளது.

அதேநேரம் கடந்த அரசாங்க காலத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களுக்கான் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான குறை நிரப்பு பிரேரணையொன்றை எதிர்வரும் 18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கவிருப்பதாக ஆளும் கட்சி தெரிவித்தது. (இ-7)

# இந்தியாவில் மகிந்தவுக்கு அமோக வரவேற்பு






(டில்லி)

ஐந்து நாள் விஜயமாக இந்தியா சென்றுள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

டில்லி விமான நிலையத்தை நேற்று முன்தினம் மாலை சென்றடைந்த பிரதமரை அமைச்சர் சஞ்சை வரவேற்றார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில் மகிந்தவின் இந்த விஜயம் அமைந்தது.

பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட முதலாவது வெளிநாட்டுப் பயணமாக இது அமைந்தது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 150 | 160 | 130 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 130 | 115 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 220 | 200 | 190 | 300 |
| தக்காளி | 340 | 300 | 400 | 350 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 120 | 90 | 100 |
| கோவா | 140 | 150 | 140 | 160 | 160 |
| கரட் | 350 | 400 | 400 | 400 | 450 |
| பூசணி | 100 | 150 | 130 | 200 | 160 |
| புடோல் | 140 | 140 | 140 | 120 | 160 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 350 | 360 | 320 |
| பெரிய வெங்காயம் | 250 | 130 | 130 | 120 | 140 |
| பாகற்காய் | 250 | 160 | 110 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 230 | 180 | 140 | 80 | 200 |
| கருணைக் கிழங்கு | 50 | 120 | 80 | 80 | 100 |
| பயற்றங்காய் | 250 | 200 | 240 | 250 | 300 |
| லீக்ஸ் | 350 | 300 | 350 | 400 | 200 |
| பீற்றூட் | 140 | 150 | 140 | 270 | 200 |
| கறிமிளகாய் | 120 | 200 | 200 | 250 | 240 |
| முருங்கைக்காய் | 600 | 800 | 800 | 600 | 800 |
| போஞ்சி | 200 | 200 | 300 | 220 | 280 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 90 | 100 | 120 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 30-40 | 30 | 30 |
| தேசிக்காய் | 40 | 30 | 60 | 50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 50 | 65 | 40-70 |
| இராசவள்ளி | 180 | 160 | 200 | 150 | 250 |
| வெங்காயப்பூ | 220 | 180 | 250 | 210 | 320 |
| முள்ளங்கி | 80 | 120 | 60 | 70 | 80 |
| பொன்னாங்காணி | 60 | 40 | — | 30 | 40 |
| வல்லாரை | 15 | 60 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | 80 | — | — | 120 | 120 |

# வடக்கில் மீண்டும் மலேரியா நுளம்புகள் அதிகரிப்பு

(கொழும்பு)

மலேரியா நோய் காவியாக இனங்காணப்பட்டுள்ள **Anopheles Stephensi** நுளம்பின் பெருக்கம் வடக்கில் துரிதமாக அதிகரித்து வருகிறது.

தேசிய மலேரியா தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் பிரசாத் ரணவீர இதனைத் தெரிவித்தார்.

கடந்த 2017 ஆம் ஆண்டு மீண்டும் வட மாகாணத்தில் இந்த நுளம்பு இனங்காணப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

யாழ். நகரப்பகுதி, நல்லூர் மற்றும் கல்முனை ஆகிய பகுதிகளில் கட்டுப்படுத்த முடியாத வகையில் இந்த நுளம்பு தற்போது துரிதமாக பெருகி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும், யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களை தவிர வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலுள்ள கிணற்றுகளில் இந்த நுளம்பு பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டதாக தேசிய மலேரியா தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்தார்.

தூய்மையான நீரிலேயே இந்த நுளம்பு பெருகுவதாகவும் கிணறுகள் தொடர்பாக கவனம் செலுத்துமாறும் அவர் அறிவுறுத்தல் வழங்கினார்.

இந்த நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு மீன்கள் பயன்படுத்தப்படுவதாகவும், எனினும் யாழ்ப்பாணத்திலுள்ள கிணறுகளில் அதிக குளோரின் காணப்படுவதால் நுளம்புகளை கட்டுப்படுத்த பயன்படுத்தும் மீன்கள் குறுகிய காலத்திற்குள்ளேயே உயிரிழப்பதாகவும் தேசிய மலேரியாத் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, கடந்த வருடம் மலேரியாவால் 53 பேர் உயிரிழந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பதவி விலக நான் தயார்




(கொழும்பு)

சபாநாயகராக பதவியில் இருந்து கொண்டு ஜனநாயகத்தைப் பாதுகாக்க முன்னெடுத்த போராட்டத்தையிட்டு திருப்தியடைகின்றேன். ஐந்து வருட கால பாவனைக்கு புதிதாக வாகனங்கள் ஏதும் கொள்வனவு செய்யவில்லை.

முன்னாள் சபாநாயகர் பாவித்த வாகனத்தையே பாவிக்கின்றேன் எனத் தெரிவித்த சபாநாயகர் கருஜெயசூரிய சபாநாயகர் பதவியிலிருந்து ஓய்வு பெறத் தயாராகவே உள்ளேன் எனவும் தெரிவித்தார். கண்டி மல்வத்து அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர்களை நேற்றுச் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்தில் சபாநாயகராக தெரிவு செய்யப்பட்ட காலத்தில் இருந்து இன்றுவரையில் ஜனநாயகத்தை முன்னிறுத்தியே செயற்பட்டுள்ளேன்.

ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக முன்னெடுத்த போராட்டங்களையிட்டு திருப்தியடைகின்றேன். நெருக்கடி காலத்தில் மகாநாயக்க தேரர்களின் வழிநடத்தல்களுக்கு அமையவே பிரச்சினைகளை வெற்றி கொண்டுள்ளேன். என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


## மருந்து இல்லா/ மருந்து வைத்தியம்

பல காலமாக சிகிச்சை எடுத்தும் சுகமாகாத எல்லா விதமான நோய்களை உடையவர்களுக்கான அதி உன்னத வைத்தியம் முள்ளந்தண்டு விலகல், கை, கால் தூக்க முடியாமை, கை, கால் விறைப்பு, மாறாத படுக்கைப் புண்கள், மூலம், தோல் நோய்கள், குழந்தைப் பேறு இன்மை, பெண்களின் அனைத்து நோய்கள்.

விபரங்களுக்கு - **DR.R .Sivagurunathan**
**077 730 1669**
திங்கள், செவ்வாய் மட்டும். சந்திப்பு இலவசம்
இல.41, கண்டிவீதி, யாழ்ப்பாணம்.




வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளரின் கூட்டுறவு பரிணமிப்பு வேலைத்திட்டத்தை முன்னிட்டு உடுப்பிட்டி ப.நோ.கூ சங்கத்தால் கரணவாய் வடக்கில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது.

# பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட யுவதிக்கு கொரோனா வைரஸ் தொற்று இல்லை

(பதுளை)

கொரோனா வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகளுடன் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட யுவதிக்கு, நோய்த்தொற்று இல்லை என வைத்தியசாலை நிர்வாகம் உறுதி செய்தது.

பதுளை வைத்தியசாலையின் விசேட சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த அவருக்கு மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான பரிசோதன்னைகளின் மூலம் இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டது.

மொனராகலைப் பகுதியைச் சேர்ந்த குறித்த யுவதி, சீனாவில் கல்வி கற்றுவந்த நிலையில், நாட்டுக்கு மீண்டும் வருகை தந்திருந்தார்.

இந்த நிலையில், அவருக்கு கொரோனா வைரஸ் தொற்றுக்கான நோய் அறிகுறிகள் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் பரிசோதனைகளுக்காக பதுளை போதனா வைத்தியசாலையில் கடந்த 5 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்து, 22 வயதுடைய குறித்த யுவதி விசேட பாதுகாப்பு உடைகள் அணிவிக்கப்பட்டு, பல்வேறு கட்ட மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்பது வைத்திய பரிசோதனைகளின் மூலம் உறுதி செய்யப்பட்டது.

இதேவேளை கொரோனோ வைரஸ் தொற்றுக்கு இலக்காகி இதுவரையில் 700 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
## காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களது தற்காலிக பட்டியலினை உறுதிப்படுத்தல்

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது 2016ம் ஆண்டின் 14ம் இலக்க (ஸ்தாபித்தலும் நிர்வகித்தலும் மற்றும் கடமைகளைப் பொறுப்பேற்றலும்) சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டதுடன் யுத்தம், அரசியல், அமைதிக்குலைவு அல்லது குடியியல் குழப்பங்கள் அல்லது வலிந்து காணாமற் போகச் செய்தலின் விளைவுகள் என்பவற்றுடன் தொடர்புடையதாக காணாமற்போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களின் நிலையினை ஸ்தாபிப்பதற்கான விளக்கமான பணிப்பாணைகளையும் கொண்டுள்ளது . காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது சட்டத்தின் 10(1)(உ) பிரிவின் பிரகாரம் காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்களுடன் தொடர்புடைய தரவுகளை சேகரிப்பதற்கான கடமையை கொண்டுள்ளது. இன்றுவரையில் இலங்கையானது காணாமற் போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோர் குறித்த விரிவான பட்டியலொன்றினைத் தயாரித்திருக்கவில்லை.

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது அதற்கு கிடைத்துள்ள தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு தற்காலிக பட்டியலை ஒருங்கிணைக்கின்றது. இப்பட்டியலானது 1) 2018 பெப்ரவரியில் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து அதனால் நேரடியாக பெறப்பட்ட அனைத்து முறைப்பாடுகள், 2) தேசிய ஒருமைப்பாடு ,நல்லிணக்கம், அரச கருமமொழிகள் மற்றும் இந்து சமய விவகார அமைச்சினால் மாவட்டச் செயலகங்களின் வாயிலாக பெறப்பட்டு காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் 3) காணாமற்போன ஆட்கள் குறித்த அலுவலகத்தின் கோரிக்கையின் பேரில் யுத்த காலத்தில் காணாமற் போனவர்களாக முப்படைகளினால் வழங்கப்பட்ட தரவுகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றது.

காணாமற்போனதாக மற்றும் காணாமலாக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்ட ஆட்களின் தற்காலிக பட்டியலானது உறுதிப்படுத்தும் செயன்முறைக்கு உள்ளாக்கப்படவுள்ளது. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது காணாமற்போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோர் குறித்த விரிவான பட்டியலொன்றினைத் தயாரிப்பதற்காக முன்னைய ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் உள்ளடங்கலாக ஏனைய மூலங்களிலிருந்தும் தரவுகளை சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளது.

காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்டோரது குடும்பங்கள் தங்களது காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட அன்புக்குரியவர்கள் தொடர்பான விபரங்கள் இத்தற்காலிக பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதா? என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக கிழமை நாட்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரையிலான காலப்பகுதியில் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தினை பின்வரும் 011-205 6504, 011-266 7108 எனும் தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்வதற்கோ அல்லது எமது தலைமை அலுவலகத்திற்கு அல்லது பிராந்திய அலுவலகங்களிற்கு வருகை தரவோ வரவேற்கப்படுகின்றார்கள். காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் குறித்த தரவுகள் பட்டியலில் இல்லாமலிருந்தாலோ அல்லது முறையாக இல்லாதிருந்தாலோ அத்தகைய விபரங்களை பதிவு செய்து காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு உதவுமாறு குடும்ப உறுப்பினர்கள் பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். வேறு ஏதேனும் தகவல்கள் கிடைக்கப் பெறுமானால் அது காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் உறுதிப்படுத்தும் செயற்பாட்டிற்கு உதவக் கூடியதாக இருக்குமாகையால் 15 மார்ச் 2020 இற்கு முன்னதாக அத்தகைய தகவல்களை அலுவலகத்துடன் பகிர்ந்து கொள்ளுமாறு பொதுமக்கள் தயவுடன் வேண்டிக் கொள்ளப்படுகின்றார்கள்.

காணாமற்போன ஆட்கள் பற்றிய தலைமை அலுவலகம்
32,சேர் மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தை, கொழும்பு- 07

யாழ்ப்பாண பிராந்திய அலுவலகம்
இல. 124,ஆடியபாதம் வீதி, யாழ்ப்பாணம்.

மாத்தறை பிராந்திய அலுவலகம்
இல.59, தர்மாராம மாவத்தை, கோட்டை, மாத்தறை.

மட்டக்களப்பு பிராந்திய அலுவலகம்
இல.124,மத்தியவீதி, மட்டக்களப்பு

மன்னார் பிராந்திய அலுவலகம்
இல.05,புகையிரத நிலையவீதி, மன்னார்

தவிசாளர், காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

(சி-811)


# நீதிபதி கிஹானை கைது செய்ய நான் வழங்கிய ஆலோசனையை ஏன் செயற்படுத்தவில்லை?

## பதில் பொலிஸ்மா அதிபரிடம் சட்டமா அதிபர் விளக்கம்

(கொழும்பு)

பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ள, மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலபிட்டியவை கைது செய்ய நீதிமன்ற உத்தரவொன்றைப் பெற்றுக் கொள்ளுமாறு தான் வழங்கிய ஆலோசனையை செயற்படுத்தாமைக்கான காரணத்தை நாளை 10 ஆம் திகதிக்குள் தமக்கு அறிவிக்குமாறு சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி தப்புல டி லிவேரா பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்னவுக்கு உத்தரவிட்டார்.



அத்துடன் குறித்த விவகார விசாரணைகளில் தான் ஏற்கனவே ஆலோசனைகளை வழங்கியுள்ள நிலையில், அவ்விசாரணைகளின் அடைவு மட்டத்தையும் தனக்கு அறிவிக்குமாறு வலியுறுத்தினார். (இ-7)


## Wanted Office Space in Jaffna

1200 - 1500 Sqft building / Office Space wanted for Long term lease / rent with parking facilities in Jaffna town and preferably close to Jaffna Teaching Hospitals.

**Contact Number - 077 772 6830**

(சி-812)

ஏழாலை தெற்கு களபாவோடை வசந்த நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா தைப்பூச நன்னாளான நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்றது. பக்தர்கள் புடைசூழ முத்தேர் பவனி இடம்பெறுவதையும், அம்பாள் சித்திரத் தேரில் அருட்காட்சி தருவதையும், அடியவர்கள் நேர்த்திக் கடன்கள் நிறைவேற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- செ.ரவிசாந்)





## எயார் பஸ் கொள்வனவில் மோசடி

# சிங்கப்பூரிடமிருந்து தகவல் கிடைத்தும் என்ன நடந்தது என்பது தெரியாது

## நாடாளுமன்றில் ரணில் கைவிரிப்பு



(கொழும்பு)

எயார் பஸ் கொள்வனவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் தொடர்பிலான தகவல்களை 2017 ஆம் ஆண்டு சிங்கப்பூரிடம் நாம் கோரியிருந்த போதிலும் அத் தகவல்கள் கடந்த ஆண்டு நவம்பர் மாதமே கிடைக்கப்பெற்றன. அதன் பின்னரான நடவடிக்கைகள் தொடர்பில் எமக்குத் தெரியாதென முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்துடன், இக்கொள்வனவில் இடம்பெற்ற மோசடிகள் நிரூபணமாகும் வகையில் உள்ளமையால் உறுதியான தீர்மானமொன்று எடுக்கப்படாவிடின் எதிர்காலத்தில் எயார் பஸ்களை எம்மால் கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்படலாம் எனவும் எச்சரிக்கை விடுத்தார்.

எயார்பஸ் கொள்வனவு தொடர்பில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நேற்று முன்தினம் பாராளுமன்றில் வெளியிட்டிருந்த கருத்துக்கள் தொடர்பில் விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2017 ஆம் ஆண்டுதான் எயார் பஸ் கொள்வனவு உடன்படிக்கை தொடர்பில் முதலாவது அறிக்கை கிடைக்கப் பெற்றது. எம்மிடம் இது தொடர்பில் மேலதிக தகவல்கள் இருக்கவில்லை.

என்றாலும் குற்றப்புலனாய்வுப் பிரிவில் தகவல்கள் இருந்துள்ளன. இத் தகவல்களை 'ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா' ஆணைக்குழுவுக்கு அனுப்பியது.

தரவுகளின் பிரகாரம் சிங்கப்பூர் மற்றும் சம்பந்தப்பட்ட நாடுகளில் இது தொடர்பிலான தகவல்களைக் கோரினோம்.

சிங்கப்பூரில் இந் நிறுவனத்தின் பெயர் இருந்த போதிலும் அதன் உரிமையாளர் யாரென குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தான் இந்தத் தகவல்கள் இலங்கைக்கு சிங்கப்பூரிலிருந்து அனுப்பப்பட்டன.

அதன் பின்னர் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டதென எமக்குத் தெரியாது.

இனி நாம் செய்ய வேண்டியதாவது, பிரிட்டன் ஏற்றுமதி நிதியம் மற்றும் பாரிய ஊழல் - மோசடிகள் தொடர்பிலான பிரிட்டன் அலுவலகத்திடமிருந்த இந்தத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஊழல் - மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக நிரூபணமாகக் கூடிய வகையில் தகவல்கள் உள்ளன.

இதன் காரணமாக எதிர்காலத்தில் எம்மால் எயார் பஸ்களை கொள்வனவு செய்ய முடியாது போகலாம்.

ஆகவே, இழப்பீடுகளைப் பெறுக்கொள்வதா? என்பது தொடர்பில் தீர்மானமொன்று எடுக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## குப்பைகள் அகற்றப்படவில்லை




(யாழ்ப்பாணம்)

குருநகர் றெக்ளமேசன் மேற்கு கடற்கரையோரப் பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சிரமதானப் பணியின் போது அகற்றப்பட்ட குப்பைகள் அப்புறப்படுத்தப்படவில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டினர். ஒரு சிலர் தொடர்ச்சியாக குறித்த பகுதியில் குப்பைகளை மேலும் கொட்டி வருவதால் துர்நாற்றம் வீசி மக்கள் தொற்று நோய்களால் பாதிப்படைந்து வருகின்றனர்.

இந் நிலையில் இது தொடர்பாக பலருக்கு முறையிட்டும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இனியாவது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர். (இ-2-107)

## 92 கிலோ பீடி இலைகள்

## போதை மாத்திரைகளுடன் ஆறு பேர் கைது

(காலி)

காலி - கலங்கரை விளக்கத்திலிருந்து 120 கடல் மைல் தொலைவில் 92 கிலோ நிறை கொண்ட பீடி இலைகள் மற்றும் 20 சட்டவிரோத போதை மாத்திரைகள் என்பன நேற்று அதிகாலை மீட்கப்பட்டன.

கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட இரு ரோந்து நடவடிக்கைகளின் போதே இவ்வாறு பீடி இலைகள் மீட்கப்பட்டதுடன் 6 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர். போதைப்பொருள் கடத்தலைத் தடுக்க கடற்படையினர் பல தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறன்றனர்.

இந்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, நீரில் மிதந்து கொண்டிருந்த நிலையில் பல பொதிகளை கடற்படையினர் கண்டுபிடித்தனர். அதனுள் சுமார் 40 கிலோ நிறையுடைய ஈரமான பீடி இலைகள் காணப்பட்டன.

இதற்கிடையில், அதே கடல் பகுதியில் சந்தேகத்திற்கிடமான ஒரு இழுவைப் படகொன்றை கடற்படை தடுத்து நிறுத்தி சோதனை செய்ததில் அதில் இருந்த மேலும் 52 கிலோ பீடி இலைகள் மற்றும் 20 போதை மாத்திரைகளுடன் படகில் இருந்த 6 நபர்களை கடற்படையினர் கைது செய்தனர். (இ-7)

## விபத்தில் ஆசிரியை படுகாயம்

(சாவகச்சேரி)

பாடசாலை ஆரம்ப நேரத்தில் வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் இல்லாததால், ஏற்பட்ட விபத்தில் பாடசாலை ஆசிரியை ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தின் முன் நேற்று முன்தினம் காலை 7.25 மணியளவில் இவ் விபத்து இடம்பெற்றது.

குறித்த விபத்தானது, வேம்பிராய்ப் பகுதியிலிருந்து துவிச்சக்கர வண்டியில் பயணித்த ஆசிரியையை மோட்டார் சைக்கிள் மோதியதால் ஏற்பட்டது.

இதன்போது காயங்களுக்குள்ளான ஆசிரியை சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (இ-114)

# இணுவில் கந்தசுவாமி கோவிலில் பாற்குட பவனியும் பொங்கல் விழாவும்



யாழ். இணுவில் கந்தசுவாமி ஆலய தைப்பூசத் தின உலகப் பெருமஞ்சத் திருவிழா நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்றது.

இவ்வாலய தைப்பூசத் தின உலகப் பெருமஞ்சத்திருவிழாவை முன்னிட்டு நேற்று அதிகாலை பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் பல்லப்பை வைரவர் ஆலயத்திலிருந்து இணுவில் கந்தசுவாமி ஆலயத்தை நோக்கிப் பாற்குடம் எடுத்து வந்தனர். அதனைத் தொடர்ந்து முற்பகல் 10 மணியளவில் ஆலய முன்றலில் பொங்கல் விழா இடம்பெற்றது. (இ-18)

## பிரதமர் பதவியை இலக்கு வைக்கும் மூன்று அமைச்சர்கள்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் அடுத்த பிரதமர் பதவியை இலக்கு வைத்து மூன்று அமைச்சர்கள் போட்டியில் இறங்கியுள்ளதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது 75 வயதாகும் மகிந்த ராஜபக்ஷ 2025 அல்லது அதற்கு முன்னர் அரசியலிலிருந்து ஓய்வு பெறுவார் என எதிர்பார்க்கப்படுவதால், 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அடுத்த பிரதமர் பதவிக்கு தாம் தகுதியானவர்கள் என நிரூபிக்க இவர்கள் தீர்மானித்துள்ளதாக கூறப்படுகிறது.

இதனடிப்படையில், அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொள்வது, அதிக விருப்பு வாக்குகளை பெற்று சாதனை படைப்பது, ஊடகங்களை கூடுதலாக கவர்வது ஆகியவற்றை இலக்கு வைத்து இவர்கள் இந்தப் போட்டியில் இறங்கியுள்ளனர்.

இவர்கள் தற்போது கவர்ச்சிகரமான தலைப்புக்களின் கீழ் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதுடன் ஒரு அமைச்சர் பிரபல பாடகரின் பிரசார நிறுவனத்தின் உதவியை பெற்றுக் கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-7)

## இலங்கையில் இந்த ஆண்டு 15 நாட்களில் 142 பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள்

### நாடாளுமன்றில் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதலாவது 15 நாட்களில் இலங்கையில் 142 பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவானதாக நாடாளுமன்றத்தில் அதிர்ச்சித் தகவல் வெளியிடப்பட்டது.

கடந்த 2010 ஆம் ஆண்டின் முதல் 15 நாட்களில் 142 பாலியல் துஷ்பிரயோக சம்பவங்களும், 42 பாரதூரமான பாலியல் துஷ்பிரயோக சம்பவங்களும், 54 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களும் பதிவானதாக சுட்டிக்காட்டப்பட்டது. (இ-7)

## 15 ஆயிரத்திற்கும் அதிகமான பொருட்களின் விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை

(கொழும்பு)

சுமார் 15 ஆயிரத்திற்கும் அதிகமான பொருட்களுக்கான விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அரசின் வரி நிவாரண நன்மையை மக்களுக்கு பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டதாக, நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்தது.

அதற்கமைய கட்டுமானப் பொருட்கள், உணவுப் பொருட்கள், குழந்தைகளுக்கான பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள் மற்றும் மின்சார உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களின் விலைகள் அரசின் வரி நிவாரண கொள்கைக்கமைய குறைக்கப்படவுள்ளன.

இந்த விலைக் குறைப்பு சம்பந்தமாக பொருட்களைத் தயாரிக்கும் மற்றும் இறக்குமதி செய்யும் நூற்றுக்கும் அதிகமான நிறுவனங்கள் அதிகார சபைக்கு எழுத்து மூலம் அறிவித்தது.

அதற்கமைய குறித்த பொருட்களின் பெயர்கள் மற்றும் விலைகள் தொடர்பாக நுகர்வோர் விவகார அதிகார சபை விசேட பகுப்பாய்வு நடவடிக்கையை முன்னெடுத்தது.

எனவே குறித்த பொருட்களின் பெயர்கள் மற்றும் விலைகள் தொடர்பாக வெகு விரைவில் நுகர்வோருக்கு பத்திரிகையூடாக தெரியப்படுத்துமாறு, நுகர்வோர் விவகார அதிகார சபை சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் கோரிக்கை விடுத்தது.

இதற்கு முன்னர் பால்மா மற்றும் சீமெந்து ஆகியவற்றுக்கான விலைக் குறைப்பை மேற்கொள்ள நுகர்வோர் விவகார அதிகார சபை நடவடிக்கை எடுத்திருந்தது.

அதேபோல் கடந்த டிசெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் வற்வரியை 8 வீதமாக குறைத்தமை, தேசிய நிர்மாண வரியை நீக்கியமை ஆகியவற்றின் ஊடாக கிடைத்த நன்மைகள் நுகர்வோரை சென்றடைந்துள்ளதா என்பதை ஆராயவும் நுகர்வோர் விவகார அதிகார சபை நடவடிக்கை எடுத்தது. அதனை முன்னெடுக்க நுகர்வோர் விவகார அதிகார சபையின் விசேட விசாரணைப் பிரிவு ஒன்றை ஸ்தாபிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. (இ-7)

## கூரிய ஆயுதத்தால் தாக்கி வயோதிபர் படுகொலை

(கொழும்பு)

கட்டுநாயக்க, ஹீனடியன பிரதேசத்தில் நேற்று அதிகாலை கூரிய ஆயுதத்தால் தாக்கி வயோதிபர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டார்.

துவிச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த நபரொருவர் மற்றுமொரு நபரொருவரால் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட நிலையில், படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

72 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.

கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் மினுவாங்கொடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், காயங்களுக்குள்ளான நிலையில் காணப்பட்ட சந்தேகநபர் மினுவாங்கொடை வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்பின் கீழ் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்தது. (இ-7)

## விலங்கு உணவிற்காக சதொச களஞ்சியசாலையில் 4 இலட்சம் கிலோ அரிசி

(கொழும்பு)

சதொச நிறுவனத்தில் களஞ்சியப்படுத்தப்பட்ட சுமார் 4 இலட்சம் கிலோவிற்கும் அதிகமான அரிசியை விலங்கு உணவிற்காக பயன்படுத்தப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ்வாறு ஒதுக்கப்பட்ட அரிசி தொகையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள 3 இலட்சத்து 88 ஆயிரத்து 484 கிலோ அரிசியும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் உணவுப் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் நலன் அமைச்சின் செயலாளர் ஜி.கே.எஸ். எல். இராஜதாஸ தெரிவிக்கையில், நம் நாட்டில் பெரும்பாலான மக்கள் வெளிநாட்டு அரிசியை விட உள்ளூர் அரிசியை விரும்புகிறார்கள்.


இதன் மூலம் இறக்குமதி செய்யப்படும் அரிசி விற்பனை குறைகிறது. எனவே தான் களஞ்சியப்படுத்தப்பட்ட அரிசி விலங்குகளுக்கான உணவைத் தயாரிப்பதற்கு பயன்படுத்த வேண்டியுள்ளது.

நாட்டில் அரிசி பற்றாக்குறை இருப்பதாக அறிவிக்கப்படும் போது, அரிசியை இறக்குமதி செய்கின்றனர். நாட்டிற்கு அரிசி பற்றாக்குறை ஏற்படும் போது அதற்கான தீர்வை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

எனினும் இறக்குமதி செய்யப்படும், அரிசி இலங்கைக்கு வரும்போது, உள்நாட்டு அரிசி இங்கு அறுவடை செய்யப்படுகின்றன இதனாலே இவ்வாறான அரிசி களஞ்சியசாலைகளில் சேமிக்கப்பட்டு பாவனைக்கு உதவாமல் போகின்றது. இதன் காரணமாகவே சதொச நிறுவனத்தின் களஞ்சியசாலைகளில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் 410,484 கிலோ அரிசி விலங்கு தீவனத்திற்கு ஒதுக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




இலங்கையின் 72 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ்.பாதுகாப்புப் படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரியவின் ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்கும் அமைய நேற்றுமுன்தினம் யாழ்.வயாவிளான் மத்திய மகாவித்தியாலத்தில் பாதுகாப்புப் படைகளின் தலைமையகத்தில் சேவையாற்றும் இராணுவத்தினரால் சிரமதானம் செய்யப்பட்டது.



வவுனியா நகரப்பகுதியில் அமைந்துள்ள கந்தசுவாமி ஆலயத்தின் இரதோற்சவம் நேற்று முன்தினம் சிறப்பாக இடம்பெற்றது. வசந்தமண்டப பூஜையை தொடர்ந்து கந்தசுவாமி ஆலயத்தில் உள்வீதி வலம் வந்து காலை 9.30 மணியளவில் தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார். தொடர்ந்து முதலாம் குறுக்குத்தெரு வீதி வழியாக மணிக்கூட்டு கோபுரத்தையடைந்து மீண்டும் ஆலயத்தை வந்தடைந்தது. (படங்கள்:-நெளுக்குளம் செய்தியாளர்)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் சரவணராஜா முன்னிலையில் கிளிநொச்சி திருநகரை சேர்ந்த சமூக சேவகரான நாராயணபிள்ளை வேலாயுதம் முழு இலங்கைக்குமான சமாதான நீதவானாக கடந்த மாதம் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். (9)




# மன்னார் மறைமாவட்ட ஆயருடன் வன்னிப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சந்திப்பு



(மன்னார்)


மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகைக்கும் வன்னி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த தம்மிக்கவிற்கும் இடையில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் மன்னார் ஆயர் இல்லத்தில் விசேட சந்திப்பு இடம் பெற்றது. மன்னார் ஆயர் இல்லத்திற்குச் சென்ற புதிதாக பதவியேற்ற வன்னி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த தம்மிக்க ஆயரிடம் ஆசி பெற்றதோடு, மன்னார் மறைமாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து கலந்துரையாடினர்.

குறிப்பாக மன்னார் மறைமாவட்ட மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், மாவட்டத்தின் பாதுகாப்பு நிலவரங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

குறித்த சந்திப்பின் போது மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், மன்னார் மறைமாவட்ட ஆயரின் செயலாளர் அருட்தந்தை ஆர். நிக்கிலஸ் அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-2-285)

# குண்டுவெடிப்பு; ஒருவர் படுகாயம்





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு சிலாவத்தை மாதிரி கிராமம் பகுதியில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில், சிலாவத்தை மாதிரிக் கிராமம் பகுதியில் இருந்து வியாபாரத்துக்கென அபாயகரமான வெடிபொருட்களை எடுத்து வந்து கழற்றி விற்பனை செய்வதற்கு முற்பட்ட வேளையில் வெடித்து சிதறியது.

தண்ணீர் ஊற்று, முள்ளியவளை பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய சூசைப்பிள்ளை புலேந்திரன் என்ற நபரே இந்த சம்பவத்தில் காயமடைந்தார்.



குறித்த நபர் சிலாவத்தை மாதிரி கிராமப்பகுதியில் வசிக்கின்ற தன்னுடைய தாயாருடைய வீட்டின் பின்புறத்தில் வைத்து அபாயகரமான வெடிபொருளை உடைத்து உள்ளே உள்ள மருந்தை எடுத்துக்கொண்டிருந்த வேளையிலேயே குண்டு வெடித்து மேற்படி அனர்த்தம் இடம் பெற்றுள்ளது. சம்பவ இடத்திற்கு வருகை தந்த முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு இராணுவத்தினர்.விசேட அதிரடிப் படையினர் அனைவரும் வருகை தந்து குறித்த இடத்தை சோதனையிட்டு வருகின்றனர். (ஜ-281-350)



கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் சிவநகர் கிராம மூத்தோர் சங்க உறுப்பினர்கள் கடந்த வியாழக்கிழமை திருகோணமலையிலுள்ள திருத்தலங்களுக்கு ஆன்மீகச் சுற்றுலா சென்றனர்.

(படங்கள்:-சிவநகர் செய்தியாளர்)

மரணம் என்னை விழுங்கும் வரை நான் ஒரு மாணவன்; படித்துக் கொண்டே இருப்பேன்.
– கார்ல் மார்க்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை இந்தியா அழைத்தது ஏன்?

மகாபாரதப் போருக்கு முன்பாகப் பாண்டவர்கள், கௌரவர் தலைவன் துரியோதனனிடம் தூது அனுப்புகின்றனர்.

போரைத் தடுப்பதே அந்தத் தூதின் நோக்கமாக இருந்தது.

சூதில் தருமர் தோற்றதை அடுத்து, துரியோதனன் திரௌபதியை சபையில் வைத்து மானபங்கப்படுத்தியபோது, அச்சபை நடுவே நின்று திரௌபதி எடுத்த சபதம் கண்டு சபையோர் திணுக்குற்றனர்.

இதேபோன்று வீமன், அருச்சுனன் முதலியோரும் கௌரவர்களைக் கொல்வதாகச் சத்தியம் செய்தனர்.

இவ்வாறு செய்த சத்தியம் நிறைவேற வேண்டுமாயின் போர் நடந்தாக வேண்டும்.

நிலைமை இதுவாக இருந்த போதிலும் போரைத் தடுத்தாக வேண்டும் என்பதில் தருமர் மிகத் தீவிரமாக இருந்தார்.

அதனால் சல்லியனைத் தூது அனுப்பினார். தூது வெற்றி பெறவில்லை. இறுதியாக பார்த்தசாரதியைத் தூது அனுப்புகின்றார்.

மகாபாரதப் போரை நடத்தியே தீருவதென்று முடிவு செய்த பார்த்தசாரதியைத் தூது அனுப்பியதுதான் பாண்டவர்கள் கையாண்ட மிகப் பெரும் இராஜதந்திரம்.

கிருஷ்ண பரமாத்மாவின் தூது வெற்றியளிக்காத கட்டத்தில், குருசேத்திரப் போருக்கான அறைகூவல் விடப்படுகிறது.

இஃது மகாபாரதப் போர் மூண்ட காதை.

இனி நம் நாட்டின் சமகால நிலைமை பற்றி இங்கு பார்க்கலாம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்பான இலங்கையின் போக்குத் தொடர்பில் இந்தியா மிகுந்த கருசனை கொண்டுள்ளது.

இலங்கை மீதான தனது அவதானங்களை வெளிக்காட்டவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்தியாவுக்கு அழைக்கப்பட்டார்.

எனினும் அவரின் இந்திய விஜயமும் அவர் வெளியிட்ட கருத்துக்களும் பிரதமர் நரேந்திர மோடிக்குத் திருப்தி தரவில்லை என்றே கூற வேண்டும்.

இதன்காரணமாக இப்போது பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்து அவரை அங்கு வரவழைத்துள்ளார் பிரதமர் நரேந்திர மோடி.

இங்கு ஜனாதிபதியுடனான சந்திப்புத் திருப்தி தராத காரணத்தினாலேயே பிரதமர் மகிந்தவை இந்தியா அழைத்துள்ளதென்பது நிராகரிக்க முடியாத உண்மை.

இங்கு பிரதமர் என்ற அடிப்படையில் மட்டுமன்றி, ஜனாதிபதி கோட்டாபயவின் சகோதரர் என்ற வகையிலும் மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு அழைக்கப்பட்டிருக்கலாம் என ஊகிப்பதில் தவறில்லை.

தவிர, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் பிரதமர் மோடி சில விடயங்களைக் கடுமையாக எடுத்துரைத்திருப்பார் என்பது நிறுதிட்டமான உண்மை.

இதில் ஈழத் தமிழர்களின் விடயமும் சீனாவுடன் இலங்கை கொண்டுள்ள நெருக்கமான தொடர்பு பற்றிய சமாச்சாரமும் நிச்சயம் இடம் பெற்றிருக்கும்.

ஆக, இந்தியாவின் இந்த நடவடிக்கை சமகாலத்து தூது முயற்சி என்றே கருதப்பட வேண்டும்.

ஆம், இந்தியா அழைத்து வழங்கிய அறிவுரைகளை இலங்கை ஆட்சியாளர்கள் செவிமடுக்க மறுத்தால், பிரதமர் நரேந்திர மோடி தன் திருப்பெருவடிவத்தை எடுப்பார் என்பது உண்மை.

## பழிவாங்கலுக்கு இலக்கான அரச அதிகாரிகள் தொடர்பில்

### 80 முறைப்பாடுகள் பதிவு

அரசியல் பழிவாங்கலுக்கு இலக்கான அரச அதிகாரிகள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் இதுவரை 80 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அரச நிறுவன அதிகாரிகள், அரச கூட்டுத்தாபன ஊழியர்கள், ஆயுதமேந்திய இராணுவத்தினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோரால் குறித்த முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அந்த ஆணைக் குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஆணைக் குழுவில் முறைப்பாடுகளை பொறுப்பேற்கும் நடவடிக்கைகள எதிர்வரும் 20 ஆம் திகதி நிறைவடையவுள்ளது.

அதன்படி, 2015 ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்றதாக கூறப்படும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பிலான முறைப்பாடுகள் இந்த ஆணைக் குழுவினால் பொறுப்பேற்கப்படவுள்ள நிலையில், முறைப்பாடுகளை பொறுப்பேற்கும் இறுதித்தினத்திற்கு முன்னர் அது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது (ம)

## எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடப் போவதில்லை–பசில்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட எதிர்பார்க்கவில்லை என முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலுக்கு குறுகிய காலமே இருக்கின்றது. உங்களது நிலைமை என்ன என செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்துள்ள பசில், தற்போதுள்ள நிலைமையின் அடிப்படையில் தான் தேர்தலில் போட்டியிடவில்லை எனவும் அது காலத்திற்கு அமைய தீர்மானிக்கப்படும் எனவும் கூறியுள்ளார்.

தேர்தலில் போட்டியிடுவதில்லை என்ற நிலைப்பாட்டிலேயே தான் தற்போது இருப்பதாகவும் அவர குறிப்பிட்டுள்ளார்.(ம)

## சர்வதேச பதவிகளை குறி வைத்துள்ள ரணில்

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில்விக்ரமசிங்க சில சர்வதேச பதவிகள் மீது குறிவைத்துள்ளதாக அந்த கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு பதவிகளில் ஒரு பதவி கிடைக்கும் என்பது உறுதியான பின்னர், ரணில் விக்ரமசிங்க கட்சியின் தலைவர் பதவியை துறப்பார் என கூறப்படுகிறது.

விக்கிரமசிங்க, பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் பதவி மற்றும் ஜெனிவா ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் செயலாளர் பதவிக்கு அடுத்த பதவியான துணை ஆணையாளர் பதவியை எதிர்பார்த்துள்ளதாக பேசப்படுகிறது.

இந்த பதவிகளை பெற்றுக்கொள்வது தொடர்பான நடவடிக்கைகளை அவர் ஏற்கனவே எடுத்துள்ளதாகவும் கிடைக்கும் முடிவுகளுக்கு அமைய ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியில் இருப்பது அல்லது விலகுவது குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எது எப்படி இருந்த போதும் விக்கிரமசிங்க எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு வரை கட்சியின் தலைவர் பதவியை வகிக்க கட்சியின் யாப்பின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. (ம)

### எதிர்கால தலைமுறை பெருமைப்படக்கூடிய

## நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளேன்

### –ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

(கொழும்பு)

எதிர்கால தலைமுறை பெருமைப் படக் கூடிய நாட்டை கட்டியெழுப்புவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு தனக்கு தெளிவான நோக்கு உள்ளது என்றும் அதனை தான் கொள்கை பிரகடனத்தின் மூலம் மக்களுக்கு முன்வைத்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். நேற்று முன் தினம பிற்பகல் கொழும்பில் இடம்பெற்ற ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவர்களுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஆனந்தா கல்லூரியின் சத்மஹால் கட்டிடத்தை மாணவர்களிடம் கையளிப்பதை முன்னிட்டு கல்லூரியில் இருந்து உருவான முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை வரவேற்கும் வகையில் இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பௌத்ததத்துவத்தின் அடிப்படையில் கல்லூரியில் கிடைத்த தேசிய உணர்வு தாய் நாட்டை நேசிக்கின்றவர்களை உருவாக்குவதற்கு உதவியதாக ஜனாதிபதி அவர்கள் குறிப்பிட்டார்.

"ஆனந்தா கல்லூரி எப்போதும் நாட்டை நேசிக்குமாறு மாணவர்களுக்கு போதிதத, பரம்பரை பரம்பரையாக தேசப்பற்றுள்ளவர்களை உருவாக்கிய பாடசாலை என்றும் தேசத்தின் தற்போதைய தலைவர என்ற வகையில் நாட்டை சிறப்பாக முன்கொண்டு செல்வதற்கு ஆனந்தா கல்லூரி தாயிடமிருந்து பெற்ற பலம் பெரும் உதவியாக அமைந்திருந்ததாகவும்" ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அயோமா ராஜபக்ஷ அம்மையார், சபாநாயகர் கருஜயசூரிய, பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாடசாலை பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**மரணம் என்னை விழுங்கும் வரை நான் ஒரு மாணவன்; படித்துக் கொண்டே இருப்பேன்.**

**-கார்ல் மார்க்ஸ்**

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

வவுனியா பிரதேசத்தில் புதுக்குளம் கோவில்குளம் கிராமம், கூமாங்குளம் கிராமம், பகல அளுத்வத்த கிராமம், இலுப் பைக்குளம், மதவுவைத்த குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- ❖ எளியோரின் நலனில் அக்கறை கொள்பவர் பேறு பெற்றோர். துன்ப நாளில் ஆண்டவர் அவரை விடுவிப்பார்.
- ❖ நாங்கள் கடவுளிடமிருந்து ஆறுதல் பெற்றுள்ளதால் பல்வேறு இன்னல்களில் உழலும் மற்ற மக்களுக்கும் ஆறுதல் அளிக்க முடிகிறது.
- ❖ தொலைவில் இருக்கும் உடன் பிறந்தாரை விட, அண்மையில் இருக்கும் நண்பரே மேல்.
- ❖ உன் சகோதரர்கள் ஏழ்மைப்பட்டு இளைத்துப் போனால், அவர்களுக்கு உதவு.
- ❖ ஆண்டவர் மேல் உன் கவலையைப் போட்டுவிடு அவர் உனக்கு ஆதரவு அளிப்பார்.
- ❖ மனத்தளர்ச்சியுள்ளவர்களுக்கு ஊக்கமூட்டுங்கள் வலுவற்றோருக்கு உதவுங்கள் எல்லோரோடும் பொறுமையாயிருங்கள்.
- ❖ அஞ்சாதீர்கள்! நில்லகுலையாதீர்கள்! இன்று ஆண்டவர் தாமே உங்களுக்காக ஆற்றும் விடுதலைச் செயலைப் பாருங்கள்.
- ❖ ஈகைக் குணமுள்ளோர் வளம்பெற வாழ்வர். குடிநீர் கொடுப்போர் குடிநீர் பெறுவர்.
- ❖ வாழ்வளிக்கும் நீரூற்றுகளுக்கு வழி நடத்திச் செல்லும் கடவுள், அவர்களின் கண்ணீர் அனைத்தையும் துடைத்துவிடுவார்.

# விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்




யா/மாரீசன்கூடல் சுப்பிரமணிய வித்தியாலயத்திற்கு மாணவர்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் முகமாகவும் பாடசாலைச் சமூகம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாகவும் யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகத்தினரால் பாடசாலைக்கு விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. (ஜ)

## ஒருநாள் தொடரை பறி கொடுத்தது இந்தியா பழி தீர்த்துக் கொண்டது நியூசிலாந்து!

இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் இந்திய அணி 22 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 273 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பில் ரோஸ் டெய்லர் 73 ஓட்டங்களையும், மார்டீன் குப்டில் 79 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சாஹல் 3 விக்கெட்டுக்களையும், தாகூர் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 274 என்ற வெற்றியிலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாட களமிறங்கிய இந்திய அணி 48.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 251 ஓட்டங்களை பெற்று 22 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பில் ஸ்ரேயஸ் ஐயர் 52 ஓட்டங்களையும், ஜடேஜா 55 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்திருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை நியூசிலாந்து அணி இரண்டுக்கு பூச்சியம் என்ற அடிப்படையில் கைப்பற்றியுள்ளது. (ஜ-2)

## நாவாந்துறை சென்.மேரிஸ் அணி கிண்ணத்தை சுவீகரித்தது




யாழ்.பிரதேச செயலகத்தால் பதிவு செய்யப்பட்டுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட தொடரில் துரையப்பா விளையாட்டு அரங்கில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் சென்.நீக்கிலஸ் அணியை எதிர்த்து சென்.மேரிஸ் அணி மோதியது. இரு அணியினரும் ஒன்றையொன்று விட்டுக் கொடுக்காது முழுப் பலத்துடன் மோதின.

மைதானத்தில் பெரும் பரபரப்பும் ரசிகர்களின் கரகோசங்களும் ஏற்பட ஆட்ட நேர முடிவில் 1-1 என்ற கோல் கணக்கில் ஆட்டம் சம நிலையில் முடிவுற்றதால் வெற்றியை தீர்மானிக்கும் சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. சம நிலை தவிர்ப்பின் போது சென்.மேரிஸ் அணி 5-4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. (ஜ-2-106)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## ஐ.பி.எல்.தொடர்களிலிருந்து ஆர்ச்சர் விலகல்



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சு சகலதுறை வீரர் ஜொப்ரா ஆர்ச்சர், மூன்று மாதங்கள் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறவுள்ளார்.

ஆர்ச்சரின் வலது முழங்கையில் ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக, அவரை வைத்தியர்கள் மூன்று மாதம் ஓய்வில் இருக்குமாறு அறிவுறுத்தியுள்ளனர். இதற்கமைய அவர் ஓய்வில் இருக்க தீர்மானித்துள்ளார்.

கடந்த மாதம், தென்னாபிரிக்கா அணிக்கெதிரான டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் 24 வயதுடைய இளம் வேகப் பந்துவீச்சாளரான ஜொப்ரா ஆர்ச்சர் விளையாடியிருந்தார்.

செஞ்சுரியனில் நடைபெற்ற இப்போட்டியின் போது ஜொப்ரா ஆர்ச்சருக்கு வலது முழங்கை பகுதியில் உபாதை ஏற்பட்டது. குறித்த போட்டியில் அவர் 6 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார்.

அதனை தொடர்ந்து உபாதை குணமடையாததன் காரணமாக இரண்டாவது, மூன்றாவது டெஸ்ட் போட்டிகளில் அவர் விளையாடவில்லை.


அதன் பின்னர் நான்காவது போட்டியிலிருந்து எஞ்சிய ஒருநாள்மற்றும்இருபது-20 சர்வ தேச தொடர்களிலிருந்து முழுமையாக அணியிலிருந்து விடுவிக்கப்பட்டு தென்னாபிரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு திருப்பி அனுப்பப்பட்டார்.

இந்நிலையில் இங்கிலாந்தில் வைத்து ஜொப்ரா ஆர்ச்சருக்கு மேற்கொள்ளப்பட்ட வலது முழங்கை ஸ்கான் பரிசோதனையில் குறித்த பகுதியில் அவருக்கு முறிவு ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து குறித்த முறிவு உபாதையிலிருந்து மீளுவதற்கு நீண்டகால ஓய்வு தேவைப்படுகிறது என்ற அடிப்படையில் இங்கிலாந்து அணியிலிருந்து அவருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், அடுத்த மாத இறுதியில் இங்கிலாந்து அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. குறித்த தொடரில் ஜொப்ரா ஆர்ச்சர் விளையாட மாட்டார்.

மேலும், இந்தியாவில் அடுத்த மாதம் 29 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரிலும் ஜொப்ரா ஆர்ச்சர் விளையாட மாட்டார் என இங்கிலாந்து கிரிக்கெட் அறிவித்துள்ளது. (ஜ-2)

## பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரருக்கு சிறைத்தண்டனை




பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் நசீர் ஜாம்ஷெட்டிற்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அவர் தன் மீதான சூதாட்ட புகாரை மறுத்து வந்த நிலையில் அவர் குற்றவாளி என பிரித்தானியாவின் மான்செஸ்டர் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டது.

இதனையடுத்தே அவருக்கு 17 மாத சிறைத்தண்டனையை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

நசீர் ஜாம்ஷெட் மீது கடந்த 2018 ஆம் ஆண்டு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விசாரணை நடத்தி, அவர் அனைத்துவிதமான கிரிக்கெட் போட்டிகளிலும் பங்கேற்க பத்து ஆண்டுகள் தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## தமிழ் மக்களுடைய எதிர்...

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் இலங்கைப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இருதரப்பு உறவு தொடர்பாக நேற்று சனிக் கிழமை முக்கிய பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்தியா-இலங்கை இடையிலான வார்த்தகம், பாதுகாப்பு, கடல்சார் பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடைபெற்றன.

சந்திப்புக்கு பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த பிரதமர் நரேந்திர மோடி கூறியதாவது.

இந்தியா மற்றும் இலங்கை அண்டை நாடுகள் மட்டுமல்ல, நெருங்கிய நட்பு நாடுகளும் கூட. இதுதரப்புக்கும் இடையே பல கருத்துகள் ஒரே மாதிரியாக அமைந்துள்ளன.

இந்தியா, இலங்கைப் பகுதிகளில் பயங்கரவாதம் மிகப் பெரிய அச்சுறுத்தலாக உள்ளது. இதற்கு இரு நாடுகளும் தக்க பதி லடி அளித்து வருகிறது. இனி வரும் காலங்களில் பயங்கரவாதத் துக்கு எதிரான கூட்டு நடவடிக்கை களில் இந்தியாவும், இலங்கையும் இணைந்து செயலாற்றும்.

இருநாடுகளுக்கு இடையிலான பொருளாதாரத் திட்டங்கள், வர்த்தக மற்றும் மூலதன ஒப்பந்தங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. மேலும் இருநாட்டு மக்களையும் இணைக்கும் விதமாக சுற்றுலா வளர்ச்சி குறித்தும் ஆலோசிக்கப் பட்டது என்று தெரிவித்தார்.

இலங்கையில் ஸ்திரத் தன்மை, பாதுகாப்பு மற்றும் செழிப்பு ஆகியவை இந்தியாவின் நலனுக்காகவும், ஒட்டுமொத்த இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் நலனுக்காகவும் முக்கியமானவை என்று மோடி தெரிவித்தார்.

இலங்கையின் வளர்ச்சியில் இந்தியா ஒரு நம்பகமான பங்காளியாக இருந்து வருவதாகவும், அமைதி மற்றும் மேம்பாட்டுக்கான பயணத்தில் நாட்டிற்கு தொடர்ந்து உதவுவதாகவும் அவர் கூறினார்.

நீண்டகாலமாக நிலுவையில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினையில், ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் சமத்துவம், நீதி, அமைதி மற்றும் மரியாதை குறித்த எதிர்பார்ப்புகளை இலங்கை அரசாங்கம் உணரும் என்று தான் நம்புவதாக மோடி கூறினார்.

மீனவர்கள் பிரச்சினை குறித்து குறிப்பிடுகையில், அதை கையாள்வதில் இரு தரப்பினரும் மனிதாபிமான அணுகுமுறையை பின்பற்ற முடிவு செய்துள்ளதாக மோடி கூறினார்.

பிரதமர் மகிந்தவுக்குகுடியரசுத் தலைவர் மாளிகையில் முறைப்படியான வரவேற்பு அளிக்கப் பட்டது. இதையடுத்து குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் உடன் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். பின்னர் மகாத்மா காந்தி நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்தினார். (ம)


SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1123
சீட்டிழுப்பு திகதி 08.02.2020 சனிக்கிழமை
N 04 20 32 42
7 2 7 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.94,944,868
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 877
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2020.02.08
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,248,700/-
வெற்றி இலக்கங்கள் 05 38 40 56 A

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3298 திகதி: 2020.02.08
பச்சை சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 04 20 25 38 X
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 32,162,090/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்
திகதி 08.02.2020 வெற்றி வாரம் 2763 வர்ணம் இளம் நீலம்
வெற்றி இலக்கங்கள் கும்பம் 19 24 46 55
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,000,000
2020/02/09 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919


# சீனாவில் உள்ள இலங்கை மாணவர்களுக்கு அவசர கோரிக்கை

(கொழும்பு)

சீனாவில் பரவி வரும் கொரோனா வைரஸ் பெருகி வருவதன் காரணமாக இலங்கைக்கு செல்ல விரும்பும் இலங்கை மாணவர்கள் இருப்பார்கள் என்றால் அது சம்பந்தமாக உடனடியாக அறிவிக்குமாறு பீஜிங்கில் உள்ள இலங்கை தூதரகம் கோரிக்கை விடுத்துள்ளது.

பீஜிங்கில் உள்ள சீனாவுக்கான பதில் தூதுவர் கே.கே.யோகநாதன், சீனாவில் தங்கியிருந்த 700க்கும் மேற்பட்ட மாணவர்கள் இலங்கைக்கு திரும்பிச் சென்றுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் சீனாவில் தங்கியிருக்கும் மாணவர்கள், சீன சுகாதார பிரிவினர் வழங்கும் ஆலோசனைகளை பின்பற்றுமாறு பதில் தூதுவர் அறிவுறுத்தியுள்ளார். (ம)

## இலங்கையில்...

தில் கொண்டுள்ளது.

இந்தியாவின் நம்பிக்கைக்குரிய நட்புறவு நாடாக இலங்கை இருந்து வருகிறது. இலங்கையின் அமைதிக்கும், மேம்பாட்டுக்கும் தொடர்ந்து இந்தியா துணை செய்யும்.

ஒன்றுபட்ட இலங்கையில் தமிழ் மக்களுக்கு உரிய மரியாதையை, நீதியை, சமத்துவத்தை, அமைதியை இலங்கை அரசு வழங்கும் என்று எதிர்பார்க்கிறோம். தமிழர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் என நம்புகிறேன் என்றார். (ம)

## தமிழ் மக்கள்...

போது இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ்த் தேசியக் கட்சி, அனந்தி தரப்புடன் இன்று கூட்டணி உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எப்பொழுதும் எம்முடன் இணையலாம். அதற்கு வாய்ப்புள்ளது. ஐங்கரநேசன் தலைமையிலான தமிழ்த் தேசிய பசுமை இயக்கம்எம்முடன் இணையவில்லையென அறிவித்துள்ளனர் என்றார். (ம)

## பாதுகாப்பு அமை...

சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். வடக்கு, கிழக்கிலுள்ள தொல்பொருள் சின்னங்களை பாதுகாப்பதற்கு இதுவே சிறந்த வழி என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பலபிட்டிய பகுதியில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பொன்றில் கருத்துரைத்த அவர்,

தொல்லியல் பாதுகாப்பு செயற்பாடுகளை உயர் ஒழுக்க விதிமுறைகளின் கீழ் முன்னெடுக்க வேண்டியது அவ்சியமெனவும், அதனால் அவற்றின் மீது முழுமையாக அதிகாரத்தை செலுத்தி பாதுகாக்க வேண்டியது அவசியம்.

இந்நிலையில் வடக்கு கிழக்கு பகுதிகளிலுள்ள தொல்லியல் சின்னங்களை பாதுகாப்பதே கடினமாக உள்ளது. வடக்கு, கிழக்கிலேயே அதிகளவான தொல்லியல் சின்னங்கள் இருக்கின்றன.

வடக்கு கிழக்கில், இன மத மோதல்கள் ஏற்படும் பட்சத்தில் தொல்லியல் சின்னங்கள் சிதைவடையலாம். அவற்றை பாதுகாத்தால் மாத்திரமே எதிர்கால சந்ததிக்கு வரலாறு தொடர்பாக தெரிவை வழங்க முடியுமெனவும் தெரிவித்தார். (ம)

# இறக்கை வடிவ இணைய நூலகம் விரைவில் ஏற்படுத்தப்படும்

## யாழ்.முதல்வர் ஆனல்ட்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பொது நூலகத்தை சர்வதேசமயப்படுத்தும் நோக்கில் இறக்கை வடிவிலான இணைய நூலகம் விரைவில் ஏற்படுத்தப்படவுள்ளதாக யாழ் மாநகர முதல்வர் இமானுவேல் ஆனல்ட் தெரிவித்தார்.

சுமார் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட புத்தகங்களை இணைய வசதியூடாகப் பார்த்து பயன்பெறும் நோக்கில் குறித்த செயற்திட்டம் இடம்பெறவுள்ளது.

இதன் மூலம் யாழ் பொது நூலகத்தின் பயன்களைச் சர்வதேச மட்டத்துக்கு கொண்டு செல்வதற்கும் தமிழ் மக்களின் பராம்பரிய பண்பாட்டு அம்சங்கள் அழிந்து விடாமல் பேணுவதற்கும் வாய்ப்பாக அமையும்.

கனேடிய தமிழ் அமைப்புக்கள் ஓர் இணைய இறக்கைக்கு அனுசரணை வழங்குவதோடு மற்றைய இறக்கைக்கு உலகத் தமிழர் பேரவை அனுசரணை வழங்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-10)

# தேசிய இந்து இளைஞர் மாநாடு நினைவு தின ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து ஸ்வயம்சேவக சங்கத்தின் தேசிய இந்து இளைஞர் மாநாட்டு நிறைவுதின ஊர்வலம் இன்றையதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும்.

யாழ் ஆரிய குளப்பகுதியில் ஆரம்பமாகும் குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் யாழ் போதனா வைத்தியசாலை வீதியூடாக கே.கே.எஸ் வீதிவரை சென்று தட்டாதெரு சந்தியூடாக யாழ் இந்து மகளிர் கல்லூரியை வந்தடையும். (ம-10)

## கோட்டா, மகிந்தவின்...

பாராளுமன்ற உறுப்பினர் தாரக பாலசூரிய தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியினர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரின் புகைப்படங்களை தமது பிரசாரங்களுக்கு பயன்படுத்தி வருகின்றனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமது தலைவரின் புகைப்படத்தை பயன்படுத்தி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட வேண்டும்.

இன்னும் ஒன்றரை அல்லது இரண்டு ஆண்டு களில் அணி மாறுவோர், பொதுஜன பெரமுனவின் தலைவர்களது புகைப்படங்களை பயன்படுத்தி அரசியலில் ஈடுபடக் கூடாது எனவும் தாரக பாலசூரிய குறிப்பிட்டுள்ளார். (ம)

## தமிழர் - சிங்களவர் சேர்...

யத்தை கூட்டமைப்பு பேனாவால் அடைய முனைகின்றார்கள் என்று தெரிவித்திருக்கின்றார்.

வாக்குஎன்ற பலமான ஆயுத்தின் மூலம்எமது இருப்பினை நாங்கள் நிலைநிறுத்திக்கொள்ள வேண்டும். உலக விடுதலைப் போராட்டங்களிலும் ஆயுத்தால் அடைய முடியாததால் வாக்குப் பலத்தால் அடைந்திருக்கின்றார்கள்.

அதுபோல எமதுமக்களும் இந்த வாக்குப்பலத்தால் எமது உரிமைகளை வென்றெடுப்பார்கள்.

இந்த கோட்டாபய அரசானது சிங்கள மக்களுடன் தமிழ் மக்கள் இணைந்து வாழவிரும்புகின்றார்களா இல்லையா என்று வடக்கு கிழக் குத் தமிழர்கள் இடையே ஒரு சர்வ ஜன வாக்கெடுப்புக்கு வருவார்களாக இருந்தால் அதனை எதிர்கொள்ள நாங்கள் தயாராக இருக்கின்றோம் எமது மக்களும் அதற்குத்த குந்த பாடத்தைபுகட்டுவார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-315)


செவண
திகதி 08/02/2020
சீட்டிழுப்பு இலக்கம் 260
P 06 10 56 65
NATIONAL LOTTERIES BOARD

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020/02/08
சீட்டிழுப்பு இலக்கம் 1502
24 12 18 51 56 21 41
NATIONAL LOTTERIES BOARD

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 08/02/2020
சீட்டிழுப்பு இலக்கம் 1016
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 0 6 9 7 4 0
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 08-02-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2386
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 01 04 39 67
தேசிய லொத்தர் சபை

# தொழில் வழங்கும் பட்டதாரிகளின் வயதெல்லையை 45 ஆக உயர்த்துக

## ஜனாதிபதி கோட்டாபயவிடம் கோரிக்கை

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்கும் வயதெல்லையை 45 ஆக உயர்த்துமாறு பட்டதாரிகள் தேசிய நிலையம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வேலையற்ற பட்டதாரிகளை அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளும் நிகழ்ச்சித் திட்டத்துக்கமைய 35 வயதுக்குட்பட்ட வர்களை இணைத்துக் கொள்வதென தீர்மானிக்கப்பட்டிருப்பதை 45 வயதாக உயர்த்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பட்டதாரிகள் தேசிய நிலையம் நேற்று ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தின் மூலம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இத் திட்டத்தின் கீழ் 50,000 பட்டதாரிகளை இணைத்துக் கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருக்கும் நிலையில் இதனை துரிதமாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இந்தத் திட்டத்தை வரவேற்றிருக்கும் பட்டதாரிகள் தேசிய நிலையம், ஜனாதிபதிக்கு விடுத்திருக்கும் கோரிக்கையில், நீங்கள் எடுத்திருக்கும் இந்த நடவடிக்கையை வரவேற்கின்றோம். பொறுப்புள்ள அரசாங்கம் என்ற அடிப்படையில் இந்தத் திட்டம் முக்கியமானதாகவே கருதுகின்றோம்.

ஆனால், இந்த ஆட்சேர்ப்பு திட்டத்தில் காணப்படும் விதிமுறைகள் முரண்பாடாகக் காணப்படுவதை உணர்கின்றோம். சில வாரங்களுக்கு முன்னர் அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்தில், 45 வயதையுடைய பட்டதாரிகள் சேர்த்துக் கொள்ளப்படுவரென தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், அமைச்சரவை தீர்மானத்தின் படி அந்த எல்லை 35 வயதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2015, 2019 காலப் பகுதியில் வேலையற்ற பட்டதாரிகள் ஒரு முறையற்ற விதத்திலேயே அரச சேவைக்கு இணைத்து கொள்ளப்பட்டனர். அந்த ஐந்தாண்டு காலத்தில் 35 வயதைத் தாண்டிய பட்டதாரிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டதாகவே நாங்கள் கருதுகின்றோம்.

எனவேதான் நாங்கள் வேலையற்ற பட்டதாரிகளின் வயதெல்லையை 45 ஆக அதிகரிப்பதற்கு கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம். (ம)

# இளம் தாய் ஒருவர் அரியாலையில் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இளம் தாய் ஒருவர் தற்கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அரியாலை பகுதியை சேர்ந்த 31 வயதான நகுலேஸ்வரன் நிரோஜினி என்பவர் தூக்கில் தொங்கிய நிலையில் உயிரிழந்துள்ளார். இவர் ஒரு பிள்ளையின் தாய் என தெரிவிக்கப்படுகிறது.

கணவரும் தாயாரும் வேலைக்காக சென்றுவிட மகன் கல்வி நிலையத்திற்கு சென்றிருந்தபோது இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சடலம் காணப்பட்ட இடத்தில் கடிதம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. என்னுடைய சாவுக்கு யாரும் காரணம் இல்லை, நான் அப்பாவிடம் செல்கிறேன், கணவர், தாய் ஆகியோரிடமும் மன்னிப்புக் கேட்கிறேன். மகனை நன்றாக பார்க்குமாறும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம)

## விசாரணை நடத்தாமை தொடர்பில்

# ஹிருணிகா பிரேமச்சந்திர ஐ.நாவில் முறைப்பாடு

(கொழும்பு)

தனது தனிப்பட்ட தொலைபேசி உரையாடலை திரிபுபடுத்தியமை மற்றும் பகிரங்கப்படுத்தியமை சம்பந்தமாக குற்றவியல் விசாரணை திணைக்களத்தில் செய்த முறைப்பாடு குறித்து விசாரணை நடத்தாமை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனை தவிர ஐக்கிய நாடுகள் அமைப்பிலும் எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

இந்தத் தொலைபேசி உரையாடல் பகிரங்கப்படுத்தப்பட்டால், தனக்கும் தனது குடும்ப உறுப்பினர்களுக்கும் அசௌகரியம் ஏற்பட்டுள்ளதாகவும் தனக்கு சமூக ஊடகங்கள் வாயிலாக கொலை அச்சுறுத்தல் கூட விடுக்கப்பட்டுள்ளதாக ஹிருணிகா தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் கடந்த ஜனவரி 23 ஆம் திகதி ஹிருணிகா இந்த சம்பவம் தொடர்பாக இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவிலும் முறைப்பாடு செய்திருந்தார். (ம)


**மணமகன் தேவை**

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976ஆம் ஆண்டு பிறந்த, குடும்பப் பாங்கான, ஆசிரியராக கடமை புரியும் மணமகளுக்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றோம். (2083)

Tel - 0773405951

Email - engchelvam@gmail.com

**தனியார் நிறுவனத்துக்கு ஊழியர்கள் தேவை**

மோட்டார் வாகனக் காட்சியறையில் வேலை செய்வதற்குத் தகுதியான ஆட்கள் தேவை.

- மானிப்பாய், சங்கானை பகுதிகளில் வசிப்போர் விரும்பத்தக்கது.
- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 075 761 1100 (C-9188)

**விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு




UK - 550*/=Kg

(நிபந்தனைகளுக்குட்பட்டது)

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
- நெல்லியடி • கொடிகாமம் • திருகோணமலை
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • மானிப்பாய்
- மருதனார்மடம் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

0768226240 V2 TRAVELS (C-8785)

**New Bright Education Centre**

பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(தண்ணீர்த்தாங்கி அருகில்)

யாழ் நகரின் முன்னணி ஆசிரியர்களின் தனித்துவமான வழிகாட்டலில்

வர்த்தகப் பிரிவு

A/L - 2020, A/L - 2021, A/L - 2022

பொருளியல் :- திரு.V.ஜெகதீஸ்

வணிகக்கல்வி :- திரு.S.K.பாலசபேஷ்

கணக்கீடு :- MR.BALAKAJEN

புதிய பிரிவுகள் ஆரம்பம்

08.02.2020 சனி மதியம் 12 மணி

T.P :- 077 024 8414 (C-9179)

**CHEMISTRY & PHYSICS**

Personal & Group Classes

(2072) தொடர்புகளுக்கு

076 322 0916

**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை மந்திகைச் சந்தியில் பிரதான வீதிக்கு அண்மையில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 959 6844 (C-9182)

**வேலை ஆட்கள் தேவை**

யாழ்.நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர்கள் உடன் தேவை.

மேலும் சிட்டை எழுதுநர் ஆண், பெண் உடன் தேவை. (C-9192)

தொடர்புக்கு:-

077 834 8789

**பிரதேச செய்தியாளர்களை நியமித்தல்**

வலம்புரி பத்திரிகையின் பிரதேச செய்தியாளர்களாக பணியாற்றுவதற்கு பொருத்தமும் விருப்பமும் உடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

செய்தியாளர்களாக செயற்பட விரும்புகின்றவர்கள்

தமது முழுப்பெயர்,
நிரந்தர முகவரி,
பால்,
பிறந்த திகதி,
தே.அ.அ.இலக்கம்,
தொலைபேசி இலக்கம்
கல்வித் தகைமை, தொழில்

போன்ற விபரங்களை உள்ளடக்கியதான விண்ணப்பத்தை எதிர்வரும் 20.02.2020ஆம் திகதிக்கு முன்னதாக

பிரதம ஆசிரியர்,
வலம்புரி நாளிதழ்
இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

எனும் முகவரி இட்டு சாதாரண தபால் மூலமாகவோ அன்றி நேரிலோ ஒப்படைக்கவும்.

குறிப்பு: செய்தியாளராகச் செயற்படுவதற்கு ஆர்வமுடையவர்கள் விரும்பினால் குறுங்காலப் பயிற்சி வழங்கப்படும்.

பொதுமுகாமையாளர்
வலம்புரி

**சாவகச்சேரியில்...**

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576



அருள்

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-9122)

**மஜஸ்ரிக் விரைவுப் பொதிகள் சேவை**

5 kg / 10kg க்கு மேல் கிலோவுக்கான கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது

5kg க்கு மேல் 1கிலோவுக்கான கட்டணம்

பிரான்ஸ்- ஜேர்மனி- டென்மார்க்- கொலன்ட்- பெல்ஜியம்- ரூ.750

இத்தாலி- சுவீடன்- ரூ.850 லண்டன் -ரூ.650 சுவிஸ்- ரூ.1000

கப்பல் ஊடாக பொதிகளை அனுப்பிடவும் தொடர்புகொள்ளவும்

டிஸ்ரிவி(DishTv), மின்சாரம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும்

யாழ்-கொழும்பு ஆசனப் பதிவுகளுக்கும், பொதிகளை அனுப்பிடவும்

வெளிநாடு, உள்நாடுகளுக்கான பொதிகளை விரைவாகவும் குறைந்த செலவிலும் அனுப்பிட பெற்றுக்கொள்ள தொடர்புகொள்ளவும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 976,KKS வீதி யாழ்ப்பாணம் 070 3305500 | 72,பலாலி வீதி யாழ்ப்பாணம் 075 5522999 | பிரதான வீதி சங்கானை 075 3305500 | 355, A9 வீதி கிளிநொச்சி 075 5522999 | முல்லைத்தீவு கனகராயன்குளம் மன்னார் | சென்றல் வீதி கொழும்பு 12 070 3305500 |

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532

**Wanted Teachers (only female)**

Teachers for Montessori (English Medium - AMI Method மூலம் கற்பித்தல்)

பாலர் பாடசாலையில் கற்பித்தலில் அனுபவமுள்ளவர்களும் AMI முறைமையில் கற்றுக் கொண்டு கற்பிக்க விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

1. ஆங்கில அறிவு தேவை.
2. பாலர் பாடசாலையை கொண்டு இயக்கும் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

உங்கள் சுயவிபரக்கோவையினை கீழ்க்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது 154, Brown Road, Jaffna. எனும் முகவரிக்கு அனுப்பவும். (C-9185)

T.P: 0772444172, 0212226242 | Email: aerolankajaf@gmail.com


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 264

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2051 | 09.02.2020 | தொலைபேசி : 021 222 3378



# அதட்டுமா இந்தியா



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

விதானையார் விசுவலிங்கத்தின் முகம் காய்ந்து போயிருந்தது. இதனை அவதானித்த பண்டிதர் பரமலிங்கம் என்ன விதானையார் ஒரு மாதிரியாக இருக்கிறியள் என்றார்.

**விதானையார்:** என்ன பண்டிதர் ஐயா செய்யிறது. எங்கட இளம் பிள்ளையள் தங்கட உயிரை மாய்க்கிற கொடுமை கண்டு இதயம் கருகிப் போகுது. எத்தனையோ கஷ்டங்கள் துன்பங்களைத் தாங்கி பிள்ளைகளைப் பெற்று வளர்க்க, அந்தப் பிள்ளைகள் தங்கட உயிரை மாய்க்கினம் எண்டால் பெத்தமனம் என்ன பாடுபடும்.

(விதானையார் இவ்வாறு கூறியதும் ஆலடி மாநாடு சோகமயமானது. அந்த சோகம் மௌனமாகிப் போக, மௌனத்தைக் கலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்)

**வாத்தியார்:** பாடசாலை மாணவர்கள் தற்கொலை செய்கின்ற கொடுமையை என்னவென்று சொல்லுறது. தாய் பேசினார், தந்தை கண்டித்தார் என்ற காரணங்களைச் சுட்டிக்காட்டிக் கொண்டு, இளம் பிள்ளைகள் தங்கட உயிரை மாய்க்கினம் எண்டால், இதை விட்ட கொடுமை வேறு என்ன இருக்க முடியும்.

**மூப்பர்:** ஒரு கணப் பொழுதில எடுக்கிற முடிவு அந்தக் குடும்பத்தை வேதனையின்ர எல்லைக்குக் கொண்டு போய் விட்டிடுது. தங்களைப் பெற்று வளர்த்த தாய் தந்தையரை ஒருக்காலேனும் நினைத்தால் உயிரை மாய்க்கிற விபரீத முடிவுகளை எந்தப் பிள்ளையும் எடுக்காது.

**கங்காணி:** நாங்கள் என்ன செய்யிறது. இப்பதானே ஒவ்வொரு பிள்ளையளிட்டையும் கையடக்கத் தொலைபேசி, முகநூல், இணையம் எண்டு. அதோட காலத்தைக் கழிக்கிறதாக நிலைமை வந்திட்டுது.

**சாத்திரியார்:** இந்தக் கோதாரிபோன கையடக்கத் தொலைபேசிப் பாவனையும் எங்கட இளம் பிள்ளைகள் விபரீத முடிவை எடுக்கிறதுக்குக் காரணமாக இருக்குது எண்டுதான் நான் சொல்லுவன்.

**பண்டிதர்:** அண்மைக் காலமாக எங்கட மண்ணில நடக்கிற தற்



## எழுவைதீவு முருகமூர்த்தி பாடசாலையை முடக்கிவிட பாதிரியார் ஒருவர் முயற்சி

கொலைகள் தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சமுதாய மருத்துவப் பிரிவு தக்க ஆய்வை மேற்கொண்டு தற்கொலை மரணங்களை கணிசமாகக் குறைக்கின்ற முயற்சிகளைச் செய்ய வேணும். இல்லையெண்டால் இதொரு தொற்றுநோய் மாதிரிப் பரவிப் போடும் கவனம்.

(பண்டிதரின் எச்சரிக்கையைத் தொடர்ந்து சிறாப்பர் கனகசபை குரல் கொடுத்தார்)

**சிறாப்பர்:** முன்பெல்லாம் பிள்ளைகளுக்குச் சொந்தபந்தங்கள் எண்டு ஒரு சமூகம் இருந்தது. இப்ப விடிஞ்சாப் பொழுது பட்டால் தொலைபேசிக்குள்ளும் தொடர் நாடகங்களுக்குள்ளும் நாம் முகத்தைப் புதைத்துக் கொண்டிருந்தால் மனம் மீளாத் துயருக்கு ஆட்பட, சிறு கஷ்டத்தையே தாங்க முடியாத கட்டம் ஏற்பட, உயிரை மாய்க்கிறதுதான் ஒரே வழி எண்டு எங்கட பிள்ளைகள் நினைக்கினம்.

**சாத்திரியார்:** அதுமட்டுமல்ல சிறாப்பர் முந்தின காலத்தில கோயில், குளம், கூட்டுப் பிரார்த்தனை எண்டு மனதை ஆறுதல்படுத்துறதுக்குப் பல ஏற்பாடுகள் இருந்தன. இப்ப பிள்ளையள் கோயிலுக்கே போகாத காலம். அப்ப என்ன செய்யிறது.

**கங்காணி:** இப்ப மத வெறி இருக்குதே தவிர, மக்களை வழிப்படுத்துகிற சமயங்கள் இல்லை.

(கங்காணி இவ்வாறு கூறியதும் அதனைப் புரிந்து கொள்ளமுடியாத விதானையார் என்ன கங்காணியார் சொல்லுறியள் என வினவினார்)

**கங்காணி:** தீவுப் பகுதியில பணியாற்றுகிற ஒரு பாதிரியார் சைவப்பள்ளிக்கூடங்களை எல்லாம் மூடுவித்துக் கத்தோலிக்கப் பாடசாலைகளை மட்டும் இயங்க வைக்கிற முயற்சியில கடுமையாக ஈடுபட்டு வருகிறதாக தீவுப்பகுதியில இருக்கிற சைவ மக்கள் பெரும் கவலை கொண்டிருக்கினம்.

**மூப்பர்:** என்ன கங்காணியார் சொல்லுறியள்.

**கங்காணி:** ஓம் மூப்பர். தீவுப் பகுதியில இருக்கிற சைவ- கத்தோலிக்க மக்கள் எவ்வளவு ஒற்றுமையாக இருந்தினம். சைவ மக்கள் தேவாலயங்களுக்கும் கத்தோலிக்க மக்கள் சைவாலயங்களுக்கும் சென்று வழிபட்டு எந்தவித மத பேதமுமின்றி தீவகத்தின் பண்பாட்டைப் பாதுகாத்தினம். ஆனால் எண்டைக்கு அந்தப் பாதிரியார் தீவகத்திற்கு வந்தாரோ அண்டைக்குத் தீவகத்திற்குப் பிடித்த நாசம் எண்டு தீவக மக்கள் சொல்லுகினம்.

**பண்டிதர்:** கங்காணியார் சொல்லுற விடயத்தில நாங்கள் கவனம் செலுத்த வேணும். ஏனெண்டால் இதுபற்றி நானும் கேள்விப்பட்டனான். எழுவைதீவில இருக்கிற முருகமூர்த்தி வித்தியாலயத்தை மூடிவிட்டு, அங்க இருக்கிற கத்தோலிக்கப் பாடசாலையை மட்டும் இயங்க வைக்கிற முயற்சியில குறித்த பாதிரியார் தீவக ஒருங்கிணைப்பு எண்ட பெயரால செய்யிறாராம்.

ஏற்கனவே தலைத்தீவிலும் அல்லைப்பிட்டியிலும் சைவப்பாடசாலைகளின்ர ஆயுளை முடிக்கிற அளவில அந்தப் பாதிரியார் செய்துவிட்டதாகவும் கேள்வி.

**வாத்தியார்:** இதுபற்றி எங்கட தேமகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை நடவடிக்கை எடுக்க வேணும் எண்டு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவம்.

அத்தோடு சைவ-கத்தோலிக்க மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துகின்ற நன்முயற்சிகளை இரண்டு சமயத் தலைவர்களும் முன்னெடுக்க வேண்டும் எண்ட தீர்மானத்தையும் இங்கு நிறைவேற்றுவது முக்கியம். எண்டு நான் நினைக்கிறன்.

வாத்தியார் இவ்வாறு கூறியதும் குறித்த தீர்மானத்தை ஆலடி மாநாடு ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

**மூப்பர்:** கொழும்பு கம்பன் கழகத்தில பாரதி கிருஷ்ணகுமார் என்ற அறிஞர் ஒருவர் உரையாற்றுகையில்; நான் சைவக் குடும்பத்தைச் சேர்ந்தவன். ஆனால் நான் இன்று இந்த இடத்தில் நின்று பேசுவதற்கு யோசப் வாத்தியார் என்ற கத்தோலிக்க சமயம் சார்ந்தவர்தான் காரணம். என் சிறு வயதில் எனது முதலாவது பேச்சை யோசப் வாத்தியார் எழுதித் தந்தார். அவர் எழுதித் தந்த பேச்சு தாஜ்மஹால். இது இஸ்லாம் சார்ந்தது.

ஆக, எனது வாழ்வு என்பது சைவம், கத்தோலிக்கம், இஸ்லாம் மூன்றும் சேர்ந்தது என்று கூறிய போது, அந்தச் சபையிலே இருந்தவர்கள் தங்களை மறந்து கண்ணீர் விட்டினம்.


ஆனால் தீவகத்தில இருந்த சமய ஒற்றுமையை சுந்தறுத்து நரகத்துக்குப் போற வேலையைச் சிலர் செய்யிறதுதான் மிகப் பெரும் வேதனையைத் தருகுது.


இவ்வாறு மூப்பர் கூற, மூப்பரின் கருத்து உண்மையானதெனக் கூறுவது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.


ஆதித்தன்

# தேர்தல் மணி ஓசை கேட்கிறது









பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலுக்கான அறிவிப்பை விடுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தயாராகி வருகிறார். எதிர்வரும் மார்ச் இரண்டாம் திகதி பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற அறிவிப்புக்கள் வெளிவரலாம் என நம்பப்படுகிறது.

பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்துவதன் மூலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பாராளுமன்றத்தில் பெற்றுக்கொள்வதே ராஜபக்ஷ தரப்பின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

அதேநேரம் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் ஏற்பாடுகள் மும்முரமாக இருந்தாலும் உடன்பிறந்தே கொல்லும் வியாதி போல, ரணில் விக்கிரமசிங்க அந்தக் கட்சியின் பொறுப்பான பதவிகளில் இருக்கும் வரை ஐக்கிய தேசியக் கட்சி உருப்படுவதை அவரே தடுத்தாட்கொள்வார் என்பது அரசியல் நோக்கர்களின் கருத்து.

இந்நிலையில் எதிர்வரும் பொதுத்தேர்தல் எந்தளவு தூரம் தென்பகுதியில் சூடுபிடிக்குமோ அந்தளவிற்கு தமிழர் தாயகத்திலும் தேர்தல் சூடு பிடிக்கும் என்பதைக் கூறியாகலாம்.

கடந்த கால தமிழர் அரசியல் என்பது ஆரோக்கியமானதாக இல்லை என்பதை தமிழ் மக்கள் மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளனர்.

அரசியலமைப்புச் சீர் திருத்தத்தினூடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று கூறிக் காலம் கடத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் நலன் சார்ந்த விடயங்களை இம்மியும் கவனிக்கவில்லை என்பது ஏற்புடைய உண்மை.

தவிர, ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துடன் சேர்ந்திருந்த கூட்டமைப்பால் தமிழ் அரசியல் கைதிகள் எவரையும் விடுவிக்க முடியவில்லை எனும் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பயனற்றது என்றாகி விடுகிறது.

சரி, கூட்டமைப்பால் தமிழ் மக்களுக்கு எதனையும் பெற்றுக் கொடுக்க முடியவில்லை என்றால் பரவாயில்லை என்று விட்டு விடலாம். ஆனால் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகக் கூட்டமைப்பினர் இருந்ததன் காரணமாக, ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவை விதித்த நிபந்தனைகளை இலங்கை அரசு நிறைவேற்றுவதற்குக் கால அவகாசம் வழங்கப்பட்டது.

இதனால் கிடைக்க வேண்டியதையும் கெடுத்த சீதக்காதிகள் என்று கூறுமளவிற்கு கூட்டமைப்பின் அரசியல் செயற்பாடுகள் அமைந்திருந்தன.

அதேநேரம் தங்களின் அரசியல் செயற்பாடுகளை தமிழ் மக்கள் விரும்பவில்லை என்ற உண்மையைக் கூட்டமைப்பினர் உணர்ந்திருந்ததன் காரணமாக எதிர்வரும் பொதுத்தேர்தலை எதிர்கொள்ளும் பொருட்டு மிகப்பெரும் ஏற்பாடுகளில் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் ஈடுபட்டுள்ளதான தகவல்களும் உண்டு.

எதுவாயினும் நடைபெறுகின்ற தேர்தல்களின் முடிவுகளில் மாற்றங்களைச் செய்யக் கூடியவர்களாக மாவட்டச் செயலர்களும் வாக்குகளை எண்ணி முடித்தபின் அவற்றைப் பதிவேற்றம் செய்கின்ற அதிகாரிகளும் உள்ளனர் என்ற தகவல்கள் பொதுமக்கள் மத்தியில் பரவலாக உண்டு.

இத்தகைய தகவல்கள் வெறும் புனைவுகளாக இருந்தாலும் அவை புனைவுகள்தான் என்பதை உறுதி செய்யக்கூடியதான தெளிவுபடுத்தல்கள் எதுவும் இதுவரை நடந்தாகவில்லை.

ஆம், கடந்த பொதுத் தேர்தலின் போதுகூட தமிழர் தரப்பில் ஒருவருக்குக் கிடைத்த வெற்றியை இன்னொருவருக்கு மாற்றப்பட்டதான தகவல்களும் இதற்காக வாக்கெண்ணும் பணிக்குப் பொறுப்பாக இருந்த அதிகாரிக்கு ரூபா பத்து இலட்சம் வழங்கப்பட்டதான தகவல்களும் இன்றுவரை பேசப்படுகிறது.

இது எந்தளவுக்கு உண்மை என்பது நிரூபிக்கப்படவில்லை என்ற அதேநேரம், அவை முற்றுமுழுதும் பொய் என்பதும் நிரூபிக்கப்படவில்லை என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஆக, தேர்தல் நடவடிக்கைகள் வாக்களிப்பு வரையிலுமே கண்காணிக்கப்படுகிறது. மாறாக வாக்கெடுப்பு முடிந்து வாக்குகளை எண்ணுகின்ற பணியும் அந்த எண்ணிக்கைகளை மாற்றம் ஏதுமின்றி பதிவு செய்வது வரையான கருமங்களும் அதித கவனிப்புக்கு உட்படாமையால் கண்ணில் மண்ணைத் தூவுதல் நடக்கவே செய்கிறது என்பதையும் இங்கு நாம் ஏற்றுத்தானாக வேண்டும்.

எது எவ்வாறாயினும் எதிர்வரும் காலங்களில் தேர்தல்களைக் கண்காணிக்கும் அமைப்புக்கள் வாக்குகள் எண்ணப்படும் இடங்களில் முகாமிட்டிருந்து கண்காணிப்பைச் செய்யா விட்டால், எவ்வளவுதான் மக்கள் நேர்மையாக வாக்களித்தாலும் அதனால் எந்தப் பிரயோசனமும் ஏற்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட விபரங்களை முன்வைத்தே மாவட்டச் செயலர்களை இடமாற்றுகின்ற நடவடிக்கை இடம்பெறுகிறது. எனினும் இடமாற்றம் மட்டும் அரச உயர் அதிகாரிகளின் நேர்மைத்தனத்தை உறுதி செய்து விடும் எனக் கூறிவிட முடியாது என்பதால், தேர்தல் கண் காணிப்பு என்பது வாக்குகள் எண்ணப்பட்டு பதிவு செய்யப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் வரை விஸ்தரிக்கப்படுவது கட்டாயமாகிறது.

இவை ஒருபுறமிருக்க, எதிர்வரும் பொதுத்தேர்தல் தமிழர் தாயகத்திலும் கடும் சூடு பிடிக்கும் எனக் கூறியிருந்தோம். இதனை உறுதி செய்வதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பதிலீடாக அல்லது மாற்றுத் தலைமையாக நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான கூட்டணி களமிறங்கவுள்ளது.



அதேநேரம் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனுடன் கூட்டு வைப்பது சாத்தியமில்லை என்று அறிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கான மாற்றுத் தலைமை தாமே என அறிவித்துள்ளார்.

யார் எங்ஙனம் அறிவித்தாலும் கூட்டமைப்பிற்கான பதிலீடு அல்லது மாற்றுத் தலைமை யார் என்பதை தமிழ் மக்களே தீர்மானிப்பர். இதனைத் தேர்தல் முடிவுகள் உறுதி செய்யும் என்பதே சரியான மதிப்பீடாகும்.

தவிர, வரப்போகும் பொதுத் தேர்தல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள்ளும் பலத்த முரண்பாடுகளை ஏற்படுத்தும் என்பது மறுக்க முடியாத உண்மை.

அதாவது கூட்டமைப்பிற்குள் இருக்கக்கூடிய முக்கியஸ்தர்களிடையே சில முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதான தகவல்கள் வெளிவந்துள்ளன. இதனை உறுதி செய்வதாக ஊடகச் செய்திகளும் அமைந்துள்ளன.

ஆக, எதிர்வரும் பொதுத் தேர்தல் கடும் போட்டி நிறைந்ததாக இருக்கும் என்பதற்கு அப்பால், தமிழ் மக்களும் விழிப்போடு செயற்பட்டு தமக்கான அரசியல் பிரதிநிதித்துவத்தைத் தெரிவு செய்யவேண்டியவர்களாக இருப்பர் என்பது நிதர்சனமான உண்மை.

**விதுரன்**

# தைரியம்



ஒரு ஊரில் அரசன் ஒருவன் இருந்தார். அதிகாலையில் எழுந்தவுடன் சூரிய உதயத்தைப் பார்ப்பது அவரது வழக்கம்.

வழக்கம் போல் அன்றும் சாளரத்தைத் திறந்த அரசருக்கு ஏமாற்றம்! சூரிய உதயத்துக்குப் பதில் அவர் கண்களில் ஒரு யாசகன் தான் தோன்றினான். போயும் போயும் இவன் முகத்தில் தான் விழிப்பதா? என்று கடும் வெறுப்புடன் திரும்பினார் அரசர். திரும்பிய வேகத்தில் சுவரில் அவரது தலை அடிபட்டு இரத்தம் கொட்டியது... வலியோ பொறுக்க முடியவில்லை. அத்துடன் கோபம் வேறு பொங்கியது...

யாசகனை இழுத்து வருமாறு கட்டளையிட்டார். காவலர்கள் அவனை இழுத்துக் கொண்டு வந்து மன்னர் முன்னே நிறுத்தினர். அரச சபை கூடியது. தனது காயத்துக்கு காரணமாக இருந்த அந்த யாசகனை தூக்கிலிடுமாறு தண்டனையும் கொடுத்தார்.

யாசகன் கலங்கவில்லை. கலகலவெனச் சிரிக்கத் தொடங்கினான். சபையில் இருந்தவர்கள் திகைப்புடன் விழித்தனர். அரசனுக்கோ. .கோபம் கட்டுக்கடங்காமல் போய் விட்டது... பைத்தியக்காரனே! எதற்குச் சிரிக்கிறாய் என்று ஆத்திரத்துடன் கேட்டார்.

அரசே! என் முகத்தில் விழித்ததால் உங்கள் தலையில் சிறு காயம் மட்டும் தான் ஏற்பட்டது. ஆனால், உங்கள் முகத்தில் நான் விழித்ததால். என் தலையே போகப் போகிறதே...அதை நினைத்தேன் சிரித்தேன் என்றான். மன்னன் தலை தானாகவே கவிழ்ந்து விட்டது. தவறை உணர்ந்தவன் தண்டனையை இரத்துச் செய்து யாசகனை விடுவித்தான்.

தைரியம் என்பது தன்னம்பிக்கைக்கு மறுபெயர். அது இல்லையென்றால், சமயத்தில் உயிரைக் கூட காப்பாற்றிக் கொள்ள முடியாமல் போய்விடும்.




## கங்கையை கொணர்ந்த பகீரதன் தவம்



நீரின் அருமையை புராணங்கள் விளக்க தவறுவதில்லை. கங்கை எனும் தேவலோக நதியை கொணர்வதற்காக பகீரதன் பெரும்பிரயத்தனத்தை மேற்கொண்டார். எம்மவர்கள் நீரை நீராகப் பார்க்காது தீர்த்தம் என்று ஏற்றம் கொடுத்துப் பார்த்து, தெய்வமாக வணங்கியது. பாவம் போக்கி புண்ணியம் சேர்க்கும் புனிதனாகப் பார்த்தது. பெரும் ஞானியர் அனைவரும் நீரை வணங்கி உள்ளனர். நதிகள் பல இப்பூமியில் இருந்தாலும் காசியில் உள்ள கங்கை மிக முக்கிய நதியாகக் கொள்ளலாம்.

சூரியவம்சத்தில் வந்த வாளை சகரன் தன்னுடைய வம்ச விருத்திக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் அசுவமேதயாகம் செய்து மிகப் பலசாலியாக நாட்டை ஆண்டு வந்தான். இந்திரன் தனது பதவியை பறித்து விடுவானோ எனப் பயந்து அசுவமேத யாகத்திற்கு பயன்படுத்தப்படும் குதிரையை மறைத்தான். சகரன் தனது பிள்ளைகள், ஊரவர்களை குதிரையைத் தேடும்படி பணித்தான். பூ மண்டலத்தில் குதிரையைக் காணாதவர்கள் பாதாளத்தில் தேடும் போது அங்கே தவமியற்றிய கபில முனி வரின் ஆச்சிரமத்தில் குதிரையைக் கண்டு இவர் தான் திருடி வைத்திருக்கிறார் என போர் செய்து அனைவரும் மாண்டு போயினர். சகரன் தான் அனுப்பியவர்களைக் காணாது மற்றும் ஒரு மகனான அசமஞ்சனிடம் விடயத்தைக் கூறி தனது பிள் ளைகளை மீட்டு வரும்படி ஏவினான். சமஞ்சன் புத்திசாதுர்ய மானவன். பாதாளத்தை அடைந்து கபில முனிவரிடம் சென்று வணங்கி நின்றான்.

கபில முனிவர் குதிரையைக் காட்டி மற்றையோர் இறந்த செய்தியைக் கூறி அவர்களது சாம்பல் மேட்டைக் காட்டி ஆகாய கங்கையை கொணர்ந்தால் இவர்கள் மீண்டு எழுவர் எனக் கூறினார். குதிரையை மீட்க முடிந்தது. ஆனால் கங்கையைக் கொணரமுடியவில்லை. அவன் இறந்து போனான். அவனுடைய பேரனும் தீலிபனின் மகனுமான பகீரதன் "நான் எப்படி யாவது கங்கையைக் கொணர்வேன்" என தவமியற்றினான். குளிந்திருந்த கங்கையே பகீரதனின் ஒற்றைக் கால் தவத்தை எண்ணி தவித்துப் போய் பகீரதன் முன் உதித்தான். 'நான் வருகிறேன். ஆனால் என் வீழ்ச்சியைத் தாங்கும் பலம் இங்கு யாருக்கு உண்டு. என் வேகத்தால் பூமியைத் தாண்டி அதல, பாதாள, ஏகாதலம் சென்றால் என்ன செய்வீர்கள்' என்றான்.

பகீரதன் சிவபெருமானை நோக்கி தவமிருந்து தான் காட்சி தந்த ஈசனிடம் தாங்கள் தான் கங்கையை தங்கள் ஜடையில் தரிக்க வேண்டுமென்று கேட்டுப் பணித்தான். விண்ணுலக நாயகி பூவுலகிற்குப் பயணித்தாள். இமயத்தின் மடியில் தவழ்ந் திறங்கியவளை சிவபெருமான் தன்னுடைய ஜடாபாரத்தில் தாங்கினார். பகீரதன் இந்த அரிதான நிகழ்வைக் கண்டு சிவனுடைய ஜடாபாரத்தில் நல்ல பனிக் காலத்தில் அறுகம்புல்லின் நுனியில் முத்துப் போன்ற நீர்த்துளிகள் சரமாக இருக்கும். அதுபோல் சிவனின் முடியின் ஓரத்தில் தாரையாகக் கொட்டினாள். பகீரதன் பாதாளத்திலுள்ள சகரபுத்திரர்களை கங்கையைக் கொண்டு மீட்டான். கங்கை ஞான சொரூபமாகவும், யமுனை பக்தியைப் பிரவாகமாகவும் பொங்கிக் கொண்டிருக்கிறாள். சரஸ்வதியோ வைராக்கிய சொரூபினியாக விளங்குகிறாள். பக்தி, ஞானம், வைராக்கியம் இந்த மூன்றும் சேர்வதே திரிவேணி சங்க மமாகும். இந்த ஞான சொரூபமான கங்கையை தரிசித்தாலும் மூழ்கி எழுந்தாலும் போதும். கங்கையை அதனாலேயே தீர்த்தராஜம் என்பார்கள்.



**தர்ணிகா — கவுந்தில்**

**தமிழர்களின் தலைவிதியை இனி யாரால் மாற்றமுடியும்?**

ஒரு கோடீஸ்வரரிடம் கோடி கோடியாய் பணம் இருக்கிறது. அவர் நோய் வாய்ப்பட்டு படுக்கையில் கிடக்கிறார். அவரை சோதித்த வைத்தியர் இவர் இன்னும் சில மணி நேரமே உயிருடன் இருப்பார் என்று கூறுகிறார்.

அப்போது அந்தக் கோடீஸ்வரர் தன்னிடம் இருக்கும் அவ்வளவு பணத்தையும் தருகிறேன் என்னைக் காப்பாற்றுங்கள் என்று கெஞ்சினார்.

மரணம் என்கின்ற இயற்கை சக்தியை எவராலும் வெல்ல முடியாது என்று வைத்தியர் கைவிரித்தார்.

இந்தக் கோடீஸ்வரரின் நிலைதான் இப்போது தமிழர்க்கும்.

**கலை — வல்வெட்டி**

**அடுத்த சுப்பர் ஸ்ரார் தளபதி விஜயா? தல அஜித்தா?**

தல வந்தாலென்ன, தளபதி வந்தாலென்ன தமிழர்க்கு ஏதும் கிடைக்கப் போவதில்லையே.




**திகழன் — யாக்கரு**

**சர்வதேசம் மௌனமாய் இருப்பதேன்?**

அப்பாவை மதிக்காத பிள்ளையை பெரியப்பாவைக் காட்டி பயமுறுத்தலாம்.

பெரியப்பாவையும் அந்தப் பிள்ளை மதிக்கவில்லை என்றால் என்ன செய்ய முடியும் சொல்லுங்கள்.

பெரியப்பா, தான் பெரியப்பா என்ற நினைப்புடன் பொறுப்புடன் அந்தப் பிள்ளையை நாலு தட்டுத் தட்டி நல்வழிப்படுத்த வேண்டும்.

என்ன செய்ய எமக்குத் கிடைத்த பெரியப்பா சிறிய அப்பாவிலும் பார்க்கப் பயப்படுகிறாரே.

**ஜீபா — கரவெட்டி**


**காலத்தை இழுத்தடித்த கூட்டமைப்பு இன்னும் காலம் கடத்துவது ஏன்?**

ம்..ம்... இது காலத்தை இழுத்தடிக்கும் செயலில்லை இராஜதந்திரம்.

ஆடத் தெரியாதவனுக்கு மேடை சரியில்லை என்பதாய் ஆடத் தெரியாத நாம் மேடை சரியில்லை என்று இறுதியில் மேடையில் போய் மண்டியிட்டு அதன்பின் முண்டு கொடுத்து விட்டு பொங்கலுக்கு முன் வருகிறது, புது வருடத்தின் முன் மலர்கிறது என்று அறிக்கை விடும் தலைமையுள்ள கவனிப்பாரற்ற பிள்ளையே தமிழினம்.



## எங்கள் அரசியல் தலைமைக்கு எதையும் சாதிக்கும் சக்தி கிடைத்தால்...?



**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள்**
**021 567 1532**
**என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**சுயந்தினி — தொண்டைமானாறு**

**ரஜினியின் அடுத்த படத்தின் பெயர் என்ன?**

பெரியாரைப் பற்றிப் பேசி அவர் படாப்பாடு பட்டுக் கொண்டிருக்கிறார்.

இந்த நேரத்தில் அவரின் அடுத்த படம் என்ன என்பது பற்றி அவரே சிந்தித்திருக்கமாட்டார்.

பொறுமையாக இருங்கள். இந்தப் பெரியார் அனல் கொஞ்சம் ஓயட்டும். அதன் பின் அவர் அதை வெளியிடுவார்.

**சிவன் — இணுவில்**

**நல்லவர்கள் கெட்டவர்களிடம் மாட்டுவது எப்படி?**

நல்லவர்கள் எளிதில் மற்றவர்களை நம்பி விடுவர். அந்த ஏமாற்றம் இன்னொரு நல்லவரிடம் எனின் அதற்கு எந்தப் பிரச்சினையும் வந்து விடாது.

மாறாக அந்த ஏமாற்றம் ஒரு கெட்டவனிடமாக இருந்தால் நிலை எப்படி இருக்கும்.

**தானா — வதிரி**

**பொதுத் தொண்டு செய்பவர்கள் பற்றி?**

எதுவும் இலவசமாகக் கிடைக்கிறது என்றால் அதற்கு மதிப்பே இருக்காது.

இதற்கு நல்ல உதாரணம், கிணற்றில் எடுக்கும் தண்ணீரை நாம் எவ்வளவு விரயம் செய்கின்றோம். அதே போத்தல் நீரை குடிப்பதில் கூட பொறுமை காட்டுகின்றோம்.

கிணற்று நீர் இலவசமாக கிடைக்கிறது. போத்தல் நீர் பணத்தைக் கொடுத்துப் பெறப்படுகிறது.

புரிகிறதா? எப்போதும் பொதுத் தொண்டு செய்பவர்களுக்கு இறுதியில் கிடைக்கும் பட்டம் திருடன்.

## தமிழர் நலனில் சர்வதேசம் மௌனமாய் இருப்பதேன்?

**சயன் — யாழ்ப்பாணம்**

**எங்கள் அரசியல் தலைமைக்கு எதையும் சாதிக்கும் சக்தி கிடைத்தால்...?**

ஒரு குட்டிக் கதை. மலையைக் கூட இழுத்துப் பிரட்டக் கூடிய யானைக்கு தன் பலம் தெரிவதில்லை.

யானை சிறிதாக இருக்கும் போது அதை சங்கிலியால் கட்டி விடுவார்கள். அந்தச் சங்கிலியை அறுத்து விட யானை பாடுபடும்.

யானை சிறிதாக இருப்பதால் அந்தச் சங்கிலியை அறுக்கும் வலிமை அதனிடம் இருக்காது. கொஞ்ச நாள் முயற்சியின் பின் இந்தச் சங்கிலியை அறுக்க முடியாது என்ற எண்ணம் யானையின் ஆழ்மனதில் பதிந்து விடும்.

யானை வளர்ந்து மிகப் பலமனதாக வந்து விடும். அது மலையைக் கூட பிரட்டி தனது எஜமானுக்கு விசுவாசம் காட்டும்.

ஆனால் அந்த சிறிய சங்கிலியை தன்னால் அறுக்க முடியாது என்ற எண்ணம் யானையின் இறுதி மூச்சு வரை மாறவே மாறாது.

**சுதன் — குப்பிளான்**

**காணாமல் போனவர்களுக்கு யார் பொறுப்பு வியாசரே?**

அது தான் அவரொருத்தர் மண்ணுக்குள்ள தோண்டி எடுங்க எண்டு சொல்லிட்டாரே அவரிடம் போய் கேட்டால் தெரிந்துவிடும்.

சிறுபான்மைத் தமிழினம் பற்றி யாரும் எந்த வரையறையும் தகவலும் இன்றி எதுவும் பேசலாம் எனும் வரைமுறை எம் நாட்டில் மட்டும் தான் இருக்கிறது.

**நேதாஜி — வதிரி**


**கூட்டமைப்பின் தலைமையில் மாற்றம் தேவையில்லை என்கிறாரே ஒருவர்?**

அது கூட்டமைப்பாய் இருந்திருந்தால் அப்படிச் சொல்வதில் நியாயம் உண்டு.

கத்தரிக்காய், தக்காளி, உருளை, பீற்றூட், மரவள்ளி இப்படி தனித்தனிக் காய்கறிகள் இருக்க சோற்றை கருணைக்கிழங்குடன் கலந்து விட்டு அது கூட்டு என்றால் அதற்கு நாம் என்ன செய்ய.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

# மனசெல்லாம் ஓவியமானவளே



இதயப் பூந்தோட்டத்தில்
பூவாய் மலர்ந்தவளே...
"751" இலக்க பேருந்தில்
பயணிக்கும் போதெல்லாம்
துள்ளிச் சிரிக்கும்
கடல் அலையை
பார்த்ததில்லை
என் கண்கள்
உன்னை மட்டும்தான்
பார்த்ததும்
ஓமோன் நதிகள்
காதல் நதியாய் மாறி
வெள்ளமாய் மாறிப்போனது
பேருந்து தரிப்பிடத்தில்

காத்திருக்க நேரமில்லை
என தோழன்
அழைத்த போதெல்லாம்
மச்சான் போ
என்னவளைப் பார்த்துவிட்டு
"750" இலக்க
கடைசி பஸ்ஸிலாவது ஏறி
நெல்லியடி வந்தாவது
வீடுவந்து சேர்கிறேன் என்றேன்
உயிரோடு கலந்தவளே
நீ வரும் அழகில் மனதிலே
ஆயிரம் கவிதைகள் பிறக்கும்
ஓவியப் பெண்ணே
எங்கிருக்கின்றாய்

ஆ.முல்லைதிவ்யன்


கவிதைக் கலசம்

# பாராளுமன்றத் தேர்தலும் போட்டியின்றி தெரிதலும்

பட்டம் பதவிகள் ஆயிரம் இருந்தாலும்
அரசியல் பிழைப்புத்தான் அனுகூலமோ?
கட்டம் கட்டமாக கட்சிக்கு உழைத்தாலும்
பரபரப்பு ஸீனிச் செய்திட வேண்டாமோ?
கொட்டி முழக்கியே மக்களை ஏமாற்றி
வாக்குகள் பெற்றிட மீண்டும் வாராமல்
எட்டி நின்றங்கு ஏளனஞ் செய்யாமல்
போட்டியின்றி ஒருவரைத் தெரிந்திடுவீர்
ஒற்றுமை காத்திடும் தமிழர் என்றிட
வேற்றுமை இருந்தாலும் விட்டுக்கொடுத்து
மற்றக் கட்சிக்கும் மதிப்பளித்து நீவீர்
ஏற்றங் கண்டிட போட்டியின்றி வாரீரோ?

எஸ்.சிவானந்தராஜா, புங்குடுதீவு

# கார்த்திகைப்பூ



கார்த்திகை மாதத்தில் மலரும் பூ
காலையில் மலரும் கார்த்திகைப்பூ
கொடியில் பூக்கும் அழகுப்பூ
கொத்துக் கொத்தாய் இருக்கும்பூ

வண்ண வண்ண நிறங்களில்
வனப்புக்காட்டும் காந்தள்பூ
எண்ணில் அடங்காக் கோலமாய்
கண்ணை கவரும் கார்த்திகைப்பூ

மஞ்சள், சிவப்பு நிறங்களில்
மலர்ந்து மயக்கும் காந்தள்பூ
கார்த்திகையில் பூத்துக் குலுங்கி
மார்கழியில் மறையும் பூ

ஆண்டுக்கொருமுறை மலரும் பூ
அழகுமலர் கார்த்திகைப் பூ
தமிழர் தேசத்தின் சின்னமாய்
தனித்துவமான கார்த்திகைப்பூ

கவிஞர் ஏறாவூர்

# அழியா அடையாளங்கள்

நான் சிறுவனாக இருக்கும் போது
என் தந்தை அடிக்கடி கூறுவார்
எமக்கான சுதந்திரம் மறுக்கப்பட்டுக் கொண்டே
இருக்கிறது என- ஆனால் அப்போதும்
எமது பொது மைதானத்தில்
சுதந்திரக்கொடி வீறிட்டு பறந்து கொண்டே இருந்தது

எமக்குத்தான் சுதந்திரமே இல்லையே
அப்படியானால் - ஏன் சுதந்திரக்கொடி பறக்கிறது?
இது அடிக்கடி எனக்குள் எழும் கேள்வி

அன்று எங்கள் வீட்டுப் பொக்கிஷமாய்
பத்திரப்படுத்தப்பட்ட பெட்டி ஒன்று
இன்றுவரை பத்திரமாய் இருக்கிறது
குடும்ப அட்டை, குடும்பப்படம், அடையாள அட்டை
வைக்கும் பெட்டிதான் அது

எமக்குத்தான் சுதந்திரம் கிடைத்து விட்டதே
ஏன் இன்னும் இந்தப் பெட்டி அப்படியே இருக்கிறது
என என்னை என் மகன் கேட்டான்

எமக்கு சுதந்திரம் கிடைத்த பின்பே
இந்தப் பெட்டி சொந்தமானதென்றேன்

நானும் இதைப் பத்திரப்படுத்த வேண்டுமா?
அவனிடமிருந்து வந்த கேள்வி இது

இல்லை என்று சொல்லி இடறவும் முடியவில்லை
ஆமெனச் சொல்லி அகலவும் முடியவில்லை


நல்லதொரு நாள் வரும் அதுவரை பொறு மனமே
என மௌன மொழிகளை விதைத்து
அவன் தலை வருடினேன்
தூரத்தில் எங்கோ நாய்களின் ஓலம்...

மீண்டும் அடையாள அட்டைப் பெட்டி
அதே இடத்திற்கு அடைக்கலமானது-அதனடியில்
நானும் எனது மகனும்...

அப்போதும் சுதந்திரக்கொடி
அந்தப் பொது மைதானத்தில்
வீறிட்டுப் பறந்து கொண்டேயிருந்தது...

மாவை. நா.கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்- 484



## பேட்டுக்கோழி கூவுவதாய்

காட்டிக் கொடுப்பும்
கருவறுக்கும் கருநரிகள்
ஏட்டிக்குப் போட்டியாய்
எமக்கெதிராய் சாடுகின்ற
சாட்டுக்களை சதிகாரரோடு
சடங்குகளே செய்வாரோ
பேட்டுக்கோழி கூவுவதாய்
பித்தர்களே கூவியதாய்
கூவி ஐ.நாவுக்கு அரச
அங்கீகாரம் பெறுவாரோ
முட்கம்பி வேலிக்குள் தினம்
முடக்கிவிட்டு தமிழர்களை
முடிதரித்த மன்னரென
முனகித்தான் வாழ்வாரோ

சிவனடியான்
சரவணை

## முட்கம்பி வேலிகளாய்!

சந்தேகம் அவநம்பிக்கைகள்
வறுமை வரட்சி வேலையில்லா
திண்டாட்டங்கள் பாகப்பிரிவினைகள்
முட்கம்பி வேலிகளாய்
திறந்த சிறைச்சாலையில்

இ.ஜெ.பாலன்

## திடம் பெறுவீர்

இரை தாரார் எப்போதும்
துப்பாக்கிகளுக்கே
இரையாக்குவாரோ என
ஏங்கும் முகங்கள்
கரை தட்டாப் படகு
கடுங்காற்றில் தத்தளிக்கும்
சோகம் கண்களில் தெரிகிறது
திடம் பெறுவீர் எதிர்காலம்
தெரிகிறதாய் திரண்டெழுக

க.தவமணிதாசன்
நல்லூர்

## ஐ.நாவில் சாட்சிசொல

மறவர்க்கு எதிராக
மனச்சாட்சி செத்த
அறம் பிழைத்த நரிகூட
ஐ.நாவில் சாட்சிசொல
புறப்பட்டார் மரபு அனு
பிறப்பாலே பிழைத்ததுவோ
நிறம் மாறும் பச்சோந்தி
நேர்பார்வை இல்லாது
முட்கம்பி வேலிக்குள்
முடங்கியோரை தெரிந்திடுமோ

தணிகைவாசன், தாவடி

## தங்கல் முகாம்

படைகளிடம் கையளித்த
பாவமிலாத் தமிழர்களை
கடைகெட்ட வர்க்கமிது
கருணையிலாப் படுகொலையை
மடை திறந்த வெள்ளமென
செங்குருதிச் செம்மண்ணாய்
விடம் செய்தார் எங்களுக்கு
தங்கல் முகாம் 'முட்கம்பிக்குள்
தார்மீகமா தந்திடுவர்

கந்தபாலன்
நல்லூர்

## அன்றொரு நாள்

அக்கரை செல்ல
அனுமதி வேண்டி
நாட்கள் பல
காத்திருந்து
நாளடைவில்
குடும்பத்தையிழந்து
துடிப்பில்லா
இதயமாய் உடல்
அங்குமிங்கும்
அலைந்து திரிந்து
வழிகள் மறந்து
விழிகள் கலங்க
பிணங்களை தாண்டி
உறைவிடம் தேடி
விடுதலை எண்ணி
காத்திருந்த கைதிகளாய்

நிருஷினி ஆனந்தராஜன்
யாழ்.சுண்டுக்குளி
மகளிர் கல்லூரி

# மௌனத்தின் தேடல் -485



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

## நாமும் அரசியல்வாதிகளும்

வாக்களித்த
தமிழர்கள் நாம்
இன்று மனதில் பல
ஏக்கங்களுடன் இந்த
முள்ளுக் கம்பிக்குள்
வாடுகின்றோம்
எங்கள் வாக்கால்
வந்த தமிழ்
அரசியல்வாதிகளோ
பல வரப்பிரசாதங்களுடன்
நம் நாட்டில் சுகபோகமாய்
வாழ்கிறார்கள்

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## சோக கீதங்கள்

வெற்றி பெறவும்
பெற்றதைத் தக்க வைக்கவும்
இத்தகைய அவலங்கள்
தேவைப்பட்டன
குற்றங்களின் கொடூரத்தை
சுட்டிக்காட்டி
நெற்றிக் கண்ணை
எவரும் அகலத் திறக்க
ஆர்வம் காட்டவில்லை

க.நாகராசா, நுணாவில்

## ஏமாற்றம்

உரிமைக்காக போராடுகிறோம்
காணிக்கை சதிராடுகிறோம்
இன்னமும் முடிவுகள் கிடைக்கவில்லை
எவ்வளவு காலம்தான்
ஏமாற்றுவார் இந்த நாட்டிலே

வி.டிலக்ஸன்
யா/தும்பளை சி.ம.வி.

# உயிரியல் ஆயுதம்

சிறுகதை


அரியாலையூர்
குணரத்தினம் பிரதீபன்

**இரண்டாம் உலகப் போரின் போது அணு ஆயுதம் பயன் படுத்தப்பட்டு எப்படி மக் களை கொன்றார்களோ அப்படி இன்று நடக்கும் வணிகப் போரில் ஆயுத மாக உயிரியல் ஆயுதம் பயன்படுத்தப்படுகின்றது**

சோமண்ணை தன்னுடைய மனைவி யசோதையை அழைத்து "அப்பா இஞ்சரப்பா நான் வெளியில திண்ணை ஒட்டில் அமரப் போறன் இராசவள்ளிக் கிழங்கு காய்ச்சி முடிந்தால் கொண்டுவா? இல்லை இல்லை இப்ப வேண்டாம் அவன் மா.கவும் வந்த பிறகு கொண்டுவா? எனக் கூறி விட்டு நெற்றி நிறைய திருநீற்று பட்டையை வைத்துக் கொண்டு "நீறில்லா நெற்றி பாழ்" நான் என்னத்தைச் சொல்ல எதனைச் சொல்ல... உணவே மருந்தான காலம் போய் மருந்தே உணவான காலமிது.

எங்கள் பாட்டன் பாட்டி காலத்தில தோட்டத்தில் வேலை செய்து உடல் களைத்து மனம் வலிமையாகி நோய் நொடி இல்லாமல் வாழ்ந்தது போய் இப்ப எல்லோரும் இருக்கக் கதிரையும் கை நிறைந்த சம்பளமும் கிடைத்தால் போதும் என்று காத்திருக்கும் காலம் வந்து சூழ்ந்து கொண்டது.

உடற்பயிற்சியின்மை, விரைவு உணவுகளுக்கு அடிமையாதலென மனித குலமே சிக்கிச் சின்னாபின்னமாகப் போகிற காலமிது. என்ன செய்யப் போகிறமோ எங்கட எதிர்கால சந்ததியை நோயிலிருந்து எப்படிப் பாதுகாக்கப் போறோமோ என்று தெரியவில்லை என எண்ணியவாறு வீட்டுத் திண்ணை ஒட்டில் அமர்ந்தார் சோமண்ணை...



சோமண்ணையின் இரண்டு நண்பர்கள் அவரது ஒவ்வொரு நாளையும் நிறைவு செய்வார்கள் ஒன்று மா.க. மற்றையது வலம்புரி. இன்றைக்கும் வழமை போல் வலம்புரி பத்திரிகையின் சங்குநாதத்தை எடுத்துக் கொண்டு மா.கவின் வரவை எதிர்பார்த்து பக்கங்களை புரட்டினார்.

நல்ல விடயங்கள் பலவற்றுடன் புதிய அழகான வடிவமைப்பில் எல்லோரையும் கவரக் கூடியவாறு அமைந்திருந்தது இன்றைய வலம்புரி. முதலில் தனக்குப்பிடித்த கவிதைக்கலசப் பக்கத்தை எடுத்து அதில் வரும் மாவை. கஜேந்திராவின் "வாழ்க்கை வாழ்வதற்கே" என்ற கவிதைத் தொடரை வாசித்து திருப்பதியடைந்து ஏனைய கவிதைகளையும் வாசித்து இன்புற்று ஆலடி மாநாட்டையும் இரசித்து விட்டு. பக்கம் XI தட்டியபோது அச்சுறுத்தும் கொரோனா... என்னும் தலைப்பைப் பார்த்ததும் சோமண்ணைக்கு ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டுப் போனது... காலத்திற்குக் காலம் ஏதாவது மனித இனத்தை அழிக்கவென்று வந்துவிடும்.

இவற்றையெல்லாம் கடவுளாகப் பார்த்து அனுப்பி வைக்கப்படுகிறாரா? இல்லாவிட்டால் எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு சக்தியுண்டு என் பதை உலகம் அறிவதற்காக வருகிறதா? என எண்ணியவரை மூத்த மகளின் குரல் திசை திருப்பியது.

"அப்பா என்ன கடுமையாக யோசிக்கிறியள்? ஏதேனும் பிரச்சினையா? இல்லாட்டிக்கு மா.க. மாமாவைக் காணவில்லை என்ற யோசனையா?" என்றதும் சோமண்ணை எடுத்து விட்டார் .சீச்சீ அப்படியொன்றுமில்லை இன்றைய பத்திரிகை பார்த்தியா? அச்சுறுத்தும் கொரோனா...என்று தலைப்பில் கட்டுரை வந்திருக்கு... என்றதும் மகள் சொன்னாள் அப்பா இதுவும் ஒரு உலகப் போர் தான் ஆனால் வணிகப்போர்.

இரண்டாம் உலகப் போரின் போது அணு ஆயுதம் பயன்படுத்தப்பட்டு எப்படி மக்களை கொன்றார்களோ அப்படி இன்று நடக்கும் வணிகப் போரில் ஆயுதமாக உயிரியல் ஆயுதம் பயன்படுத்தப்படுகின்றது.அதற்கு இந்த வைரஸ் உருவாக்கப்பட்டிருக்கலாமென நான் நினைக்கிறேன் என்றாள்.

உடனே சோமண்ணை பதிலுக்கு சொன்னார். "தரம் எட்டில் படிக்கும் உனக்கு புரிவது எனக்குப் புரியவில்லை". இவ்வாறு இருவரும் கருத்துக்களைப் பரிமாற்றிக் கொண்டிருக்கும் போது மா.க. வந்து சேர சோமண்ணையின் மகள் "வாங்கோ மாமா நான் உள்ளே போகப்போறன் நீங்கள் அப்பாவுடன் கதையுங்கோ.நீங்கள் வந்ததும் அம்மா சொல்லச் சொன்னா இராசவள்ளிக்கிழங்கு தருவதற்கு. நான் போய் எடுத்துக் கொண்டு வாறன்" என்று கூறிவிட்டு உள்ளே போனாள்...

என்ன மா.க. இன்று வேலை முடிய நேரமாயிற்றா. காலதாமதமாக வந்திருக்கிறாய் என்று விசாரித்து விட்டு தன்னுடைய மகளின் சிந்தனையின் உண்மைத்தன்மையை மா.க. மூலம் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மா.கவுக்கு மகள் சொன்ன உயிரியல் ஆயுத கதையை எடுத்துவிட்டார்.

மா.கவும் பதிலுக்கு அண்ணை உங்கட மகள் சொல்வது சரியாக அமையலாம். இன்றைய வியாபார உலகில் முதலாளித்துவ முதலைகள் தம்மை விட மற்றவர்கள் மேலோங்குவதை விரும்புவதில்லை. அதனால சீனாவின் சந்தையை முடக்கிப் போடுவதற்கு ஏதாவது வைரஸ் கிருமியை பரப்பியிருக்கலாம்.இப்படித்தான் அந்தக் காலத்தில சமவுடைமைப் பொருளாதார நாடுகளை முதலாளித்துவ பொருளாதார நாடுகள் ஓரங்கட்டி தம்மை மேலாதிக்க நாடுகளாகக் காட்டிக் கொண்டன.

அதற்குப் பல தந்திரோபாய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டன. உங்களுக்குத் தெரியாததில்லை அப்படித்தான் ஒற்றுமையாக இருந்த உலகப் பொருளாதாரத்தில் வளரத் தொடங்கிய சோவியத் ஒன்றியத்தையும் உடைத்து சின்னா பின்னமாக்கின.

முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தினை நிலைநாட்டுவதற்காகவும், வியாபார உலகின் ஜாம்பவான் தாங்கள் தான் என்பதை உலகிற்கு எடுத்துக்காட்டுவதற்காகவும் இப்படி ஏதாவது ஒன்றைப் பரப்பி அதற்கான மருந்துகளையும் வியாபாரப்படுத்தி வணிக உலகில் வருமானம் தீட்ட ஏதாவது ஒரு நாடு சிந்தித்து இருக்கலாம் அண்ணை... இவங்கள் பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டிவிடுவாங்கள். நாங்கள் தான் உசாராக இருக்க வேண்டும்.இவங்கட வணிகப் போரால் பாதிக்கப்படுவது எங்களைப் போல வளர்ச்சியடைந்துவரும் நாடுகளே!

நல்லூர் தேர்த்திருவிழாவில் சன நெரிசலில் தனியாகச் சிக்குப்பட்டு தள்ளுப்பட்டு சனம் போற போக்கில செல்லும் ஒரு சிறு குழந்தை போல எங்கட வாழ்வும் மாறிவிடும்.. பாருங்கோ அண்ணை இன்றைக்கு இதைச் சாட்டிக் கொண்டு எங்கட வியாபாரிகளே உழைக்கத் தொடங்கிட்டினம்.. நேற்றுவரை முன்நூறு ரூபா விற்ற வெள்ளைப்பூடு இப்ப ஐந்நூறு ரூபாவாகப் போயிற்று.

இப்படியே எல்லாப் பொருட்களும் விலை கூடி வறுமைதான் மேலோங்கப் போகிறது. எங்கட நாட்டுக்குள்ள கொரோனா...வந்து மக்கள் பாதிக்கப்பட முன் வறுமையால் பாதிக்கப்பட்டு சனம் சாகாமல் விட்டால் அது போதும். உலகில் வியாபாரத்தில் தனக்கென தனியிடம் பிடித்து வளர்ந்து வந்த சீனாவைத்தான் இந்த வைரஸ் தாக்கியுள்ளது. இதிலிருந்து உங்கள் மகள் சொன்ன விடயம் உண்மையாக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

கொரோனாவினால் சீனாவின் வியாபாரத் தளங்கள் தகர்க்கப்பட சீனாவின் உலக சந்தையும் சுருக்கமடைய முதலாளித்துவ நாடுகள் தம்மைப் பலப்படுத்திக் கொண்டு தமது வியாபாரத்தளத்தை விரிவாக்கி மீண்டும் புத்து யிரைப் பெற்று சீனாவின் வியாபாரத் தளம் முற்றாக தகர்க்கப்பட்டு சீனா பின்னடைவு கண்டு துவண்டு போகும் போது தான் கொரோனாவுக்கு மருந்து வந்து சேரும் பாருங்கள்.. அதற்குள் யாராவது மருந்தைக் கண்டுபிடிக்க வேண்டும்.

இல்லையேல் இது விரைவாகப் பரவி ஆசிய நாடுகளை முற்றாக அழித்துவிடும். இதற்கான மருந்தை எங்கட சித்தர்கள் அந்தக்காலத்திலேயே ஓலைச்சுவடிகளில் எழுதியிருப்பார்கள்.அதை நாங்கள் தேடிப்பிடிக்க வேண்டும். அப்பத்தான் நாங்கள் தான் இதற்கு மருந்து கண்டுபிடிக்கலாம் அதன் மூலம் எங்கட நாடு வளர்ந்தாலும் வளரலாம் அண்ணை..

சரியண்ணை நேரமாகிது மனுசி தேடப் போறாள்.கல்யாணம் கட்டினப்பிறகும் நேரத்தோட வீட்ட போகா விட்டால் அது வேற பிரச்சினை யாகிடும் என்று கூறிவிட்டு இராசவள்ளிக்கிழங்கை அருந்திவிட்டு நல்ல சுவையாக இருக்கு என்று அக்காவிட்ட சொல்லுங்கோ நான் புறப்படப்போறன் என்று மா.க. புறப்பட சோமண்ணையின் நினைவுகளில் கொரோனா...மட்டுமே நினைவில் நின்றது...

# கொரோனா
## வளைக்கும் வைரஸ் டிராகன்!



**சீனாவிலிருந்து உலகுக்கு!**

கொரோனா வைரஸ்! இந்தப் பெயர் பெருஞ்சுவராக எழுந்து சீனாவுக்கும் உலக நாடுகளுக்குமான இடைவெளியை அதிகப்படுத்தியிருக்கிறது.

2019 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் சீனாவின் வுகான் மாகாணத்திலிருந்து பரவத் தொடங்கிய கொரோனா வைரஸ்நோயால் உலகம் முழுக்க இதுவரை 17,000 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். உயிரிழந்தோர் எண்ணிக்கை 400-ஐ நெருங்கிக்கொண்டிருக்கிறது.

கொரோனா வைரஸ், 'கொரோனாவிரிடே' என்ற வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்தது. இது, மெர்ஸ் (MERS - Middle East Respiratory Syndrome), சார்ஸ் (SARS - Severe Acute Respiratory Syndrome) போன்ற மற்ற கொரோனா வைரஸ்களைப்போல தீவிர சுவாசப் பிரச்சினைகளை ஏற்படுத்தும். உயிரிழப்புவரை ஏற்படலாம். தற்போது சீனாவில் கண்டறியப்பட்டுள்ள கொரோனா வைரஸ் இதற்கு முன் மனிதர்களால் அடையாளம் காணப்படாத புதிய வைரஸ். அதைக் குறிக்கும் விதத்தில் நாவல் கொரோனா வைரஸ் (Novel Corona Virus - nCoV) என்று அழைக்கப்படுகிறது. பெரும்பாலும் கொரோனா வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்த வைரஸ்கள் எல்லாம் விலங்குகளிடமிருந்தே பரவியவை. அதனால் இவை ஜூனோடிக் (Zoonotic) என்று அழைக்கப்படுகின்றன. 'சார்ஸ்' 2002 ஆம் ஆண்டில் சீனாவில் புனுகுப் பூனைகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவி, 29 நாடுகளில் 8,098 பேரை பாதித்து, 774 உயிரிழப்புகளை ஏற்படுத்தியது 'மெர்ஸ்' 2012 இல் சவுதி அரேபியாவில் ஒட்டகங் களிடமிருந்து மனிதர்களுக்குப் பரவி, 27 நாடுகளில் 2,494 பேரை பாதித்து, 858 உயிரிழப்புகளை ஏற்படுத்தியது.

**சீன அரசு தவறியது எங்கே?**

2019 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் சீனாவில் பரவத் தொடங்கியது நாவல் கொரோனா வைரஸ். இது, பாம்பு போன்ற விலங்குகளிடமிருந்து மனிதனுக்குத் தொற்றியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. சீனாவில் தொடங்கி இந்தியா, ஜப்பான், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இலங்கை, ஐக்கிய அரபு நாடுகள் என 27 நாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் இந்தக் கொரோனா வைரஸின் பாதிப்பை, சீனா ஆரம்பத்திலேயே கண்டறிந்து தடுத்திருக்க வேண்டும் என்று உலகம் முழுக்கவிருந்து குரல்கள் எழுகின்றன. டிசெம்பர் மாதத்தில் வுகான் மாகாணத்தில் ஒரே நேரத்தில் குறிப்பிட்ட அறிகுறிகளுடன் ஏழு நோயாளிகள் ஒரு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர். இது அசாதாரணமாகத் தோன்றவே, அந்த மருத்துவமனையில் பணியாற்றிய மருத்துவர் ஒருவர், டிசெம்பர் 30 ஆம் திகதி, மருத்துவர்களுக்கான இணையத்தள சட் குரூப் ஒன்றில் இந்தத் தகவலைப் பதிவு செய்தார். 'அச்சுறுத்தும் தகவல்' என்றும் ''சார்ஸ்' நோய் மீண்டும் வந்துவிட்டதா?' என்றும் மருத்து வர்களுக்கிடையே இதுகுறித்துக் கலந்துரையாடல் நடைபெற்றிருக்கிறது. மருத்துவர்கள் வட்டத்துக்கு வெளியேயும் இந்தத் தகவலை அளித்திருக்கிறார் அந்த மருத்துவர்.

இதையடுத்து, நோய் குறித்த தகவலைப் பரப்பியதற்காக அன்றைய தினம் இரவே அந்த மருத்துவருக்கு சம்மன் வழங்கினார்கள் வுகான் மாகாண சுகாதாரத் துறை அதிகாரிகள். பொலிஸிலும் புகார் அளிக்கப்பட, 'நான் செய்தது சட்டவிரோதமான செயல்' என்ற அறிக்கையில் அந்த மருத்துவரைக் கட்டாயப்படுத்திக் கையெழுத்திட வைத்தது பொலிஸ். மேலும், மருத்துவர் மூலம் பரவிய இந்தத் தகவலை மறுத்து அந்நாட்டு சுகாதாரத்துறை 'பொது மக்கள் வதந்திகளை நம்ப வேண்டாம்' என்று ஓர் அறிக்கை வெளியிட்டது.

**அவசரநிலை அறிவிப்பு!**

நோய் பரவுவது தெரிந்தால் பொதுமக்கள் மத்தியிலும் அரசியல்ரீதியாகவும் பதற்றம் ஏற்படும் என்பதால் அதை மறைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டது சீன அரசு. வுகான் மாகாணத்தில் உள்ள விலங்குகள் மொத்த விற்பனைச் சந்தையிலிருந்து இந்த நோய் பரவியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அது மூடப்பட்டாலும், "சீரமைப்புப் பணிகளுக்காகவே சந்தை மூடப்பட்டது" என்று அறிவிக்கப்பட்டது. வுகான் மாகாண மருத்துவர்களையும் மௌனமாக்கியது அரசு. மக்களிடம் நோய் அறிகுறிகள் தென்பட்டு ஏழு வாரங்கள்வரை இது தொடர்பான தகவல்களை வெளியே கசியாமல் பார்த்துக் கொண்டது சீன அரசு. அந்த இடைப்பட்ட காலத்தில் கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கியது. வுகான் மாகாணத்தில் வசிக்கும் 1.1 கோடி மக்கள், நோய்ப் பரவல் பற்றி அறியாததால் எந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. ஏழு வாரங்களுக்குப் பிறகு, நோயின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கியது, ஊடகங்கள் மூலம் வெளிவரத் தொடங்கியபோது தான் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் பாதிக்கப்பட்டோருக்கான பிரத்தியேக சிகிச்சைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தது சீனாவின் ஆளும் கட்சி. டிசெம்பர் மாதத் தொடக்கத்தில் பரவத் தொடங்கிய நோய்க்கு ஜனவரி 20 ஆம் திகதியிலிருந்துதான் முழு வீச்சில் தடுப்பு நடவடிக்கைகளில் இறங்கியது சீன அரசு. அதற்குள் நோயின் தீவிரம் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு அதிகரித்துவிட்டது.

உலக நாடுகள் பலவற்றில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்து உறுதி செய்யப்பட, ஜனவரி 31 ஆம் திகதி, உலக சுகாதார நிறுவனம் கொரோனா வைரஸ் தாக்கத்தை 'சர்வதேச மருத்துவ அவசரநிலை' எனப் பிரகடனப்படுத்தியது. இஸ்ரேலில், சீன விமானப் போக்குவரத்துகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. ரஷ்யா, சீனா இடையிலான 4,300 கி.மீ. எல்லை மூடப்பட்டுள்ளது. பப்புவா நியூ கினி நாட்டில், ஆசியாவிலிருந்து புறப்படும் அனைத்து விமானங்களும் தடை செய்யப்பட்டுள்ளன. இந்தியாவிலிருந்து இரண்டு ஏர் இந்திய விமானங்கள் சீனாவுக்கு அனுப்பப்பட்டு, அங்கு வசித்துவந்த 647 இந்தியர்கள் தாயகம் அழைத்துவரப்பட்டனர். நோய்ப் பரவலைத் தடுக்க, சீனாவில் வுகான் உள்ளிட்ட 12 நகரங்கள் முடக்கப்பட்டுள்ளன. வுகானில் கொரோனா நோயாளிகளுக்கான பிரத்தியேக புதிய மருத்துவமனையை, பத்தே நாட்களில் கட்டிமுடித்துள்ளது சீனா.

**பயோ ஆயுதம்?!**

'சீனாவின் வுகான் மாகாணத்தில் செயற்படும் வைராலஜி ஆய்வுக் கூடத்தில் கொரோனோ வைரஸை பயோ ஆயுதப் போரின்போது பயன்படுத்துவதற்கான ஆய்வுகள் நடைபெறுகின்றன. அதிலிருந்துதான் இந்த வைரஸ் வெளியே பரவியிருக்க வேண்டும்' என்ற செய்தி ஒன்று உலவியது. ஆனால் இதைப் பல்வேறு நோய்த் தொற்றியல் ஆய்வாளர்களும் உயிரியல் போர் உத்தி நிபுணர்களும் திட்டவட்டமாக மறுத்துள்ளனர். கொரோனா வால் பாதிக்கப்பட்டு திகதி வாரியாக அனுமதிக்கப்பட்ட முதல் 10 நோயாளிகளின் மரபணு மாதிரிகளைப் பரிசோதித்தபோது, அனைவருக்கும் பரவியிருந்த வைரஸின் மரபணு 99.98 சதவிகிதம் ஒத்துப்போனது. வேறு வேறு பகுதிகளிலிருந்து தனித்தனியாக இந்த வைரஸ் பரவியிருந்தால், அதன் மாதிரிகளில் இவ்வளவு ஒற்றுமை இருக்காது என்று ஆராய்ச்சியாளர்கள் உறுதி செய்து, கொரோனா பயோ ஆயுதம் அல்ல என்று மறுத்துள்ளனர்.

கொரோனா வைரஸ்நோயைப் பொறுத்தவரை இதுவரை மருந்து கண்டறியப்படவில்லை. நோய்த் தாக்குதலால் ஏற்படக்கூடிய அறிகுறிகளுக்கு மட்டுமே சிகிச்சையளிக்கப்படுகிறது. இந்நோய் வராமல் பாதுகாப்பதற்கான தடுப்பூசியைக் கண்டறிய இன்னும் சில ஆண்டுகள் ஆகும் என்றாலும், அறிகுறிகள் தென்பட்ட உடனே சிகிச்சையளித்துவிட்டால் நிச்சயம் உயிரைக் காப்பாற்ற முடியும். இந்நோயால் பாதிக்கப்பட்டிருப்பவர்களில் 486 பேர் முழுமையாக அதிலிருந்து மீண்டிருப்பதே அதற்கு ஆதாரம்.

கொரோனா பாதிப்பைக் கட்டுப்படுத்துவதில் அரசுக்கும் பொது மக்களுக்கும் சரிசமமான பங்குள்ளது. நோய்த்தடுப்பு நடவடிக்கைகள், உடனடி சிகிச்சைக்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது, நோயின் தீவிரம் குறித்த உண்மையை மக்களிடம் எடுத்துக்கூறி விழிப்புணர்வை ஏற்படுத்துவது ஆகியவை அரசின் கடமைகளாக இருப்பது போன்று, தனி மனித மற்றும் சுற்றுப்புற சுகாதாரம் பேணுவதன் மூலம் கொரோனா உள்ளிட்ட தொற்றுநோய்களை அண்டவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது பொதுமக்களின் கடமை.

**நோய்த்தடுப்பு வழிகள்!**

- ஒரு நாளுக்கு குறைந்தபட்சம் 15 முறை கைகளைக் கழுவ வேண்டும்.
- சளி, இருமல் பிரச்சினை உள்ளவர்களோடு நெருங்கிப் பழகக்கூடாது.
- இருமல், தும்மலின்போது மூக்கு மற்றும் வாயை கைக்குட்டை அல்லது டிஷ்யூ கொண்டு மூடிக்கொள்ளவும்.
- அசைவ உணவுகளை நன்கு சுத்தப்படுத்தி, வேகவைக்க வேண்டும்.
- வனவிலங்குகள், பண்ணை விலங்குகளை நேரடியாகப் பராமரிப்பதைத் தவிர்க்கவும்.

**கிண்டல்கள் வேண்டாம்**

கொரோனா வைரஸ் விலங்குகளிலிருந்து பரவுவது குறித்த வதந்திகள் சீனாவில் பரப்பப்பட, வளர்ப்பு நாய்கள், பூனைகள் பல வீடுகளிலிருந்து தூக்கிவீசப்பட்டு நிராதரவாக்கப்பட்டன. சில கொல்லப்பட்டன. குறிப்பாக, நூற்றுக்கணக்கான வெளவால்கள் அழிக்கப்பட்டன. உறுதிப்படுத்தப்படாத செய்திகள் மற்றும் வதந்திகளால் விலங்குகள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்படுவது குறித்துச் சூழலியலாளர்கள் ஆதங்கக்குரல் எழுப்பிவருகின்றனர்.

பெண் ஒருவர் வெளவால் சூப் சாப்பிடும் வீடியோ வைரலாக, சீனர்களின் உணவுப்பழக்கத்தை ஏளனம் செய்யும் மனநிலை, கொரோனா வைவிட வேகமாக உலகம் முழுக்கப் பரவியது. உண்மையில், அந்த வீடியோ சீனாவில் எடுக்கப்பட்டது அல்ல. ஒன்லைன் ட்ராவல் ஷோ ஒன்றுக்காக, பசுபிக் தீவில் எடுக்கப்பட்ட வீடியோ அது என்றாலும், 'புழு, பூச்சிவரை எதையும் விடாமல் தின்று உலகத்துக்கு நோயைக் கொடுக்கிறார்கள் சீனர்கள்' என சீனர்களுக்கு எதிரான எதிர்ப்பு மனநிலையும், அவர்களின் உணவுப் பழக்கத்தை கேலி செய்யும் ட்ரோல்களும் எழுந்தன. 'ஒரு நாட்டின் மக்கள் மிகக் கொடூரமான நோயின் பிடியில் சிக்கியிருக்கும்போது, அவர்களைக் கேலி செய்வது நாகரிகமல்ல, மனிதத்தன்மையுமல்ல ' என்று பலர் தங்கள் கண்டனங்களைப் பதிவு செய்தனர்.


கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் அருகில் இருந்தால் கூட நோய்த்தொற்று ஏற்படும் என்ற நிலையில், அந்நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவர்களுக்கு இது பெரிய சவாலாக இருந்து வருகிறது. எனினும், எப்போது வேண்டுமானாலும் தங்களுக்கு வைரஸ் தொற்று ஏற்படலாம், மரணம்வரை செல்லலாம் என்று அறிந்தும், சீனாவில் மருத்துவர்கள் பலர் தங்கள் உயிரைப் பணயம் வைத்து நோயாளிகளுக்கு சிகிச்சையளித்து வருகின்றனர். அவர்களை அவர்களின் உறவினர்கள் கண்ணீர மல்க வழியனுப்பிவைத்த புகைப்படம், உலகெங்கும் நெகிழ்ச்சியோடு பகிரப்பட்டது. நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வந்த சீன மருத்துவர் லியாங் வுடாங், கொரோனா வைரஸ் நோய்த்தொற்றால் உயிரிழந்தது உலக மக்களை வருந்தச்செய்தது. இதற்கிடையே, சீனாவிலிருந்த இந்தியர்களை அழைத்துவர அனுப்பப்பட்ட ஏர் இந்திய விமானங்களில், தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் இந்த மீட்பு நடவடிக்கைக்குச் சென்றுவந்த மருத்துவர்கள் மற்றும் விமானப் பணியாளர்கள் குழுவுக்கும் வாழ்த்துகளும் நன்றிகளும் குவிந்தன.

**கொரோனா அறிகுறிகள்**

காய்ச்சல், இருமல், தலைவலி, தொண்டை வறட்சி, மூச்சுவிடுவதில் சிரமம், நெஞ்சு வலி, நெஞ்சுப்பகுதியில் இறுக்கம், சீரற்ற இதயத்துடிப்பு, நிமோனியா.

# கைகொடுக்காத ட்ரம்ப்;

## உரை நகலைக் கிழித்தெறிந்த நான்சி!



அமெரிக்காவில் வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதிப் பதவிக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. இதில், குடியரசுக் கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி ட்ரம்ப்பும் ஜனநாயகக் கட்சி சார்பில் ஜோ பிடனும் போட்டியிடவுள்ளனர். இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக ஜனாதிபதி ட்ரம்ப், பிற நாடுகளின் உதவிகளைக் கோருவதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டியிருந்தன. இதுதொடர்பான விசாரணையில், ஜோ பிடென் மற்றும் அவரின் மகன் ஹண்டரைப் பற்றி விசாரணை நடத்த வேண்டும் என உக்ரேய்ன் ஜனாதிபதி வோலோடிமிர் ஸெலென்ஸ்கிக்கு (Volodymyr Zelensky) ட்ரம்ப் அழுத்தம் கொடுத்தது தெரியவந்தது.

இந்தக் குற்றச்சாட்டும் உறுதி செய்யப்பட்டு அவர் மீது பதவி நீக்கத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. கடந்த டிசெம்பர் 18 ஆம் திகதி அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையில் ட்ரம்ப்புக்கு எதிராக வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில், அவருக்கு ஆதரவாக 198 உறுப்பினர்களும் எதிராக 229 உறுப்பினர்களும் வாக்களித்தனர். இதனால் பிரதிநிதிகள் சபையில் ட்ரம்ப் மீதான பதவிநீக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அடுத்ததாக இந்தத் தீர்மானம் செனட் சபைக்குச் செல்லும். அங்கும் ட்ரம்ப்புக்கு எதிராக அதிக வாக்குகள் பதிவானால், அமெரிக்க ஜனாதிபதி பதவியிலிருந்து ட்ரம்ப் நீக்கப்படுவார்.

ட்ரம்ப் பதவி நீக்கத் தீர்மானம் இந்திய நேரப்படி இன்று இரவு செனட் சபைக்கு வரவுள்ளது. ஆனால், அதில் ட்ரம்புக்கு ஆதரவாகவே வாக்குகள் விழும் என்றும் அவர் பதவிநீக்கம் செய்யப்பட வாய்ப்பில்லை எனவும் கூறப்படுகிறது. செனட் சபையில் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அதிகமானோர் இருப்பதே இதற்குக் காரணம். ஜனாதிபதி ட்ரம்ப் மீது பதவி நீக்கத் தீர்மானம் கொண்டுவந்ததில் அந்நாட்டு நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசிக்கு முக்கிய பங்கு உண்டு. இதனால்நான்சிக்கும்ட்ரம்ப்புக்கும் இடையே சில மாதங்களாகவே பனிப்போர் நடைபெற்று வருகின்றன.

சபாநாயகர் நான்சி, ஜனாதிபதி மீதான பதவிநீக்கத் தீர்மானம் கொண்டு வந்தபோது ட்ரம்ப் அதைக் கடுமையாக எதிர்த்தார். தன் மீது வீண்பழி சுமத்துவதாகவும் புரளி கூறுவதாகவும் தெரிவித்தார். மேலும் 'பதற்றமான நான்சி', 'பைத்தியக்கார நான்சி' என்றெல்லாம் அவரை விமர்சித்து தன் டுவிட்டரில்



கருத்து பதிவிட்டு வந்தார். இவர்களுக்கு இடையேயான போர் தற்போது உச்சத்தை எட்டியுள்ளது.

ஆண்டுதோறும் அமெரிக்க நாடாளுமன்றத்தில் அந்நாட்டு ஜனாதிபதி ஸ்டேட் ஒப் யூனியன் என்ற கூட்டத்தில் பேசுவது வழக்கம். அதன்படி அந்த ஆண்டுக்கான பட்ஜெட், பொருளாதார நிதி நிலை, நாட்டின் மிக முக்கிய பிரச்சினை ஆகியவை குறித்துப் பேசுவார். இந்த ஆண்டுக்கான ஸ்டேட் ஒப்யூனியன் கூட்டம் நேற்று நடைபெற்றுள்ளது. அந்தக் கூட்டத்தில் இரண்டு கவனிக்கத் தக்க விடயங்கள் நடைபெற்றுள்ளன.

கூட்டம் தொடங்கியவுடன் தான் பேசவுள்ள உரையின் நகலை அவையில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கினார் ஜனாதிபதி ட்ரம்ப். சபாநாயகர் நான்சிக்கு நகல் வழங்கும்போது அதைப் பெற்றுக் கொண்ட அவர், ட்ரம்ப்புக்கு கைகொடுத்தார். ஆனால், அதை மதிக்காத ட்ரம்ப் வேகமாகத் திரும்பிக் கொண்டார். இது நான்சிக்குப் பெரும் அதிர்ச்சியாக இருந்தது. பின்னர் ட்ரம்ப் தன் உரையில் தன்னைப் பற்றிய பெருமைகளையே அதிகமாகப் பேசினார். தன் ஆட்சிக் காலத்தில் அமெரிக்கா உலகம் முழுவதும்அதிகக் கவனம் பெற்றுள்ளதாகவும் அனைத்து வாக்குறுதிகளையும் தான் நிறைவேற்றிவிட்டதாகவும் பேசினார்.

ட்ரம்ப் தன்னைப் பற்றிப் புகழ்ந்து பேசும்போதெல்லாம் குடியரசுக் கட்சியினர் எழுந்து கைதட்டி ஆரவாரம் செய்தனர். இறுதியாக ட்ரம்ப் பேசி முடித்த பிறகு அவருக்குப் பின்னால் இருந்த நான்சி, ட்ரம்ப்பின் உரை நகலை அதே அவையினர் மற்றும் ட்ரம்ப் முன்னிலையில் கிழித்தெறிந் தார். நான்சியின் செயல் மொத்த அவை யினருக்கும் அதிர்ச்சி கொடுத் தது.

தன் சைகை தொடர்பாக நிருபர்களின் கேள்விக்குப் பதில் அளித்துள்ள நான்சி, வேலை தொடர்பான விடயத்தில் இருக்கும் மனக்கசப்பை நட்பில் காட்டக்கூடாது. நட்பு வேறு வேலை வேறு. மாற்றுவழிகளைக் கருத்தில் கொண்டு செய்த தைரிய மான செயல் இது" என்று பேசியுள்ளார்.

அமெரிக்க அரசியலில் இந்த விவகாரம் விவாதப் பொருளாக மாறியுள்ளது.





## வதந்தி

ஆசிரியர் ஒருவர் வயல் வழியாக வந்து கொண்டிருந்தார். லொக் லொக் என்று இருமிக் கொண்டே இருந்தார். அவர் தொண்டையில் இருந்து வந்து சளியை துப்பினார். மொத்தமாக விழுந்த சளியைப் பார்த்தார். அதில் பறவையின் இறகு ஒன்று கிடப்பதைக் கண்டு திகைத்தார்.

ஐயோ! எனக்கு என்ன வந்தது என்று தெரியவில்லையே? சளியில் பறவையின் இறகு எப்படி வர முடியும்? என்று தள்ளாடியபடியே தன் வீட்டை அடைந்தார். உங்களுக்கு என்ன? ஏன் இப்படி இருக்கிறீர்கள்? என்று கேட்டாள் அவர் மனைவி. நீ யாரிடமும் சொல்லமாட்டேன் என்று வாக்குறுதி தந்தால் நான் சொல்கின்றேன் என்றார் அவர். நான் யாரிடமும் சொல்ல மாட்டேன். எதுவாக இருந்தாலும் சொல்லுங்கள் என்று வற்புறுத்தினாள் அவள். தான் துப்பிய சளியினுள் வெண்மையான சிறகு கிடந்ததை சொன்னார் அவர்.

அவளால் அந்த இரகசியத்தை சொல்லாமல் இருக்க முடியவில்லை. பக்கத்து வீட்டுக்காரியிடம் நீ யாரிடமும் சொல்லமாட்டேன் என்றால் என் கணவர் பற்றிய ஒரு செய்தியை சொல்கின்றேன் என்றாள். நான் யாரிடமும் சொல்ல மாட்டேன் தயங்காமல் சொல் என்றாள் பக்கத்து வீட்டுக்காரி. நீ யாரிடமும் சொல்லமாட்டாய் அல்லவா? என மீண்டும் கேட்டாள் அவள். என் மீது நம்பிக்கை இல்லை என்றால் சொல்ல வேண்டாம். இதுவரை எப்பொழுதாவது உன்னை ஏமாற்றி இருக்கிறேனா என்று கோபத்துடன் கேட்டாள்.

பக்கத்து வீட்டுக்காரி கோபம் வேண்டாம் நீ மிக நல்லவள். எனவே உன்னிடம் சொல்ல வந்தேன். இன்று காலை வயலுக்கு சென்றிருந்த போது என் கணவன் கடுமையாக இருமிவிட்டு எச்சிலை துப்பினாராம். அதில் கொக்கின் இறகு ஒன்று முழுமையாக வந்ததாம். அவருக்கு என்ன நோய் எனத் தெரியவில்லை. எனக்கு மிக கவலையாகவுள்ளது.

குளத்திற்கு நீர் எடுக்க சென்ற பக்கத்து வீட்டுக்காரி தன் நண்பியை பார்த்தாள் நான். சொல்லும் செய்தியை நீ யாரிடமும் சொல்லக்கூடாது மிகவும் இரகசியம். ஆசிரியரின் மனைவியே என்னிடம் சொன்னாள். அவள் கணவர் வயலுக்குச் சென்றிருந்த போது இருமிவிட்டு எச்சிலை துப்பினவராம். அவர் வாயி லிருந்து கொக்கு ஒன்று வெியே வந்து பறந்து சென்றதாம் என்றாள்.

அவளோ இன்னொருத்தியிடம் ஆசிரியரின் வாயிலிருந்து வெளிவந்த கொக்கு இறக்கை அடித்துப் பறந்து சென்றது என்றாள். சிறிது நேரத்தில் அந்தச் செய்தி ஊர் முழுவதும் பரவியது.

உங்களுக்குச் செய்தி தெரியுமா? ஆசிரியரின் வாயிலிருந்து கொக்குக் கூட்டமே வெளியே வந்து பறந்து சென்றதாமே உண்மையா? எனக் கேட்டார் ஒருவர். கொக்கு கூட்டம் மட்டுமல்ல காக்கை பருந்து போன்ற பறவைகளும் அவர் வாயிலிருந்து வந்தன். அந்தப் பறவைகளின் கூட்டத்தால் கதிரவனே மறைக்கப்பட்டு எங்கும் இரு சூழ்ந்தது என்றார் மற்றொருவர்.

இந்தச் செய்திகளை கேள்விப்பட்ட ஆசிரியருக்குப் பைத்தியமே பிடிக்கும் போல இருந்தது. வதந்திகளிடம் இருந்து தப்ப அவருக்கு வேறு வழி தெரியவில்லை யாரும் அறியாமல் இரவோடு இரவாக அந்த ஊரை விட்டு இன்னொரு ஊருக்குச் சென்றார்.

**திருச்செல்வம் கௌதம்**
**யா/ ஹாட்லிக் கல்லூரி.**

# எது சுதந்திரம்?

இலங்கையின் 72 ஆவது சுதந்திர தினம் கடந்த 4 ஆம் திகதி வெகுவிமர்சையாக சிங்கள அரசாங்கத்தினால் கொண்டாடப்பட்டது. 72 ஆண்டு கள் இருந்த வழமையினை மாற்றிய தற்போதைய அரசாங்கம் சுதந்திர தினமன்று சிங்களத்தில் மட்டும் தேசிய கீதம் பாடினால் போதும் என பணித்திருந்தது.

பிரிட்டிஷ் காலனித்துவத்தில் துவண்டிருந்த இலங்கைக்கு 1948ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்தது. சுதந்திரம் கிடைக்கும் போது இலங்கைக் குடிமக்களான தமிழர்-சிங்களவர் ஆகிய நாம் ஒற்றுமையாக வாழ்வோம் என்ற உறுதிமொழியுடன் சுதந்திரம் தரப்பட்டது.

ஏனோ அது சிங்களத்தை முன்னிலைப்படுத்தியும் சிங்களவர்களுக்கான சுதந்திர தினமுமாய் மாறியதாகிற்று. இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த நாளில் இருந்து சுதந்திரம் இலங்கையில் வாழும் குடிமக்கள் அனைவருக்கும் சம நிலையில் கிடைத்ததா? என்றால் அதற்கான பதில் இல்லை என்றே வரும்.

இந்த நாடு பௌத்த சிங்கள நாடு. இதில் சிறுபான்மையான தமிழினம் வாழலாம் என்ற எண்ணப்பாடு சிங்கள ஆட்சியாளர்களிடம் 1948 இல் இருந்து ஆரம்பமாகிறது என்றே கூற வேண்டும். தமிழ்மக்கள் தமக்கான உரிமைகள் பெற்றுக்கொள்ள மேற்கொண்ட அத்தனை முயற்சிகளும் தோல்வியில் முடிவடைய அது ஆயுதப் போராட்டத்திற்கு வழிவகுத்தது.

இருப்பினும் அந்தப் போராட்டம் 2009 உடன் மௌனித்துப் போக மீண்டும் தமிழர்களை களைநிலைப்படுத்தும் படலம் ஆரம்பமானது. 2009 இறுதி யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் கொல்லப்பட்டதுடன் அங்கவீனர்களாக்கப்பட்ட வர்கள் இன்றும் யுத்த சாட்சியாக இந்த பூமியில் உலவிக் கொண்டிருக்கிறார்கள்.

இரண்டாம் உலகப் போரில் ஜப்பானின் ஹிரோஷிமா-நாகசாயி நகரங்களில் வீசப்பட்ட அணு குண்டுகளின் தாக்கம் இன்றுவரை அங்கு நிலவுவதைப் போல முள்ளிவாய்க்கால் யுத்த பூமி இறுதியுத்த கொடூரத்தைச் சாட்சியாய்ப் பதிவு செய்து கொண்டே இருக்கும்.

இலங்கையின் 72 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் சிங்களத்தில் மட்டும் தேசிய கீதம் பாடப்படும் என்ற அரசின் அறிவிப்புடன் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் அரசுக்கு எதிராகவும் காணாமல் போன தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்றும் இறுதிப் போரில் நடந்த போர்க்குற்றத்திற்கு சர்வதேச விசாரணை ஒன்றே தேவை என்றும் வலியுறுத்தி பல இடங்களில் ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தனர்.

காணாமல் போன உறவுகளின் உடல்களை மண்ணிற்குள் தோண்டி எடுங்கள் என்ற சிங்கள அரசியல் வாதிகளின் பதில் இம்மியும் இவர்களிடத்தில் மனச்சாட்சியை எதிர்பார்க்க முடியாது என்பதை பறைசாற்றி நிற்கிறது.

இறுதி யுத்தத்தில் தமது உறவுகளைக் கொண்டு வந்து படையினரிடம் கையளித்து விட்டு இன்று வருவார், நாளை வருவார் என்று எதிர்பார்த்து எதிர்பார்த்து காத்திருக்கும் அன்னைக்கு உன் மகனை மண்ணுக்குள் தோண்டிப் பார் என்ற வார்த்தை எப்படி இடியாய் விழுந்திருக்கும். நினைக்கும் போது நெஞ்சம் கனத்துப் போகிறது.

என்ன செய்ய தமிழினம் அடிமைப்பட்ட இனமாய், கவனிக்கப்படாத இனமாய்போய்விட்டது என்பதே உண்மை.



**“காணாமல் போன உங்கள் பிள் ளைகளை நிலத்தில் தோண்டி எடுங்கள் என்று மனச்சாட்சியே இல்லாமல் பேசும் சிங்கள அரசியல் வாதிகள் உள்ளவரை தமிழருக்கு சுதந்திரம் ஏது?**

ஒரு காலத்தில் சேர, சோழ, பாண்டியன் என இந்த உலகையே ஆண்ட இனம் இன்று ஒரு சுதந்திர தினப் பாடலைக் கூட தமிழில் பாட அனுமதிக்காத இனமாய் போய்விட்டது. இதுதான் தமிழர்களுக்கான சுதந்திரமா?

இது எதனால் என்று ஆழ்ந்து சித்திக்கும் போது முன்னிலையாவது காலம்காலமாய் எம்மை ஏமாற்றி ஏகாதி பத்திய பேரினவாத சிங்கள அரசுகளிடம் ஏமாந்து போகும் தமிழ்த் தலைமைகளே நினைவில் வருகின்றனர்.

எடுத்த உடன் பேரின அரசு சொல்வதை நம்புவது, தமது சுயநலனுக்காக பொதுநலனை குழிதோண்டிப் புதைத்துவிட்டு அவர்கள் சொல்வதற்கு "ஆமா" போட்டு, தம்மை நம்பி வாக்களித்தவர்களுக்கு துரோகமிழை ப்பது என்று அவர்களின் இயலாமையுடன் கூடிய சுய நல அரசியல் போக்கு இன்று எமக்கு தமிழில் தேசிய கீதம் பாடுவதைக் கூட தடுத்து விட்டது.

ஆக, எமக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்க சர்வ தேசத்தின் தலையீடு ஒன்றே தேவை என்ற நிலைப் பாட்டில் நாம் இம்மியும் சறுகாமல் உரத்துக் கூற வேண் டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம் என்பதே உண்மை. அத்துடன் தொடர்ந்தும் எம்மை ஏமாற்றும் அரசியல் தலைவர்களுக்கா எமது ஆதரவு என்ற எண்ணமும் மாற்றமும் எம் மனங்களில் வரவேண்டும். இல்லை யேல் இன்று தமிழில் தேசிய கீதம் பாடத் தடை, நாளை தமிழில் பேசத் தடை உன்றாகிவிடும்.

அதன் பின்பு குண்டு வெடிக்கும் போர் மூளும் என்று அறிக்கைவிட்டு பயனேதும் வந்துவிடப்போ வதில்லை என்பதே நிறுதிட்டமான உண்மை.

**- அபிமன்யு -**

## கொரோனாவை நினைவூட்டிய கண்டேஜன் திரைப்படம்




2011 ஆம் ஆண்டில் வெளிவந்த ஒரு அமெரிக்க திரைப்படம் சீனாவிலிருந்து உலகின் பிற பகுதிகளுக்குப் பரவத் தொடங்கும் கொரோனா வைரஸைப் போன்ற ஒரு வைரஸைப் பற்றி பேசுகிறது. விசித்திரமான விடயம் என்னவென்றால், திரைப்படத்தின் முடிவில் நோய்த் தொற்றுக்கான காரணம் ஒரு வௌவால் என்று காட்டப்படும். தற்போது கொரோனா வைரஸ் பரவுவதற்கான காரணமும் இதே எனச் சொல்லப்படுகிறது. அத் திரைப்படத்தின் கதை...

ஒரு ஹொங்கொங் வணிக பயணத்திலிருந்து திரும்பிய, பெத் எம்ஹாஃப் சளி நோயால் பாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அவரது முந்தைய திருமணத்தைச் சேர்ந்த அவரது ஆறு வயது மகன் கிளார்க்கும் நோய்வாய்ப்பட்டு பள்ளியிலிருந்து வீட்டிற்கு அனுப்பப்படுகிறான். பெத்தின் நிலை மோசமடைகிறது. இரண்டு நாட்களுக்குப் பிறகு அவள் கடுமையான வலிப்புத் தாக்கங்களுடன் சரிந்து விடுகிறாள். அவரது கணவர் மிட்ச். அவளை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்கிறார், ஆனால் அவள் அறியப்படாத காரணத்தால் இறந்துவிடுகிறாள்.

அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புத் துறையின் பிரதிநிதிகள் டாக்டர் எல்லிஸ் செவரைச் சந்தித்து, இந்த நோய் ஒரு உயிர் ஆயுத பயங்கரவாத தாக்குதல் என்று அஞ்சுவதாகச் சொல்கின்றனர் டாக்டர் எல்லிஸ் செவர், டாக்டர் எரின் மியர்ஸ் என்ற ஒரு தொற்றுநோய் புலனாய்வு சேவை அதிகாரியை விசாரணைக்கு அனுப்புகிறார். டாக்டர் மியாஸ் இந்த தொற்று எம்ஹாஃபிடமிருந்து பரவியதைக் கண்டு பிடிக்கிறார். ஆனால் டாக்டர் மியர்ஸுக்கு நோய்த் தொற்று ஏற்படுகின்றது. பின்னர் அவர் இறந்து அடக்கம் செய்யப்படுகிறார்.

உள்நாட்டுப் பாதுகாப்புத் துறையின், டாக்டர் அல்லி ஹெக்ஸ்டால் இந்த வைரஸ் என்பது பன்றி மற்றும் வௌவால் வைரஸ்களின் மரபணுப் பொருட்களின் கலவை எனக் கண்டு பிடிக்கிறார். ஒரு வீரியம் குறைக்கப்பட்ட வைரஸைப் பயன்படுத்தி, டாக்டர் ஹெக்ஸ்டால் ஒரு தடுப்பூசியை கண்டு பிடிக்கிறார். நீண்ட சோதனை செயல்முறையைத் தவிர்ப்பதற்கு, அவர் தனக்கு தடுப்பூசியை ஏற்றிக் கொள்கிறார். தடுப்பூசி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படுகிறது. தடுப்பூசி வழங்கல் தேவையை பூர்த்தி செய்ய முடியாமல் இருக்கிறது.


அதேசமயம், உலக சுகாதார நிறுவனத்தின் தொற்று நோயியல் நிபுணரான டாக்டர் லியோனோரா ஓரண்டஸ் ஹொங்கொங்கிற்கு பயணம் செய்து ஒரு சீன அதிகாரி சன் ஃபெங் மற்றும் பிற உள்ளூர் தொற்றுநோயியல் நிபுணர்களுடன் எம்ஹாஃப்பை முதல் நோயாளியாக அடையாளம் காண்கிறார். மூன்று பாதிக்கப்பட்டவர்களுடன் பெத் எம்ஹாஃப் ஒரு சூதாட்ட விடுதியில் தொடர்பு கொண்டிருப்பதை காட்டும் பாதுகாப்பு கமரா காட்சிகள் கிடைக்கப் பெறுகின்றன. ஆரண்டஸ் வெளியேறுவதற்கு முன்பு, ஃபெங் அவளைக் கடத்திச் சென்று, தனது கிராமத்திற்கு தடுப்பூசிகளைப் பெறுவதற்கு பயன்படுத்துகிறான். தடுப்பூசி வரும் வரை ஆரண்டஸ் கிராம மக்களுடன் பல மாதங்கள் இருக்கிறார்.

இறப்பு எண்ணிக்கை 26 ஆம் நாளில், அமெரிக்காவில் 2.5 மில்லியனையும் உலகளவில் 26 மில்லியனையும் எட்டுகின்றது. ஒரு ஃப்ளாஷ்பேக்கில், வைரஸின் தோற்றம் வெளிப்படுகிறது. ஒரு புல்டோசர் காட்டை வெட்டி ஒரு வௌவாலை துரத்துகின்றது. அந்த வௌவால் பறக்கும் போது அது சாப்பிட்ட வாழைப்பழத்தின் ஒரு பகுதியை கீழே போடுகிறது. அதை ஒரு பன்றிக்குட்டி சாப்பிடுகிறது. சூதாட்ட நிலைய சமையல்காரர் பன்றிக்குட்டியை வாங்குகிறார். அவர் சமையலறையில் அந்த பன்றிக்குட்டியை கையாளும் போது ஒரு வாடிக்கையாளரான பெத் எம்ஹாஃப்பைச் சந்திக்க அழைகப்படுகிறார். அவர் கைகளைக் கழுவாமல் பெத்துடன் கைகுலுக்கி, வௌவால் மற்றும் பன்றி வைரஸ்களின் கலவையை அவளுக்குத் தொற்ற வைத்து முதல் நோயாளியாக்குகிறார்.

**கண்டேஜன்** கிளிநொச்சி

# “இலங்கையில் எப்போது குடியேறுவார் ரங்கநாதர்?”

## எதிர்பார்ப்பில் ஆன்மீக அன்பர்கள்



**இலங்கையில் பள்ளிகொள்ள வேண்டிய ரங்கநாதர், நீண்டகாலமாக மாமல்லபுர மண்ணிலேயே காத்திருக்கிறார். அவர் இலங்கை சென்று பள்ளி கொண்டால்தான், யுத்தபூமியான இலங்கை அமைதிப்பூங்காவாக மாறும்.**

இலங்கையில் பள்ளிகொள்ள வேண்டிய ரங்கநாதர், நீண்டகாலமாக மாமல்லபுர மண்ணிலேயே காத்திருக்கிறார். அவர் இலங்கை சென்று பள்ளி கொண்டால்தான், யுத்தபூமியான இலங்கை அமைதிப்பூங்காவாக மாறும் என்ற எதிர்பார்ப்பில் இந்தியா மற்றும் இலங்கையில் வாழும் ஆன்மீக அன்பர்கள் காத்திருக்கின்றனர்.

இதுகுறித்துப் பேசிய இலங்கைவாழ் ஆன்மீக அன்பர்கள் சிலர், புராணக்கதையை நம்மிடம் பகிர்ந்து கொண்டனர். “சீதையை மீட்பதற்கு உதவிய விபீஷணன், இராமரின் முடிசூட்டு விழாவைக் காண அயோத்திக்கு வந்தார். அப்போது, தான் பூஜித்துவந்த ரங்கநாதர் சிலையை அவருக்குக் கொடுத்தார் இராமர். இலங்கைக்கு அதை எடுத்துச்செல்லும் வழியில் காவிரி ஆற்றங்கரையில் ஓய்வெடுக்க நினைத்த விபீஷணன், ரங்கநாதர் சிலையை கீழே வைத்தார். மீண்டும் புறப்படும்போது தரையிலிருந்து ரங்கநாதர் சிலையை எடுக்கவே முடியவில்லை. கலங்கிப்போன விபீஷணனுக்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த தர்மசோழன் என்கிற அரசன் ஆறுதல் கூறினார்.

‘காவிரிக்கரையிலேயே தங்கியிருக்க வேண்டும் என்பதே தம் விருப்பம்’ என்று சொன்ன ரங்கநாதர், விபீஷணனைத் தேற்றுவதற்காக இலங்கையை நோக்கிப் பள்ளிகொண்டு அருள்வதாகக் கூறினார். அந்த இடத்தில், தர்மசோழன் கோயில் கட்டி வழிபட்டார். அந்த இடமே இன்றைய ஸ்ரீரங்கம். அதேசமயம், ரங்கநாதருக்கு இலங்கையில் கோயில் கட்டுவதற்காக மீண்டும் முயற்சிகளை மேற்கொண்ட விபீஷணன், அவை நிறைவேறாமலேயே இறந்துபோனார். இன்றுவரை போர் நிகழும் பூமியாகவே இலங்கை இருப்பதற்குக் காரணம், இலங்கையில் பள்ளிகொள்ள வேண்டிய ரங்கநாதர், இங்கே இருப்பதுதான்” என்கின்றனர்.

இந்தப் புராண நம்பிக்கை, இலங்கையில் வாழும் ஆன்மீகவாதிகள் மனதில் பன்னெடுங்காலமாக நிலைத்து நிற்கிறது. சுமார் 50 ஆண்டுகளாக அமைதியின்றித் தவித்துவரும் இலங்கையின் ஆட்சியாளர்கள் மனதிலும் இந்தப் புராண நம்பிக்கை குடிகொண்டிருக்கிறது. அதன் விளைவாக, 1999 ஆம் ஆண்டு இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, மாமல்லபுரம் சிற்பக்கலைக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் கணபதி ஸ்தபதியிடம் இலங்கையின் கண்டியில் ரங்கநாதருக்கு கோயிலைக் கட்டித் தருமாறு கேட்டுக் கொண்டார்.

மேற்கொண்டு நடந்தவற்றை மாமல்லபுர வட்டாரத்தில் இவ்வாறு விபரிக்கின்றனர்...

“இதற்காக ஒப்பந்தம் போடப்பட்டு முன்பணமும் கொடுத்தது இலங்கை அரசு. கணபதி ஸ்தபதியும் ஆர்வத்துடன் தன் கைப்பணத்தையெல்லாம் முதலீடு செய்து இலங்கையில் ஆலயம் எழுப்பும் பணியை ஆரம்பித்தார். 16 அடி நீளம் மற்றும் 5 அடி உயரத்தில் ஆதிசேஷன் மேல் ரங்கநாதர் துயிலும் திருக்கோல கருங்கல் சிற்பம் மாமல்லபுரம் அருகே உள்ள கணபதி ஸ்தபதியின் சிற்பக் கூடத்தில் உருவாக்கப்பட்டது.

2002 ஆம் ஆண்டு தேர்தலில் சந்திரிகா தோற்றார். மகிந்த ராஜபக்ஷ ஆட்சிப்பொறுப்புக்கு வந்தார். அதன் பிறகு கோயில் பணியையும் ரங்கநாதர் சிலையையும் இலங்கை அரசு கண்டுகொள்ளவில்லை. பெருமளவில் செலவு செய்திருந்த ஸ்தபதி, மிகவும் மனவருத்தத்துக்கு ஆளானார். வேறுவழியின்றி தன்னுடைய இடத்திலேயே சிலையை மண் மூடி பாதுகாத்து வந்தார்.

### அரசு - தட்சிணாமூர்த்தி ஸ்தபதி

2011 ஆம் ஆண்டில் கணபதி ஸ்தபதி காலமானார். அவருடைய விருப்பப்படி தொடங்கப்பட்ட அறக்கட்டளை, இந்தச் சிலைகுறித்து வழக்கு ஒன்றைத் தொடர்ந்தது. 2011 ஆம் ஆண்டில் இந்தியா வந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பினர், ‘மீதிப்பணத்தைக் கொடுத்து சிலையை எடுத்துக் கொள்கிறோம்’ என்று கூறிச் சென்றனர். ஆனால், அது நடைபெறவில்லை. இது தொடர்பான வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது” என்றார்கள் அவர்கள்.

வழக்கை நடத்திவரும் அறக்கட்டளையைச் சேர்ந்த சட்டத்தரணி அரசு நம்மிடம், “எங்களுக்கு இழப்பீடு அளிப்பதுடன் இலங்கையில் மீண்டும் கோயில் பணிகள் நடக்க வேண்டும். இதனால், அங்கு நிரந்தர அமைதி ஏற்பட வேண்டும். இதை தற்போது இலங்கையில் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அரசாங்கம் செய்ய வேண்டும்” என்றார். இந்த நம்பிக்கை குறித்து மன்னார் குடி செண்டலங்கார செண்பக மன்னார் ராமானுஜ ஜீயரிடம் பேசியபோது, “ஆன்மீகத்துக்கும் அமைதிக்கும் மிகப் பெரிய தொடர்பு இருக்கிறது. மாமல்லபுரத்தில் உள்ள ரங்கநாதர் சிலையை இலங்கைக்குக் கொண்டு செல்வதற்கு ஆன்மீகவாதிகளும் ஆட்சியாளர்களும் ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், இலங்கை நிச்சயமாக புண்ணிய ஸ்தலம் ஆகும்.

ஒரு வீடு கட்டுவதற்கு வாஸ்து சாஸ்திரங்கள் பார்ப்பதைப் போன்று, சிலைகள் செய்வதற்கும் ஏராளமான ஆன்மீக விடயங்களைக் கவனிக்க வேண்டும். அந்த வகையில் மாமல்லபுரத்தில் உள்ள ரங்கநாதர் சிலை, இலங்கையில் உள்ள சூழல், தட்பவெப்பநிலை உள்ளிட்டவற்றுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிலையை இலங்கைக்குக் கொண்டு சென்றால் அங்கு நிச்சயம் அமைதி நிலவும் பிரச்சினைகள் குறையும் விவசாயம் செழிக்கும் போர் போன்ற பதற்றமான சூழல் நீங்கி, மக்கள் அமைதியாக வாழ வழி பிறக்கும்” என்றார்.

தற்போது சிலையைப் பராமரித்துவரும் பெருந்தச்சர் அவையத்தின் தலைவர் தட்சிணாமூர்த்தி ஸ்தபதியிடம் இதுகுறித்துக் கேட்டபோது, “இது தொடர்பான வழக்கு ஒன்று, சென்னை உயர் நீதிமன்றத்தில் உள்ளது. எனவே, இலங்கை இந்தச் சிலையை எடுத்துக்கொள்ள வேண்டிய உதவிகளைச் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை மட்டும் நான் சொல்லிக் கொள்கிறேன்” என்றார்.


“இலங்கையில் பதவியேற்றுள்ள புதிய அரசு, ஆன்மீகவாதிகளின் இந்த வேண்டுகோளைப் பரிசீலிக்க வேண்டும். இந்த ஆண்டிலாவது ரங்கநாதர் இலங்கையில் கோயில்கொண்டு, அங்கு அமைதி திரும்ப வேண்டும்” என்று விரும்புகிறார்கள் இந்திய -இலங்கைவாழ் ஆன்மீகவாதிகள்.

### “காலம்தான் ஐயங்களை நீக்கும்!”

“மாமல்லபுரத்தில் உருவாக்கப்பட்ட ரங்கநாதர் சிலை இலங்கைக்கு எடுத்துச் செல்லப்படாமல் இருப்பது, அரசியல் மாற்றங்களால் ஏற்பட்ட நிகழ்வு. அதை இராமாயண கதாபாத்திரமான விபீஷணன் மற்றும் ஸ்ரீரங்க ஆலயத்துடன் முடிச்சுப்போட்டுப் பேசுவது சரியல்ல” என்ற விமர்சனத்தையும் சிலர் முன்வைக்கின்றனர். இலங்கையைச் சேர்ந்த ஆன்மீகப் பேச்சாளர் கம்பவாரிதி ஜெயராஜிடம் இதுகுறித்துப் பேசினோம்.

“இராமாயண காவியத்தில் இல்லாத செய்திகள் பல, புராணங்களில் ஆங்காங்கே பதிவாகியுள்ளன. அத்தகைய பதிவுகளில் ஒன்றுதான் இதுவும். இந்த நம்பிக்கை பற்றி வரையறுத்து என்னால் ஏதும் சொல்ல முடியாது. ஆனால், அந்தச் செய்தியை முற்றாக நிராகரிக்கவும் முடியவில்லை. விபீடணனார் பெற்ற சிலையும் இலங்கைக்கு வராமலேயே போயிற்று. அதன் பிறகு அதற்கு ஒப்ப செய்யப்பட்ட சிலையும் இன்று வரை இலங்கை வந்து சேராமலேயே இருக்கிறது. இதன் பின்னணியில் ஏதேனும் உண்மை இருக்குமோ எனும் கருத்தையும் என்னால் முற்றாக நிராகரிக்க முடியவில்லை. நம் புத்தியைக் கடந்த பல விடயங்கள் இயற்கை அவதானங்களால் அறியப்படுகின்றன. அத்தகைய கணிப்புகளில் ஒன்றாகவும் இந்த நம்பிக்கை இருக்கலாம்.

இதை வெறும் மூடத்தனம் என்று சிலர் சொல்லலாம். ஆனால், நம் தமிழ்ப் பெரியோர்கள் ஓர் உண்மையை நிறுவுவதற்கான பத்து பிரமாணங்களில் ஐதீகப் பிரமாணத்தையும் ஒன்றாகக்கொள்கின்றனர். செவிவழிச் செய்தியால் நம்பப்படும் ஓர் உண்மையையே “ஐதீகப் பிரமாணம்” என்கின்றனர். நமது தமிழ் மரபில் இந்த ஐதீகப் பிரமாணம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால், மேற்சொன்ன ஸ்ரீரங்கநாதர் சம்பந்தமான ஐதீகத்தையும் என்னால் முற்றாக நிராகரிக்க முடியவில்லை. காலம்தான் இந்தச் செய்திகள் பற்றிய ஐயங்களை நீக்கும் எனக் கருதுகிறேன்” என்றார்.



ஜீனியர் விகடன்

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : பார்த்தால் பசி தீரும்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : விஸ்வநாதன் ராமமூர்த்தி
பாடியவர்: ரி.எம்.சௌந்தரராஜன்



பிள்ளைக்கு தந்தை ஒருவன் நம்
எல்லோருக்கும் தந்தை இறைவன்
பிள்ளைக்கு தந்தை ஒருவன் நம்
எல்லோருக்கும் தந்தை இறைவன்

நீ ஒருவனை நம்பி வந்தாயோ இல்லை
இறைவனை நம்பி வந்தாயோ
நீ ஒருவனை நம்பி வந்தாயோ இல்லை
இறைவனை நம்பி வந்தாயோ

பிள்ளைக்கு தந்தை ஒருவன் நம்
எல்லோருக்கும் தந்தை இறைவன்

தாயாரை தந்தை மறந்தாலும்
தந்தை தானென்று சொல்லாதபோதும்
தாயாரை தந்தை மறந்தாலும்
தந்தை தானென்று சொல்லாதபோதும்
தானென்று சொல்லாதபோதும்
ஏன் என்று கேட்காமல் வருவான் நம்
எல்லோருக்கும் தந்தை இறைவன் இறைவன்

பிள்ளைக்கு தந்தை ஒருவன் நம்
எல்லோருக்கும் தந்தை இறைவன்

உள்ளோர்க்கு செல்வங்கள் சொந்தம் அது
இல்லார்க்கு உள்ளங்கள் சொந்தம்
உள்ளோர்க்கு செல்வங்கள் சொந்தம் அது
இல்லார்க்கு உள்ளங்கள் சொந்தம்
இல்லார்க்கு உள்ளங்கள் சொந்தம்
இல்லாத இடம் தேடி வருவான் நம்
எல்லோருக்கும் தந்தை இறைவன் இறைவன்

பிள்ளைக்கு தந்தை ஒருவன் நம்
எல்லோருக்கும் தந்தை இறைவன்
நீ ஒருவனை நம்பி வந்தாயோ இல்லை
இறைவனை நம்பி வந்தாயோ

பிள்ளைக்கு தந்தை ஒருவன் நம்
எல்லோருக்கும் தந்தை இறைவன்
ம்ஹ்ம்....

# தென்றல்...

அன்பார்ந்த சங்குநாத வாசகர்களே!

உங்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த வணக்கங்கள் உரித்தாகட்டும். எங்கும் நிறைந்திருக்கும் இறைவனை மனத்திருத்தி எங்கும் நிறைந்து, நுழைந்து, இதம் கொடுத்து வருடி வாழ்வளிக்கும் வாயு புத்திரன் பேசுகிறேன்.

என்னைப் பார்க்க முடியாவிட்டாலும் என்னை உணர்ந்து அனுபவிக்க முடியும். நவீன உலகின் உயிர்மூச்சு, நானே உலகின் வெம்மை தனிக்கும் இனிய உறவு-குளிர் நிலவோ, சுடும ணலோ, பகல் இரவோ, பனி மழையோ, வானோ, கானோ, கடலோ, மலையோ எங்கும் சஞ்சரிக்கும் நான் பஞ்சபூதங்களில் ஒருவனா கிய வாயுதேவனின் ஒரு அற்புத வடிவம். இயற்கை யன்னையைத் பேருவகை உந்த- வானவர் பூமாரி பெய்ய- மண்ணவர் கண்மாரி பெய்ய... நாவற்குழி பெருநிலப்பரப்பில் சிவதட்சணாமூர்த்தி குடிகொண்டிருக்கும் திருவாசக அரண்மனையில் இருபத்தைந்தாம் நாள் சென்ற சனி மாலை அற்புதப் பூஜை ஒன்று சங்கு முழங்கியதும் தானை நடத்தியதும் சங்கம் வளர்த்தும் தாய்த் தமிழைக்காத்துவும் எங்கள் மொழி சிறக்க எங்கும் முரசறைந்து சங்கத் தமிழ் மரபைக்காத்த மன்னர் வரிசை ஒன்று அன்று அது நிகழ்ந்து அகம் கனவில் மிதந்ததுண்டு.

இன்று அது நிஜமே என்று முழவதிர பொன்று திறம்படைத்த புகழ் படைத்தோர் சூழ்ந்து வரமன்று என ஒன்று மரபுகளை 'அகத்தடக்கி என்றும் நிலைத்திருக்க எழுந்த பெருங்காட்சி நின்றும் கொண்டு எழுந்தருள இருபத்து ஒரு ஆசான் பேராசானாய் எழுந்து திரை நீக்கம் செய்தமையும் திக் கெட்டும் மகிழ்ந்ததுவும் இறும்பூதெய்துதற்கு இது போதாதா என்று இறுமாந்திருப்போமா ஏதேனும் படைப்போமா நறுந்தேன் அருந்தி நற்சிந்தைதனை புடம் போட்டு குறும்பா இசைப்போமா குவலயத்தைக் காப்போமா கண்டது போது மென்று கண்மூடி இருப் போமா காற்றுள்ள போதினிலே தூற்றி விட மறப்போமா சென்றதெல்லாம் அழியாமல் சேமிக்க மாட்டோமா இன்று முதல் எம் பொறுப்பை நாம் உணர வேண்டாமா?

சுற்றுலா விடுதியல்ல- சுடுநீர்க் கிணறுமல்ல வெற்றியாய் வலம் வரவும் வண்ணப்படம் ·எடுப்பதற்கும் வெட்டியாய் கதைப்பதற்கும் வெறும் சடப்



செதுக்கப்பட்டுள்ள திருவாசகம்

தாலாட்டி அவளின் சிகுக்களை வருடி அன்பு காட்டும் ஒரு அற்புதப் படைப்பு நான். உங்களுடனும் அருகிருக்கிறேன். ஓய்வுப் பொழுதில் என்னை உணர்ந்து அனுபவிக்க, காற்றாட மிகவும் விரும்புவீர்கள். தென்றலே தென்றலே என்று கவிஞர்கள் என்னை வானளாவப் புகழ்ந்து பாடியிருக்கிறார்கள். எனக்கு செல்லுமிடமெல்லாம் சிறப்புத்தான். சரிசரி ...சிவபுராணம் கேட்கலாம். என் சுய புராணத்தை ஒரு விவஸ்தையில்லாமல் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன் போல...

ம்...ம்...இந்துமா கடல் சூழ்ந்த ஈழமணித்திருநாட்டில் வந்து போன மாந்தரெல்லாம் வானுயுரப் புகழும் சிவபூமி மந்த மாருதம் வீசும் மாலைப் பொழுதொன்று வந்த நிலைத்தும் நீடூழி வாழ்ந்திருக்க ஆன்றோர் ஆசி பொங்க அரண்மனை வீதி எங்கும் சான்றோர் சூழ்ந்து ஒரு சாதனையைப் பறை சார்த்தி ஈன்றோர் அதிசயமாய் எழுந்த அருங்காட்சியகம் ஈன்றோர் பெரிதுவக்க இனிய செஞ்சொற் களஞ்சியமாய் மூவேந்தர் பரம்பரையோ மூத்தோர் ஒரு விருந்தோ பாவேந்தர் புகழ் மழையோ பண்புடையார் பெருநிதியோ நாவேந்தன் அருள்நோக்கோ நற்றவத்தோர் திருவாக்கோ யாமேந்திக் காக்கவென்று சமைத்த பெருமாளிகையோ வரலாற்றின் நிஜவுருவாய் வடிவமைத்த திருவுருவாய் உரமூட்டி மண்காத்த உத்தமர்கள் வரிசையிலே அரசாண்ட முடிமன்னர் அற்புதப் பொற் சிலையாகி இருபத்து ஒன்றாக எழில் பொருளுமல்ல அட்டியாய் உரைக்கின்றேன். அத்தனையும் உயிர்ப் படைப்பு.

உயிர் மூச்சை விலையாக்கி உடல் நோவை வழியாக்கி உயிர் சுமந்து பெற்றெடுத்த களஞ்சியக் குழந்தையிது. உயிர்த் தண்ணீர் வார்ப்பது போல் உயிர்க் காற்றாய் நான் வந்தேன். உயிர் காக்க வேண்டுகிறேன். எம் பாதக் களஞ்சியங்கள் உயிர் பொலிய வேண்டுமெனில் இளையோரே எழுந்திடுக. காற்றாக வந்தேன். மூச்சடங்கி நின்றேன். தென்றலாய் மகிழ்ந்தேன். மாருதமாய் நிறைந்தேன். காற்றோடு கலந்தேன். உத்தமர்கள் மூச்சாக உயிர் தாங்கி இருப்பேன்... வருகிறேன்.

திருமதி.பாரதி கணேஷ்
சுன்னாகம்.








ஜீவா கடந்த சில வருடங்களாகவே ஒரு பெரிய ஹிட் கொடுக்க போராடி வருகின்றார். அந்த வகையில் றெக்க இயக்குநர் ரத்னசிவா இயக்கத்தில் ஜீவா மாஸ் களத்தில் களம் இறங்கியிருக்கும் இந்த சீறு மூலம் மீண்டும் விட்ட இடத்தை பிடித்தாரா? பார்ப்போம். ஜீவா மாயவரத்தில் கேபிள் ரிவி வைத்து தன் தங்கையுடன் வாழ்ந்து வருகிறார். தங்கை கர்ப்பமாக இருக்க அவரை உள்ளங்கையில் வைத்து தாங்குகின்றார்.

இந்நிலையில் ஊரில் எம்எல்ஏ செய்யும் கெட்ட வேலைகளை ஜீவா தன் கேபிள் சனல் மூலம் வெளியே கொண்டு வர, எம்எல்ஏ ஒரு கட்டத்தில் ஜீவாவை கொல்ல முயற்சி செய்கிறார். அதற்காக சென்னையில் உள்ள மல்லி என்பவரை அழைக் கின்றார். மல்லி ஜீவாவைத் தேடி மாயவரம் வர, அங்கு ஜீவா தங்கச்சிக்கு மல்லி உதவ, அன்றிலிருந்து ஜீவா மல்லியைத் தன் நண்பனாக நினைக்கின்றார்.

அவரைத் தேடி ஜீவா சென்னை வர, அப்போது தான் தெரிகின்றது மல்லி உயிருக்கு ஒரு பெரிய ஆள் மூலம் ஆபத்து என்று ஜீவாவிற்கு தெரிய வர, அதன் பிறகு மல்லியை ஜீவா காப்பாற்றினாரா? அந்தப் பெரிய ஆள் யார்? என்பதே அடுத்தடுத்த காட்சிகள்.

ஜீவா நீண்ட இடைவேளைக்குப் பிறகு நல்ல துறுதுறுவென கச்சேரி ஆரம்பம், சிங்கம் புலி படம் போல் நடித்துள்ளார். அதிலும் தன் தங்கையிடம் பாப்பா பாப்பா என்று பேசுகையில் எமோஷனல் சீனிலும் திருப்பாச்சி விஜய் போல் ஸ்கோர் செய்கின்றார்.

தன் வழக்கமான கலாய் ஸ்டைலிலும் எனக்கே சென்னை லாங்குவேஜா, நீ காமெடி பண்ணா சிரிப்பே வரமாட்டுது மச்சி என்று சதீஷை கலாய்ப்பது என பழைய ஜீவாவின் அதே கலகலப்பு. வருண் மல்லியாக கலக்கியுள்ளார். அவர் இதுவரை நடித்த படங்க ளிலேயே இது தான் நல்ல அழுத்தமான கதாபாத்திரம் என்று சொல்லி விடலாம்.

ஆனால், மல்லி பக்கம் கதை செல்லாமல் வேறு திசைக்கு இரண்டாம் பாதியில் சென்றது தான் திரைக்கதை கொஞ்சம் தடுமாற்றம். ரத்னசிவா மாஸ் காட்சிகளை ஏதோ விஜய், அஜித் படத்திற்கு வைப்பது போல் வைத்து மிரட்டியுள்ளார். ஜீவாவிற்கும் அது செட் ஆகிப்போகின்றது. அதிலும் ஒரு போனுக்காகக் காத்திருக்கும் காட்சி ஒன்று பொறி பறக்கின்றது.

அதே நேரத்தில் அப்படியே மாஸாகவும் தங்கச்சி சென்டிமென்ட் எமோஷனல் என கொண்டு சென்று இருந்தால், கண்டிப்பாக இது சரியான கமர்ஷியல் பேக்கேஜ் ஆகியிருக்கும். ப்ளாஸ்பேக் காட்சிகள் நன்றாக இருந்தாலும், அதுவே இரண்டாம் பாதி முழுவதையும் ஆக்கிரமித்தது போல் ஒரு தோற்றம் உருவாகிவிட்டது.

இன்னமும் எலியும், பூனையுமாம் வில்லனுக்கும், ஜீவாவிற்கும் ஆட்டம் இருந்திருக்க வேண்டாமா ரத்ன சிவா என கேட்க வைக்கின்றது. வில்லனாக நவதீப், பெரிதும் கவரவில்லை, கத்தி படத்தில் வந்த நீல்நிதின் முகேன் போல் தான்.

படத்தின் பெரிய பலம் டி.இமானின் பின்னணி இசை, பாடல்கள் இமான் ஸ்டைலில் கேட்டதும் கவரவில்லை என்றாலும், கேட்க கேட்க பிடிக்கும் ரகம், ப்ரசன்னா குமாரின் ஒளிப்பதிவில் செட் எது, ரியல் எது என்றே தெரியவில்லை. மிக தத்ரூபமாக பல காட்சிகளை படப்பிடித்துள்ளார். விறுவிறு என சென்ற கதையில் ப்ளாஸ்பேக் மட்டும் எடிட்டர் கிஷோர் லாரன்ஸ் கொஞ்சம் கத்திரி போட்டு இருக்கலாம். ஆனால், அது கதைக்கு தேவை என்பதால் அவரால் எதுவும் செய்யமுடியாத நிலையாகத் தான் இருக்கும்.

கலகலப்பான அதிரடியான ஜீவா நடிப்பு, மல்லி கதாபாத்திரத்தில் வந்த வருண் நடிப்பு, படத்தின் முதல் பாதி மற்றும் ப்ளாஸ்பேக் தொடங்கும் வரை காட்சிகள் விறுவிறுப்பாக செல்கின்றது.

டி.இமானின் பின்னணி இசை, தங்கச்சி சென்டிமென்ட் நன்றாக ஒர்க் அவுட் ஆகியுள்ளது. இரண்டாம் பாதியில் கொஞ்சம் தடுமாறும் திரைக்கதை. அவ்வளவு பெரிய வில்லன் ஒரு துப்பாக்கி கூட இல்லாமல் 20 ரவுடிகளை வைத்துக்கொண்டு சுற்றுவது என கொஞ்சம் லாஜிக் மீறல்கள். மொத்தத்தில் சீறு கமர்ஷியல் பட விரும்பிகள் கண்டிப்பாக ஒரு முறை பார்க்கலாம்.




# ஒரே ஷொட் ஒரே பொயின்ட் ஆட்டம் மாறியது

**“கடந்த அவுஸ்திரேலிய ஓப்பன் பைனலில் நடாலை ஜோகோவிச் வென்ற விதத்தை இன்னமும் டென்னிஸ் ரசிகர்கள் வியப்புடன்தான் பார்க்கின்றனர். ஆனால், இரண்டு செட்கள் பின் தங்கி பின்பு வெகுண்டெழுந்து கோப்பையை ஜோக்கோவிச் வெல்வது இதுவே முதல் முறை.**



அவுஸ்திரேலியாவின் டொமினிக் தீமை வீழ்த்தி செர்பியாவின் நோவக் ஜோக்கோவிச் தன்னுடைய 17 ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளார். அவுஸ்திரேலிய ஓப்பன் கோப்பையை எட்டாவது முறையாக வென்று. அந்தக் கோப்பை அவரின் கைகளில் தவழும் நொடியில் ரஃபேல் நடாலைப் பின்னுக்குத் தள்ளி உலகின் நம்பர் 1 வீரராகவும் ஆகியிருக்கிறார்.

ஜோகோவிச் தீமுடன் மோதிய கடந்து ஐந்து ஆட்டங்களீல் தீம் நான்கு போட்டிகளில் வெற்றி பெற்றிருந்தார். இதற்கு முன் ஃப்ரெஞ்ச் ஓப்பன் அரையிறுதியில் மோதியபோது தீம் ஜோகோவிச்சை வீழ்த்தியிருந்தார். இந்தத் தொடரிலும் காலிறுதியில் நடாலை வீழ்த்தியிருந்தார் தீம். தற்போதுள்ள வீரர்களிலேயே கிரவுண்ட் ஷொட்டில் அதிவேகமாக அடிக்கக் கூடிய வீரர் தீம்தான். அவரின் ஃபோர்ஹேண்ட் ஷொட்டின் சராசரி வேகம் 132 கி.மீ. ஃபெடரரை போல் ஒரு கையில் பேக்ஹேண்ட் ஷொட் ஆடக்கூடியவர். அதன் சராசரி வேகமும் 119 கி.மீ. கிட்டத்தட்ட இவரை ஆன்டி-ஜோகோவிச் என்றே சொல்லலாம்.

ஜோகோவிச்சின் பலத்தை உடைத்து எறிவதற்கான அத்தனை விடயமும் இவரிடம் இருந்தது. இரண்டாவது மற்றும் மூன்றவது செட்டில் இவர் ஆடிய விதம் மிக அற்புதமாக இருந்தது. பந்தை கோர்ட்டில் ஜோகோவிச் போலவே ஓடி ஓடி எடுப்பதாகட்டும் ஃபோர்ஹேண்ட் ஷொட் ப்ளேஸ்மென்ட் ஆகட்டும்... மிகச்சிறப்பாக ஆடினார். இந்தத் தொடரில், இரண்டாம் சுற்றிலிருந்து எல்லா போட்டிகளையும் நேர் செட்களில் வென்ற ஜோகோவிச் இம்முறையும் அப்படியே வெல்வார் என எதிர்ப்பார்க்கப் பட்டபோது தீம் சிறப்பாக ஆடி ஆட்டம் ஐந்தாவது செட் வரை பரபரப்பாக செல்லக் காரணமானார்.

இருந்தும் இந்த ஆட்டம் டென்னிஸ் ரசிகர்களுக்குப் பெரிய விருந்தாக அமைந்ததா? என்றால் இல்லை என்பதே பெரும்பாலானவர்களின் பதிலாக இருக்கும். இருவரும் சேர்ந்து மொத்தம் 114 அன்ஃபோர்ஸ்ட் எரர்ஸ். 10 டபுள் ஃபால்ட்ஸ் என இருவரும் தங்களின் முழுத்திறனையும் வெளிப்படுத்தவில்லை. அதிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது செட்டில் ஜோகோவிச் ஆடியதைப் பார்க்கும்போது "ஜோ கோவிச்சா இது?" என்ற கேள்வி எழத்தான் செய்தது.

இரண்டாவது செட்டில் ஜோகோவிச் டபுள் போல்ட் செய்து சர்வை இழந்தார். சர்வ் செய்ய அதிக நேரம் எடுத்துக்கொண்ட காரணத்தினால் ஒருமுறை எச்சரிக்கை கொடுக்கப்பட்டு மீண்டும் நேர விரயம் செய்து முதல் சர்வ்வை இழக்கவும் நேரிட்டது. பேக்ஹேன்ட் ஷொட் எல்லாம் நெட்டில் விழுகிறது, ப்ளேஸ்மென்ட் மிஸ் செய்கிறார். அப்போதே புரிந்தது ஜோக்கோவிச் நார்மலாக இல்லை என்று. எந்தச் சூழ்நிலையிலும் நிதானமாக எதிராளியின் உளவியலை அறிந்து அதன்படி தன்னுடையை ஆட்டத்தை வெளிப்படுத்தும் ஜோகோவிச் அந்த இரண்டு செட்களில் உளவியல் ரீதியாகவும் சரி, உடல் ரீதியாகவும் சரி மிகவும் சோர்வாகக் காணப்பட்டார். எப்போதும் எதிராளியை தவறு செய்ய் விட்டு பொயின்ட்களை எடுக்கும் ஜோக்கோவிச் இன்று அவரே நிறைய தவறு செய்தார். முதல் செட்டில் 3 தவறு செய்தவர், அடுத்த இரண்டு செட்களில் 36 தவறுகள் செய்தார். முதல் செட்டைக் கைப்பற்றிய ஜோகோவிச் இரண்டாவது மற்றும் மூன்றாவது செட்டை 6-4. 6-2 என இழந்து தோல்வியின் விளிம்பில் இருந்தார்.

இதே ஆட்டிட்யூடை கடந்த விம்பிள்டன் பைனலிலும் பார்த்திருப்போம். பெடரின் சர்வில் இரண்டு சம்பியன்ஷிப் பொயின்ட்களை ப்ரேக் செய்து கோப்பையை வென்று அசத்தினார்.

அங்கேயும் ஒரு ஷொட்டில் ஆட்டம் மாறிப் போனது. இம்முறையும் முதல் செட்டை வென்று அடுத்த இரண்டு செட்களையும் இழந்து தடுமாறிக் கொண் டிருந்தார்.

சம்பியன்களின் சுபாவமே நெருக்கடியான நேரங்களை சமாளித்து மீண்டு வருவதுதானே. நெருக்கடியான சமயத்தில் மனதளவில் எப்படி தயாராக இருக்க வேண்டும் என்பதை நன்கு அறிந்தவர் ஜோகோவிச்.

"ஒரு பொயின்ட் அல்லது ஒரு ஷொட்தான் எனக்கும் தீமுக்குமான வித்தியாசம்" என ஆட்டம் முடிந்ததும் ஜோகோவிச் சொன்னார். உண்மைதான்.

ஒரு ஷொட் ஆட்டத்தை ஒருவரிடமிருந்து பறித்து விடும். தன்னம்பிக்கையை ஒருவருக்கு உயர்த்தி மற்றொருவருக்கு அளித்துவிடும்.

ஜோகோவிச் ரசிகர்களுக்கும் தெரியும், ஜோக்கோவிச்சுக்கும் தெரியும் ஒரு ஷொட், ஒரே ஒரு நல்ல ஷொட் ஜோகோவிச்சை மீண்டும் ஆட்டத்துக்குள் கொண்டுவந்து விடும் என்று. அவர்கள் எதிர் பார்த்தபடியே அந்த ஷாட் அமைந்தது. நான்காவது செட்டில் 3 ஆவது கேமில் தீமின் சர்வை ஒரு அற்புதமான பேக்ஹேண்ட் வின்னர் மூலம் ப்ரேக் செய்கிறார்.

ப்ரேக் செய்து விட்ட ரசிகர்களிடம் ஒரு பார்வையை விடுகிறார். அந்த ஷொட், அந்தப் பார்வை சொல்லிவிட்டது. ஜோகோவிச் மீண்டும் ஆட்டத்துக்குள் நுழைந்துவிட்டார்.

கடைசி இரண்டு செட்டிலும் ப்ரேக் பொயின்டை ஜோகோவிச் சேவ் செய்த விதமே வித்தியாசமாகத்தான் இருந்தது.

நெட் ப்ளே பெரிதாக விரும்பாமல் பேஸ்லைனிலேயே ஆடும் ஜோகோவிச் இரண்டு ப்ரேக் பொயின்ட்களையும் சர்வ் செய்து நெட் அருகே சென்று வாலி ஆடி வெற்றிபெற்றார்.

ப்ரேக் பொயின்ட், செட் பொயின்ட் போன்ற முக்கியமான பொயின்ட்களில் எல்லோரும் தங்களின் பலத்தையே முன்னிலைப்படுத்தி அதையே பின்பற்றுவர். ஆனால், ஜோகோவிச் அதை உடைத்தெறிந்து அதில் வெற்றியும் கண்டார். ஜோகோவிச் அட்டாக் செய்தார்!

ராட் லாவரில் புகழ் பெற்ற வாசகம் ஒன்று இருக்கும். "நீங்கள் முன்னிலையில் இருக்கும் சமயம்தான் உங்கள் ஆட்டம் பெரிதாக பாதிக்கப்படக் கூடும்."


அந்த வாசக்ம் அன்றும் டொமினிக் தீமிற்கு உண்மையானது. இரண்டு செட்கள் வென்று முன்னிலையில் இருந்த தீம் தடுமாறி ஜோகோவிச்சிடம் ஆட்டத்தைப் பறிகொடுத்தார்.

இரண்டாவது மற்றும் மூன்றாவது செட்டில் தீமின் போர்ஹேண்ட் ஷாட்டில் இருந்த துல்லியம் விலகி பல ஷாட்கள் அவுட்டாக சென்றது.

இப்போது தவறு செய்யாத முழு பலத்துடன் இருக்கும் ஜோகோவிச் அதை பயன்படுத்தி கோப்பையை வென்றார்.

அவுஸ்திரேலிய ஓப்பனை ஜோகோவிச் வெல்வது ஒன்றும் புதிதல்ல. ராட் லாவர் மைதானம் ஜோக்கோவிச்சின் கோட்டை.

# நன்றி மறப்பது நன்றன்று



வீடு வீடாகப் பொருட்களை விநியோகிக்கும் அந்தச் சிறுவனுக்கு ரொம்பப் பசித்தது. எதையாவது வாங்கி சாப்பிடலாம் என்றால் அவனிடம் பணமே இல்லை. அருகில் இருந்த வீட்டில் ஏதாவது சாப்பிடக் கேட்கலாம் என நினைத்தான். கதவைத் தட்டினான். ஒரு பெண் கதவைத் திறந்தாள். அவனுக்கோ சாப்பாடு கேட்க ரொம்பக் கூச்சம்.

"கொ... கொஞ்சம் தண்ணீர் கிடைக்குமா?" தயக்கத்துடன் கேட்டான். அவள் சிறுவனின் கண்களில் இருந்த பசியைக் கவனித்தாள்.உள்ளே போய் ஒரு கப் பால் கொண்டு வந்து கொடுத்தாள். பாலைக் குடித்துப் பசியாற்றிய சிறுவன் கேட்டான். "நான் எவ் வளவு கடன்பட்டிருக்கேன்?"

"கடனா? அப்படியொன்றுமில்லை. அன்பான செயலுக்கு விலை இல்லை என அம்மா சொல்லியிருக்கிறார்.."அவள் சிரித்துக் கொண்டே சொன்னாள்.

"ரொம்ப ரொம்ப நன்றி..." சிறுவன் புன்னகையுடன் கடந்து சென்றான். ஆண்டுகள் கழிந்தன. அந்த சிறுவன் நகரிலேயே பெரிய டாக்டர் ஆனான். அந்த பெண்ணுக்கோ ஒரு கொடிய நோய் வந்தது. அவர் பணியாற்றிய வைத்தியசாலையிலேயே அவளும் அனுமதிக்கப்பட்டிருந்தாள். அந்த டாக்டரிடமே அவளுடைய பரிசோதனை வந்தது. மெடிக்கல் ரிப்போர்ட்டில் அந்தப் பெண்ணின் ஊரைப் படித்ததும் அவருக்குள் சின்ன மின்னல். விரைவாக அறைக்குப் போய் அந்தப் பெண்ணைப் பார்த்தார். அவளே தான். தனது பசியாற்றிய நல்ல உள்ளம் படைத்தவள்.

அன்று முதல் தனது அத்தனை உழைப்பையும் செலுத்தி அவளுக்கு சிறப்பான சிகிச்சை அளித்தார். நீண்ட சிகிச்சைக்குப் பின் அவள் குணமானாள். பல இலட்சங்கள் செலவாகின. வைத்தியசாலை அந்தப் பெண்ணுக்கு ஒரு நீண்ட பில்லை அனுப்பியது. இதை எப்படிக்கட்டப் போகிறேனோ எனும் பதற்றத்துடன் அதைப் பிரித்த அவள் திகைத்துப் போனாள்,

அந்த பில்லின் கடைசியில் எழுதப்பட்டிருந்தது. "ஒரு கப் பாலில் உங்கள் கடன் எல்லாம் தீர்க்கப்பட்டுவிட்டது. இது நன்றி சொல்லும் நேரம்." அவளுடைய கண்கள் கசிந்தன..

# சிரிப்பதற்கு

தமிழரும் அமெரிக்கரும் ஒரு சொக்லெட் கடைக்குள் நுழைந்தனர்.அனைவரும் பிஸியாக இருந்த நேரம் அமெரிக்கர் 3 சாக்லெட் பார்களை யாருக்கும் தெரியாமல் எடுத்து தனது பொக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டார். சிறிது நேரம் கழித்து இருவரும் கடைக்கு வெளியே வந்தனர்.

அமெரிக்கர் தான் யாருக்கும் தெரியாமல் எடுத்த 3 சொக்லெட் பார்களையும் தனது பொக்கெட்டிலிருந்து வெளியே எடுத்து தமிழரிடம் காட்டி."நாங்கெல்லாம் யாரு! அப்பவே நாங்க அப்படி..! பார்த்தியா யாருக்கும் தெரியாம 3 சொக்லெட் பார்களை எடுத்து கொண்டு வந்துட்டேன்பார்த்தியா?.. என்று பெருமைப்பட்டார்.

விடுவாரா தமிழர் !!.. உள்ள வா. உனக்கு உண்மையான திருட்டுன்னா என்னன்னு காட்டுறேன்னு சொல்லி அமெரிக்கரை சாக்லெட் கடையின் உள்ளே அழைத்துச் சென்றார்.

விற்பனை கவுண்டரில் இருந்த பையனிடம் சென்ற தமிழர் அவனிடம் கேட்டார். வித்தை காட்டுறேன் பார்க்கிறியா?..பையனும் சரியென்று தலையாட்ட கவுண்டரில் இருந்து மூன்று சொக்லெட் பார்களை எடுத்து. தின்று முடித்தார். கவுண்டரில்இருந்த பையனை ஏறிட்டுப் பார்த்தார்.

கவுன்டரில் இருந்த பையன் கேட்டான். " எல்லாம் சரி. இதில் வித்தை எங்கே இருக்கிறது?." தமிழர் அமைதியாக பதில் அளித்தார். " என் ஃப்ரெண்டோட பொக்கெட்ல செக் பண்ணிப்பாரு. நான் சாப்பிட்ட 3 சொக்லெட் பாரும் இருக்கும்."!!!!

# அனுசரித்து வாழ்ந்தால்...

எங்களோட 2 பிள்ளைங்களும், ஒரு மகளும் கல்யாணம் பண்ணி தனித்தனியா இருக்கிறதாலே....நாங்க தனியா எங்க வீட்லே இருந்தோம்...என் கணவனுக்கு துரதிர்ஷ்டவசமா நீரிழிவு, இரத்தக்கொதிப்பு நோய்கள் இருந்திச்சு...தினமும் மருந்து சாப்பிடணும். அவங்க அவ்வளவு திடகாத்திரமா இல்லாததாலே நான் தான் அவங்களை முழுமையா கவனிச்சிக்கிட்டேன்....!

இப்ப அவங்க இல்லை.....!நான் ரொம்ப தனிமையை உணர்கிறேன்...என் பகல்கள் ரொம்ப நீளமாயிடுச்சு, இரவுகள் ரொம்பவும்



வெறுமையாயிடுச்சு..!!அவங்களோட ஒவ்வொரு பொருளும் அவங்களை எனக்கு நினைவுபடுத்திகிட்டே இருக்கு....!

அவங்க சாப்பிட்டு முடிக்காத மீதமுள்ள மருந்துங்ககூட என்னைக் கவலைப்படுத்துது....!அவங்க **handphone** நம்பர் இருக்கு.! ஆனா நான் அழைச்சா இனி பேச மாட்டாங்க,...!

**whatsApp** பண்ணா படிக்கமாட்டாங்க...!முன்னே என் படுக்கையிலே ஒரு பக்கம் நானும் மறுபக்கம் அவங்களும் படுத்திருப்போம்...! இப்ப நான்அதே படுக்கையிலே நடுவில தனியா படுத்திருக்கேன்... !சமையலறைக்குத் தனியா போறேன், ! சமையல்ன்னு பேர்ல எதையோ பண்றேன், !

வாய்க்கு ருசியா சமைச்சு பகிரஅவங்க இல்லை.!..கோயிலுக்கு இப்ப ஒன்னா போக அவங்க இல்லை...!விழியோரம் நீர் தேங்க.., அதான் மகளே, அவங்க இருக்கும்போதே அவங்களை அதிகமாக நேசிக்கணும்..,! அதிகமாக போற்றணும்....!!!கணவனின் வெற்றியோ தோல்வியோ,!பெருமையோ அவமானமோ...!!! இலாபமோ...நட்டமோ...மனைவிக்கு அனைத்திலும்..சம பங்கு உண்டு...!

(தொடரும்)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1971


### சேயோன்

நாம் எவ்வளவு கொடுக்கிறோம் என்பது முக்கியம் அல்ல... அதை நாம் எவ்வளவு அன்பாகக் கொடுக்கிறோம் என்பதுதான் முக்கியம்




### பார்கவ்

கடவுள் சிலவற்றை தாமதமாகக் கொடுத்தாலும் தரமானதாகக் கொடுப்பார்... சோர்ந்து போகாதே



### வினோத்

இல்லாத விடயங்களுக்காக வருத்தப்படுவதை விட்டுவிட்டு இருக்கும் விடயங்களுக்காக நன்றி சொல்லிப் பாருங்கள் நீங்கள் நினைப்பதை விட உங்கள் வாழ்க்கை சந்தோசமாக மாறும்



### சஞ்சீவ்

சுட்டுவிடும் எனத் தெரிந்தும் சூடாக இருக்கும் டீயை குடிப்பதில் காட்டும் நிதானம்தான் வாழ்க்கையின் தத்துவம்




### குமணன்

நம்மை அலட்சியமாக நினைப்பவர்களை விட்டு துணிந்து விலகுங்கள். நம்மைப் பொக்கிஷமாக நினைப்பவர்கள் இருப்பார்கள் உலகில்



### ஆதீஷ்

நினைவு என்பது கடவுள் கொடுத்த சாபம் மறதி என்பது கடவுள் கொடுத்த வரம் இது இரண்டும் கலந்ததே நம் வாழ்க்கை




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 210

# அஸ்மா/ஆஸ்துமா (Asthma)



● சாதாரணமாக இது அஸ்மா, ஈளை, தொய்வு அல்லது முட்டு என அழைக்கப்படுகின்றது.


● இது ஒரு வகையான ஒவ்வாமை (Allergy) காரணமாக ஏற்படும் நோயாகும்.

● ஒவ்வாமையின் போது ஏற்படும் ஒருவகையான அழற்சியானது சுவாசக் குழாய்களையும், சுவாசப்பை நுரையீரல் சிற்றறைகளையும் பாதிப்பதால் சுவாசக்குழாய்கள் அசாதாரணமாக சுருங்குவதுடன், அதிகளவு சளித்திரவமும் சுரக்கப்படுகின்றது. இதனால் உட்சுவாசத்தின் போது உள்ளே இழுக்கப்படும் காற்றை வெளிவிடுவதில் பிரச்சினை ஏற்படுகின்றது.

● பொதுவாக இந்நோயின் தாக்கம் உலகளாவிய ரீதியில் எல்லா இடங்களிலும் பரவிக் காணப்படுகிறது.

● சிறுவர்கள் முதல் பெரியவர்கள், வளர்ந்தவர்கள் மற்றும் முதியவர்கள் வரை எல்லா வயதினரும் இந்நோயால் பாதிக்கப்படலாம்.

● இது ஒருவரில் இருந்து இன்னொருவருக்கு தொற்றக்கூடிய நோய் அல்ல.




### அஸ்மா நோய் ஏற்படுவதற்கான காரணங்கள்

● ஒவ்வாமை (Allergy) - பொதுவாக சில உணவு வகைகள் , குளிர்காலம், குளிரூட்டப்பட்ட அறைகள் (Air Cordition) மற்றும் புழுதி, புகை நிறைந்த இடங்கள் என்பன ஒவ்வாமையை ஏற்படுத்தலாம்.

● பரம்பரை அலகுகள் - அஸ்மா நோயானது பரம்பரை பரம்பரையாகவும் கடத்தப்படக்கூடியது. இதனால் ஒரு குடும்பத்திலுள்ள பலர் அஸ்மாவால் பாதிக்கப்படலாம்.

● சில மருந்துகள் - சிலவேளைகளில் அஸ்பிரின் (Aspirin) மற்றும் NSAIDS என அழைக்கப்படும் நோவுக்குப் பயன்படுத்தும் மருந்துகளும் B-blockers என அழைக்கப்படும் மருந்துகளும் அஸ்மா நோய் ஏற்படக் காரணமாகலாம்.

● மனவெழுச்சி நிலை (Emotion) - அஸ்மா நோய் உள்ள ஒருவருக்கு மன அழுத்தம் அதிகமாக இருக்கும் போது அஸ்மாவின் தாக்கமும் அதிகமாக இருக்கும்.

### அஸ்மா நோயின் அறிகுறிகள்

● மூச்சு விடுவதில் கடினம் - விசேடமாக உள்ளே இழுக்கப்படும் உட்சுவாசத்தை வெளியேற்றுவது மிகவும் கடினமாக இருக்கும்.

● இருமல்

● Wheeze - சாதாரணமாக வீசிங் (wheezing) என அழைக்கின்றனர். அதாவது மூச்சு விடும்போது ஒரு விதமான ஒலி ஏற்படும். இவை முக்கியமான அறிகுறிகளாகும். பொதுவாக இவ்வறிகுறிகள் இரவிலோ அல்லது அதிகாலையிலோ அதிகமாக இருக்கும். பகலில் இவை குறைவாக இருக்கலாம்.

● சிலவேளைகளில் மூச்சுக் கடினத்துடன் நெஞ்சை இறுக்கி வலியும் ஏற்படலாம்.

● பலருக்கு அடிக்கடி தடிமன் ஏற்படுதல், தொடர்ச்சியான தும்மல் என்பன அஸ்மா ஏற்படுவதற்குரிய ஆரம்ப அறிகுறிகளாக இருக்கலாம்.

● அஸ்மா நோய்த்தாக்கத்தின் போது சுவாசப்பையில் கிருமித்தாக்கம் ஏற்பட்டு நியூமோனியா (Pneumonia) காய்ச்சல் கூட சிலருக்கு ஏற்படலாம்.

இவ்வாறான அறிகுறிகளுடையவர்கள் ஒரு வைத்தியரின் ஆலோசனையை ஆரம்பத்திலேயே பெற்றுக் கொள்வது நல்லது.

### அஸ்மா நோய்க்கான சிகிச்சைகள்

● சாதாரணமாக இந்நோயை தீர்க்க முடியாது. ஆனால் சிகிச்சை மூலம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும்.

● ஒவ்வாமைக்குரிய காரணிகளை கண்டறிந்து அவற்றை முற்றாக அகற்றுவதே இதை தடுப்பதற்கான முதல் முறையாகும்

● அத்துடன் வாழ்க்கை முறையில் ஏற்படும் மாற்றங்கள், மூச்சுப் பயிற்சி, உடற்பயிற்சி, தியானம் என்பனவும் அஸ்மாவை கட்டுப்படுத்த உதவும்.

● அஸ்மா மிக அதிகமாக இருக்கும் போது நெபுலைசர் (Nebulizer) மூலமாகவே மருந்து வழங்கப்பட்டு சுவாசம் இலகுவாக்கப்படும். பொதுவாக இது வைத்தியசாலையிலேயே வழங்கப்படுகிறது. ஆனால் அடிக்கடி அஸ்மாவினால் பாதிக்கப்படும் நோயாளிகள் Nebulizer ஐ வாங்கி வீட்டிலும் பாவிக்கலாம்.

● அடுத்து, பல வகையான உறிஞ்சிகள் அல்லது Inhalers மிகவும் இலகுவாக அஸ்மாவை கட்டுப்படுத்த பரிந்துரைக்கப்படுகின்றன. சாதாரணமாக இவை 'பம்' என அழைக்கப்படுகின்றன. இவை மருந்தை நுரையீரல் சார்ந்த பகுதிகளுக்கு இலகுவாகவும் விரைவாகவும் எடுத்துச்செல்வதால் மருந்து விரைவாகத் தொழிற்பட்டு சுவாசம் இலகுவாகின்றது.



● ஆனால் பலருக்கு Inhaler பாவிப்பதால் பல பாதிப்புக்கள் ஏற்படும் என்கின்ற பிழையான கருத்து இருக்கின்றது. உண்மையில் Inhalers இனால் ஏற்படுகின்ற பக்கவிளைவுகள் மிக மிக குறைவாகும். அத்துடன் சிறுவர்கள் முதல் கர்ப்பிணித் தாய்மார், முதியவர்கள் வரை இலகுவாக பாவிக்கக் கூடிய பல வகையான Inhalers இன்று எல்லா இடங்களிலும் கிடைக்கின்றன.

● அத்துடன் கடுமையான அஸ்மா ஏற்படும் போது Prednisolone எனப்படும் குளிசையும் சில நாட்களுக்கு வழங்கப்படுகிறது. சில வேளைகளில் கிருமித்தொற்று இருந்தால் Antibiotics உம் வழங்கப்படலாம்.

● மேலும் அஸ்மா நோயின் தீவிரத்தன்மைக்கு ஏற்ப சில நோயாளிகளுக்கு வேறு சில வகையான குளிசைகளும் வழங்கப்படலாம்.

### அஸ்மாவை கட்டுப்பாட்டில் வைத்திருக்காவிடின் ஏற்படும் பாதிப்புக்கள்

● ஒருவர் சாதாரண வாழ்வை வாழ முடியாது. அவரது வாழ்க்கைத்தரம் (Quality of life) பாதிப்படையும்.

● அடிக்கடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட நேரிடும். சிலவேளைகள் மிகவும் தீவிரமாக அஸ்மா ஏற்படும் போது அதிதீவிர சிகிச்சைப் பிரிவிலும் (ICU) அனுமதிக்கப்படலாம்.

● சில சந்தர்ப்பங்களில் உயிரிழப்பும் ஏற்படலாம்

● மிகவும் முக்கியமாக நீண்ட காலத்துக்கு அஸ்மா கட்டுப்பாட்டில் இல்லாதிருப்பின் நோயாளியின் சுவாச நாடிகளில் குருதியமுக்கம் அதிகரிக்கிறது. Pulmonary Hypertension என்னும் நிலை உருவாகலாம். இதைக் கட்டுப்படுத்துவதோ அல்லது குணப்படுத்துவதோ மிகவும் கடினமாகும். அதன் தொடர்ச்சியாக நோயாளியின் இதயத்தொழிற்பாடு நாளடைவில் குறைவடைந்து இதய செயலிழப்பு (Heart failure ) ஏற்படும்.

● எனவே அஸ்மா நோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து ஒவ்வாமை காரணிகளை அகற்றுவதாலும் சரியான மருத்துவ ஆலோசனைக்கு அமைய மருந்துகளை பாவிப்பதன் மூலமும் இந் நோயை இலகுவாக கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

Dr.பாக்கியரெத்தினம் மயூரதன்
பொது வைத்திய நிபுணர்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (076 059 4937) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**